
சுக்ரஸ்தலம் கஞ்சனூர்
ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயில்,
ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயம்

கஞ்சனூர் ஸ்தல மஹிமை

(கஞ்சனூர் மஹான் ஹரதத்தர் மகத்துவங்களுடன்)

சனூருக்கு வந்தேகிய கயிலாய மஹாபுஷ்பக விமானம்



சிறுவன் ஹரதத்தருக்கு மானுட வடிவில் இறைவனே முப்புரி நூல் சார்த்தும் அனுபூதி

சத்குரு ஸ்ரீவேங்கடராம சுவாமி

ஸ்ரீஹரதத்தருக்கான ஒராண்டு விமுக்தி பூஜை ஆராதனைக் காலம்:
விளம்பி தமிழ் ௵ தை ௴ சுக்ல பஞ்சமி முதல் விகாரி தமிழ் ௵
தை சுக்ல பஞ்சமி வரை - 9.2.2019 சனிக்கிழமை முதல் 29.1.2020
புதன் கிழமை வரை

தினமும் ஜபிக்க வேண்டியது - ஆசானும் ஈசனும் இணைந்து ஓதிய அற்புதத் துதி







ஆசானும் (ஹரதத்தர்) ஆசானின் ஆசானும் ஈசனும் இணைந்து படைத்தருளிய
இரு வரி பஞ்சாட்சர பலாதிபல மந்திரத் துதி
"ஞானக்ஞான ப்ரயுக்தானும் பாபானும் மஹதாமபி
ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி கீர்தனுத் ..."
"அறிந்த வினையோ அறியா கர்மம்
எவ்வினை யாவும் அடியொடு தீரும்
அருதிருமார்கம் அறிவீர் உலகீர்
தனித்தொரு சித்தம் ஒருமனத் தொன்ற

உ

ஓம் ஸ்ரீவல்லப கணபதி துணை

ஓம் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி துணை

ஓம் ஸ்ரீகுருவே சரணம்

ஓம் ஸ்ரீசுசரித சரஸ்வதி துணை

NAMASIVAYA

SIVAYANAMA

SIVAYASIVA







SIVASIVA

ஆன்மீகத்தில் வழிவழியாய் வாழும் வழி

கஞ்சனூர் தலமஹிமை

(சுக்ரஸ்தலம்)

(ஸ்ரீஅக்னீஸ்வரர், ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயங்கள், மஹான் ஹரதத்தர் மகத்துவங்களுடன்)

சத்குரு ஸ்ரீவேங்கடராம சுவாமி

Title of the Book : KANJANUR STHALA MAHIMAI

Publisher : **SRI ATHI BHAGWATH AGASTHIA PUBLICATIONS PVT LTD.**
Chamber No.7, Sagaas Complex,
4, Sri Kapaleeswarar South
Mada Street,
Mylapore, Chennai 600 004.

Editor-in-chief : **SHRI. R.V. VENKATARAMAN**

Associate Editor : **Dr. Kalavathi Venkataraman**

Website : www.agnisiksha.org
www.agasthiar.org


Email : agasthiavedam@gmail.com

Price : : **Rs.20/-**

Printed by : **ABIJITH GURU PRESS**
Trichy - 3
Cell : 98421 39436

34-1

உ



குரு மஹாசந்நிதானம்

ஸ்ரீவேங்கடராம சுவாமிகளின் மாதா

ஸ்ரீமதி.**முத்து மீனாக்ஷி** அவர்கள் மனமுவந்து அளித்த ஆசியுரையின் தமிழாக்கம்

ஸ்ரீராமஜெயம்

என் மகன் வேங்கடராமன் பேசிய சொற்பொழிவுகள் அனைத்தையும் கேட்டுள்ளேன். அவன் பிறந்த போது நான் பெற்ற இன்பத்தை விட, அவன் ராமன், கண்ணன், நாராயணன், சக்தி, சிவன், முருகன், குரு இவர்களைப் பற்றிப் பேசும்போது மிக அதிக இன்பத்தைப் பெற்று விட்டேன். அனைவரும் **''கஞ்சனூர் ஸ்தல மஹிமை''** மற்றும் அனைத்து புத்தகங்களையும் படித்து வேங்கடராமனை ஆசீர்வதிக்கும்படி கேட்டு நான் அவன் தொண்டு உலகெங்கும் பரவ **ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி** திருவருளால் மனமார ஆசீர்வதிக்கின்றேன்.

இப்படிக்கு,

முத்து மீனாட்சி

✸ தினமும் இல்லம், கோயில், ஆலயவலம், தீர்த்தக்குளவலம், கிரிவலம், பௌர்ணமி, அமாவாசை, மாதசிவராத்திரி, கார்த்திகை தீபோத்சவ மலைவலம் போன்ற அனைத்து வழிபாடுகள், ஜபம், யோகம், தியானத்திலும், நாம சங்கீர்த்தனத்திலும் எந்த மலைவலத்திலும் நமசிவாய பஞ்சாட்சரத்தோடு ஓத வேண்டிய இறைத்துதி

✸ ஆசானும் ஹரதத்தரும், ஆசானின் ஆசானும் ஈசனும் இணைந்து படைத்தருளிய
இரு வரி பஞ்சாட்சர பலாதிபல மந்திரத் துதி
"ஞானுக்ஞான ப்ரயுக்தானும் பாபானும் மஹதாமபி
ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி கீர்தனுத் ..."

✸ "அறிந்த வினையோ அறியா கர்மம்
எவ்வினை யாவும் அடியொடு தீரும்
அருதிருமார்க்கம் அறிவீர் உலகீர்
தனித்தொரு சித்தம் ஒருமனத் தொன்ற
சிவத்திரு நாமஞ் ஜபித்திடல் வேணும்
அரசிவ நாமம் உருகிடப் பேணீர்!" ✸

உ

ஓம் ஸ்ரீவல்லப கணபதி துணை

ஓம் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி துணை

ஓம் ஸ்ரீகுருவே சரணம் ஓம் ஸ்ரீசுசரித சரஸ்வதி துணை

கஞ்சனூர் தலமஹிமை
(சுக்ரஸ்தலம்)
(ஸ்ரீஅக்னீஸ்வரர், ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயங்கள், மஹான் ஹரதத்தர் மகத்துவங்களுடன்)

கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயச் சிறப்பு

✸ தேவாரப் பாடல் பெற்றதும் சுக்கிர கிரஹக் கோயில் எனத் தற்போது பெரிதும் பிரசித்தி பெற்றுள்ளதுமான கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயில் மஹிமை சொல்லவும் பெரிதே. தற்போதுதான் சுக்ர ஸ்தலமாகப் பிரசித்தி பெற்றிருந்தாலும், பலரும் இதன் ஆதிவேத காலத் தொன்மையை அறியாதுளர். மஹாவிஷ்ணு, பிரம்ம மூர்த்தி, திருமகள், அக்னி மூர்த்தி, பிருகு மகரிஷி தவமிருந்து வழிபட்ட பழமையான ஸ்வயம்புச் சிவலிங்க மூர்த்தி. பிருகு மாமுனிவரே அசுரகுல குருவாகிய சுக்ராச்சாரியார்.

✸ ஓர் ஆலயத்தின் தெற்கு திசை கோபுரம் ராஜகோபுரமாக அமைவது மிகவும் அபூர்வமே. இவ்வாருன ஆலயத் தலங்கள் பிதுர் முக்தி க்ஷேத்திரமாகவும் சிறப்பதாம். கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தின் தெற்கு கோபுரம் ராஜகோபுரமாகத் துலங்குவதாலும், இங்கு காசி, மாயூரம் போன்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உத்தரவாகினி நதியாகக் காவிரி ஆறு (பிரம்ம தீர்த்தம்) பாய்வதாலும், பூவுலகின்

மகத்தான பிதுர் முக்தி க்ஷேத்திரங்களில் ஒன்ருகவும் கஞ்சனூர் சிறக்கின்றது.

✵ ஈஸ்வரன் - ஈஸ்வரனின் திருமணக் கோல தரிசனத்தை பிரம்ம மூர்த்தி பெற்ற தலமுமே கஞ்சனூர். சந்திர மூர்த்தி, அக்னி மூர்த்தி வழிபட்ட புண்யபூமி. ஞானவிருட்சம் எனப்படும் பலாஸ மரத்தை (புரசமரம்) தலவிருட்சமாகக் கொண்ட தலம்.

✵ சுதர்ஸன விஷ்ணுவின் அம்சமாகக் கஞ்சனூரில் சுதர்ஸனன் தோன்றி மஹான் ஹரதத்தராகப் பரிமளித்ததும் இத்தலபுராணத்தின் அங்கமாக மெருகூட்டுவதாம். மஹான் ஹரதத்தரின் பிரார்த்தனைக்கு ஏற்ப, அக்னீஸ்வரரின் நந்தி புல்லை உண்டது. ஒரு பாமர உத்தமரைப் பற்றிய கோஹத்தி தோஷம் அகல்வதற்கு 'புல் அருந்திய நந்தி' அருளிய இப்புனிதப் புராண வைபவமும் இங்கு உண்டு.

✵ கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தில் ஒரு தை மாதத்தின் மாதசிவராத்திரி நாளில் ஐந்து வயதுச் சிறுவனும் முன்னுல் அக்னீஸ்வரர், தட்சிணுமூர்த்தியாகக் காட்சி தந்து உபதேசம் அளித்து ஹரதத்தர் எனும் பெயரைச் சூட்டி சுதர்ஸனனை ஆட்கொண்டார். இதன் காரணத்தால் பூலோகத்தில் கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தில் மட்டுமே தட்சிணாமூர்த்தியின் திருவடியில் மஹான் ஹரதத்தரை தரிசிக்கலாம்.

✵ கலியுக மஹான் திருவிசநல்லூர் ஸ்ரீதர ஐயாவாள், சில நூற்ருண்டுகளுக்கு முன் திருவிடைமருதூர் ஆலய மூலமூர்த்தியாம் ஸ்ரீமஹாலிங்கத்தின்பால் ஜோதியாக

ஐக்கியமானது போல், சுக்ராச்சாரியாராகிய ஆகிய பிருகு மகரிஷி ஒரு தலத்தே இத்தலத்தில் கடுந்தவம் புரிந்து அக்னீஸ்வர லிங்கத்தில் ஜோதியாக ஐக்யமானுர்.

✵ திருச்சி - சமயபுரம் அருகே **ஊட்டத்தூர்**, குடந்தை அருகே **கோனேரிராஜபுரம்**, புதுக்கோட்டை - திருமயம் அருகே **பேரையூர்** போன்று கஞ்சனூர் சிவாலயத்தில் நடராஜருக்கு கல்சிலாவாக மூலவடிவம் தொடங்குகின்றது. இவரே வியாஸரின் பிதாவாம் பரசுராம மகரிஷிக்கு முக்தித் தாண்டவக் கோலம் காட்டி அருளிய நடராஜ மூர்த்தி. இன்னமும் எண்ணற்ற ஆலய மகத்துவங்கள் உண்டு.

✵ கும்பகோணம் - ஆடுதுறை - திருமங்கலம் அருகே உள்ள கஞ்சனூர்த் தலமானது பழமையான ஸ்ரீஅக்னீஸ்வரர் - கற்பகாம்பிகை சிவாலயம், மஹான் ஹரதத்தருக்கான தனிச் சன்னிதிக் கோயில், ஸ்ரீராஜநாராயண (மூலவர்: வரதராஜர்) பெருமாள் கோயில்களுடன் பொலிவதாம்.

✵ மஹாவிஷ்ணு தலைமையில் பிரம்மா, அக்னி மூர்த்திகளும், பிருகு முனிவரும் (சுக்ராச்சாரியார்) பூஜித்த பகுபுண்ய ஸ்தலம் கஞ்சனூர். கஞ்சம் என்ருல் பிரம்மா, பொன் என்றும் பொருள் தரும்.

பிருகு மாமுனிவரின் அருந்தவ பூமி கஞ்சனூர்

✵ ஆதியுகங்களில் பார்க்கவ ரிஷி எனும் பிருகு மஹரிஷி வழிபட்ட தலம் கஞ்சனூர். இந்த பிருகு முனிவரே பல யுகங்களிலும் அசுரகுல குருவாகிய சுக்ராச்சார்யாராக வருபவர். ஒவ்வொரு முனிவரும் ஒவ்வொரு யுகத்திலும் பற்பல சேவைகளை இறைஆணையாக ஆற்றி வருகின்றனர்.

✵ நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறு திருவிசநல்லூர் மஹான் ஸ்ரீதர அய்யாவாள் திருவிடைமருதூரில் ஸ்ரீமஹாலிங்கத்தினுள் ஜோதி வடிவில் உட்புகுந்து ஐக்யமானுரோ, இதே போல் ஆதியுகம் ஒன்றில் பிருகு மஹரிஷி தாம் திருமாலுக்குச் சாபம் இட்டதற்காகப் பெரிதும் வருந்தி, திருமாலுடன் சேர்ந்து கஞ்சனூர் தலத்தில் தவம் புரிந்து வழிபட்டு அக்னீஸ்வர லிங்கத்துள் ஜோதியாய் ஐக்யமானதாக ஐதீஹம். இதனுலும் கஞ்சனூர் சுக்ர ஸ்தலமாகப் போற்றப் பெறுவதாம்.

✵ மேலும் சிவா - விஷ்ணுவைப் பெரிதும் வழிபட்டு வந்த பிருகு முனிவரின் பத்னி மாதா, சுக்ராச்சாரியாரின் குடிலில் சரணடைந்த அசுரர்களிடம் பிருகு மஹரிஷி தவத்தில் இருந்து திரும்பும் வரையில் அசுர குலத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதாக வாக்களித்தார். ஆனுல் இந்த இடைக் காலத்தில் அசுரர்கள் எவரையும் துன்புறுத்தாது தவம், வழிபாட்டிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினுர்.

✵ கொடிய செயல்களைச் செய்து விட்டுத் தவக்குடிலில் மறைந்திருந்த அசுரர்களை மாய்ப்பதற்காக விரைந்த சுதர்ஸனச் சக்கரத்தால், அசுரர்கள் பலரும் மாய்ந்ததோடு பிருகு முனிவரின் பத்னியும் முதலில் சிரச்சேதத்திற்கு ஆளாயினுர். எனினும் ஜமதக்னி மஹரிஷியின் பத்னியாம் ரேணுகாதேவி போல் ஜீவசக்தியோடு பொலிந்தார். காரணம், பஞ்சமாதேவியரிடம் இருந்து தீர்க சுமங்கலித்வத்தை பிருகு பத்னியார் வரமாகப் பெற்றிருந்ததாகும்.

✵ இவை அனைத்தையும் அறிந்த மஹாவிஷ்ணு - பிருகு மஹரிஷி, பிருகு பத்னியின் தூய பக்தி, பரிசுத்தமான கற்புத் திறத்தை உலகிற்குப் புலப்படுத்துவதற்காகவும் - தீயோராயினும் ஆழ்ந்த

நம்பிக்கையுடன் குருவைச் சரணடைந்தால் குரு கடாட்சத்தால் திருந்தி வாழ்ந்து நற்கதியைப் பெற முடியும் என்ற பாடத்தை உலகச் சமுதாயாத்தார்க்குப் புகட்டவும் திருமால் இவ்வனுபூதியை நிகழ்த்தினர்.

✡ சுக்ராச்சாரியார் இமயமலேத் தவத்தை நிறைவு செய்து திரும்பினர். ஏற்கனவே மாண்டு போன அசுரர்கள் அனைவரையும் மிருத்யுஞ்ஜய மந்திர சக்தியாலும், அமிர்த சஞ்ஜீவினி மூலிகா சக்தியைக் கொண்டும் உயிர்ப்பித்தார். இதில் பிருகு பத்னியும் புனிதமான சிரசைப் பெற்று மும்மூர்த்திகளையும் வணங்கியமையாலும் சுக்ர ஸ்தலமாகத் திகழ்வதாம்.

✡ பிருகு மாமுனிவர் உலகத்தார் யாவரும் குருவை அடைவதற்காக சிவா, விஷ்ணு மூர்த்திகளைக் கஞ்சனூர் தலத்தில் ஆதியுகத்தில் பூஜித்தார். ஆகவே கஞ்சனூர் சுக்ர ஸ்தலமாகத் தற்காலத்தில் பிரசித்தி அடைவதற்கு முன்னரேயே தொன்மை யுகங்களில் திருமால், பிரம்மா, அக்னி, சந்திர மூர்த்திகள் தவமிருந்து வழிபட்டப் புனிதத்துடனும் ஒளிர்வது கஞ்சனூர் ஸ்தலம். சமீப காலத்தில் சுக்ரஸ்தலமாகப் பிரசித்தி பெற்றிருக்கும் கஞ்சனூரின் ஆதியாதி யுகந்தொட்டுத் திகழும் இத்தலத் தொன்மைச் சிறப்பை முதல் யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆமேவு பால் நீர் பிரிக்கும் அன்னம் போல் நல்லது, தீயது வகை பிரித்து வாழ்க!

✡ திருமூலரின் திருமந்திரமானது 'ஆமேவு பால் நீர் பிரிக்கும் அன்னம் போல் ... தாமேழ் பிறப்பெரி சார்ந்த வித்தாமே' எனும் பாசுரமானது - ஜீவ வாழ்வில் வினையைப் பிரித்து சுத்த ஆத்மாவைக் காணும் வழியைக் காட்டுவதாம்.

✡ நடப்புக் கலியில் பலரும் உடல் தூய்மையைப்

பேணினும் மனத்தூய்மை இல்லாது வாழ்கின்றனர். இதனால் அசுரத் தீயகுணங்கள், தீய எண்ணங்களொடு கலந்து வாழ்வதால் எவர் நல்லார், எவர் தீயோர் என வகையறியாது போகிறது. கண்ணால் பார்த்தோ, ஒருவர் செய்யும் செயல்களைக் கொண்டோ இவர் நல்லவரா என வகை அறிதலும் கடினம். கூடாநட்புதான் தீயதுக்கு மூலதனம். தீயோர் நட்பு கூடாது. இதனையே வள்ளுவப் பெருந்தகையும் 'மக்களே போல்வர் கயவர்' என்கிறார்.

✵ நல்ல சத்சங்கமே கூடாநட்புக்கு நல்மருந்து. தெளிந்த மனத்தோடு நல்ல உள்ளம் பூண்ட நல்லோரின் சத்சங்கத்தைப் பெற்றிடுவதற்கு எப்போதும் இறைநாமங்கள், இறைத் துதிகள், மந்திரங்களை ஓதியவாறு, ஜபித்தவாறு வாழ்ந்து வரப் பழக வேண்டும்.

கஞ்சனூர் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில் மஹிமை கண்ணபிரான் துவாரகை ராஜாவாக, ராஜநாராயணராகப் புரிந்த கிருஷ்ண லீலை

✵ கஞ்சனூரில் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயிலுக்குச் செல்வோர், இங்கு பழமையான ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில், ஸ்ரீஹரதத்தருக்கான தனிக் கோயில் இருப்பது பற்றி அறியாது தரிசிக்காது விட்டு விடுகின்றார்கள். இனியேனும் பலருக்கும் எடுத்துச் சொல்லி - கஞ்சனூரில் சுதர்ஸன விஷ்ணு அம்சமாகத் தோன்றிய மஹான் ஹரதத்தருக்கான விமுக்தி குருபூஜை நிகழும் விளம்பி தமிழ் வருடத் தருணத்தில் இருந்தேனும் வழிபடச் செய்திடவும்.

✵ தற்போது நவகிரஹத் தலங்களில் சுக்கிர ஸ்தலமாக மட்டுமே கஞ்சனூரைப் பற்றிப் பலரும் அறிந்துள்ளனர். ஆனால் கம்ஸபுரம், பிரம்மபுரி என்பதான கஞ்சனூரின் வேதகாலத் தொன்மை பற்றியும் - சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கஞ்சனூரில் சுதர்ஸன

✵ கஞ்சனூர் தலத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஸ்ரீராஜநாராயணப் பெருமாளாகக் காட்சி தந்து தாமே இத்திருக்கோயில் பூமியில் ஓதியருளிய மஹாநாராயண உபநிஷத் மந்திரங்களை கஞ்சனூர் பெருமாள் அலயத்தில் ஓதுதல் அதிபுனிதமானது, சகல காரியசித்தி தருவதாம்.✵

விஷ்ணு அம்சத்தவராகத் தோன்றி உலகுக்கு உத்தமச் சேவைகளை ஆற்றிய **மஹான் ஹரதத்தர்** பற்றியும் பலரும் அறியாதிருக்கக் கூடும்.

✵ இவை பற்றி ஓரளவு அறிந்திருப்பின் மஹான் ஹரதத்தரின் அறுபதாண்டு விமுக்த குருபூஜை நிகழவிருக்கும் நடப்பு விளம்பி தமிழ் ஆண்டுக் காலத்தின் இந்நேரத்தில் இருந்தேனும் பலருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய இறைக் கடமையை, திருப்பணியாக, ஆன்மீகச் சேவையாகக் கொண்டு ஆற்றிடவும்.

✵ கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் சிவாலயம் போன்று மிகவும் தொன்மையான ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலும் ராமாயண காலத்துக்கும் முந்தையதாக சிவபுராணம், ராமாயணம், மஹாபாரதம், பாகவதம், பிரம்ம புராணம் போன்ற பல புராணங்களில் பங்கேற்றுச் சிறப்பதாம். இதில் ஒரு சிலவற்றை ஈண்டு காண்போம்.

✵ கஞ்சனூரில் கலியுகத்தே சுதர்ஸன விஷ்ணு அம்சத்துடன் மஹான் ஹரதத்தர் தோன்றுவது பற்றி பவிஷ்யோத்தர புராணம், கம்ஸபுர க்ஷேத்ர மஹாத்மியம், அக்னீஸ்வர மஹாத்மியம், சிவரஹஸ்யம், உபமன்யு விலாஸம் போன்றவற்றில் தீர்கதரிசனமாக முன்னரேயே விளக்கி உள்ளனர்.

ஸ்ரீகிருஷ்ணர் ஆண்ட துவாரகாவில் அதிசயமாய் ஒலித்த ஆராய்ச்சி மணி

✵ ஸ்ரீராமர் அயோத்யாவைத் தலைநகராகக் கொண்டு ஆண்டது போல் கிருஷ்ண பரமாத்மாவும் துவாரகையைத் தலைநகராகக் கொண்டு மஹாராஜாவாகவும் தர்மசத்தியம் செழிக்க நல்ஆட்சி புரிந்தார். தினமும் மக்களை சந்தித்துக் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதற்காக ஆராய்ச்சி மணியும், தர்ம மேடையும் துவாரகா அரண்மனை வாயிலில் இருந்தன.

✵ ஒரு நாள் ... மேலே உயரே கட்டிய நாளில் இருந்து எவருந் தொட்டிடாத அந்த ஆராய்ச்சி மணி முதன் முதலாக அன்றுதான் திடீரென்று ஒலித்தது. காரணம் என்ன? துவாரகை நாட்டின் சுகீர்த்தி எனும் ஒரு பிரஜைக்கு ஏற்பட்ட இடரை - துவாரகா நாட்டு மஹாராஜாவாம் கண்ணபிரானுக்கு உணர்த்துவதற்காகவே அம்மணி ஒலிக்கப்பட்டது. அனைவரும் திகிலுடன் அரண்மனை வாயிலுக்கு விரைந்தனர்.

விஷயம் யாதெனில் .... 'சுகீர்த்தி' எனும் அந்தப் பிரஜைக்குக் கடந்த பல ஆண்டுகளில் வரிசையாக ஒன்பது குழந்தைகள் பிறந்த உடனேயே விண்ணில் மறைந்து போயின. காரணமும் விளங்கவில்லை. திறமைமிகு ஜோதிடர்களுக்கும் இது இனம் புரியாத பெரிய புதிராக, சவாலாக இருந்தது.

✵ "இந்த வலுத்த தோஷம் எப்படி தர்மமிகு ஸ்ரீகிருஷ்ண சாம்ராஜ்யத்தில் ஏற்படலாகும்? தன் வம்சத்தைக் கட்டிக் காப்போர் எவரும் நாட்டில் இல்லையா?" என்பதே சுகீர்த்தியின் வாதம். இதைக் கேட்டு கிருஷ்ண பரமாத்மாவும், பலராமரும் மௌனமாய் இருந்தனர். அப்போது துவாரகைக்கு விஜயம் செய்திருந்த அர்ஜுனன் தன் காண்டீப வில்லிற்கு ஈடு இணை ஏதும்

கிடையாதென்றும், இதன் மூலம் சுகீர்த்தியின் பத்தாவது குழந்தையை கர்ப காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே தான் காப்பதாகவும் உறுதி கூறினுன். இதில் அர்ஜுனன் எவரையும் கலந்து ஆலோசிக்காமல் தானே சுகீர்த்தியிடம் தன் வாக்குறுதியை முன் மொழிந்தான்.

✵ மேலும் தன் காண்டீப வில்லின் திறமையால் தான் சொன்னபடிப் பத்தாவது குழந்தையைக் காக்க இயலாவிடில், தான் தீயில் வீழ்ந்து மாய்வதாகவும் அர்ஜுனன் உடனடியாக அங்கேயே வார்த்தைகளைச் சூடாகக் கொட்டிச் சூளுரைத்தான். ஆனுல் சுகீர்த்தியோ 'மஹாராஜாவான கிருஷ்ண பரமாத்மாவும், பலராமரும் இந்த விஷயத்தில் வாய் திறவாது மௌனம் காக்கும்போது, வெளி தேசத்துப் பிரஜையான அர்ஜுனனுல் என்னதான் செய்ய இயலும்?' என்ற அர்த்தமுள்ள வினுவைத் தொடுக்கவே ... அர்ஜுனன் மென்மேலும் சினம் கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் இது பற்றி வாளாவிருப்பதாகக் கூறிக் கோபங் கொண்டான்.

✵ பகவான் ஸ்ரீகிருஷ்ணரோ வழக்கம் போல் லீலா விநோதத்துடன் ஒரு சிறு புன்முறுவல் பூத்தார், அவ்வளவே. அர்ஜுனன் தன் உடல் பலத்திலும், காண்டீப வில் பலத்திலும் கொண்ட பெருமை கர்வமாய் விரிவதை அறிந்த கண்ணபிரான், அர்ஜுனனுக்கான கர்வத்தைக் களையும் படலத்தோடு சேர்த்து, சுகீர்த்தியின் குறைபாட்டையும் தீர்க்க விழைந்த 'குறை ஒன்றுமிலா கோவிந்தனுக' தம் கிருஷ்ண லீலையை ஆங்கே புனையலானுர். எவ்வாறு?

✵ சுகீர்த்திக்கு அர்ஜுனனின் சபதத்தில் நம்பிக்கை முழுதுமாக ஏற்படாத போதிலும் ஏதோ சற்று மனத்திருப்தி கொண்டவராக இல்லம் திரும்பினுர். அர்ஜுனனும் தான் வாக்களித்தபடியாகத் தன் காண்டீப வில்லின் விசேஷமான அம்புகளால் சுகீர்த்தியின் இல்லத்தைச்

சுற்றிலும், விண்ணிலும், பூமிக்கு அடியிலும் தக்க மந்திரப் படல் வேலியை இட்டதோடு பல்லாயிரக் கணக்கான அம்புகளால் ஆன ஒரு 'ரட்சை வேலியையும்' இட்டு வைத்தான். மேலும் 'எமமூர்த்தியும் கூட உள்ளே நுழைய முடியாது!' என்று உறுதியும் அளித்தான்.

✵ ஆனால் என்ன துரதிருஷ்டம், பத்தாவது மாதத்தில் சுகீர்த்தியின் பத்தினியாம் நீலமதியின் பத்தாவது பிரசவத்தின் போது - ஏனைய ஒன்பது குழந்தைகள் போலவே - இந்தப் பத்தாவது குழந்தையும் பிறந்த உடனேயே வானில் மறைந்தது. இது கேட்டு அர்ஜுனன் வெகுண்டான். எமலோகம் உள்ளிட்டுப் பல லோகங்களுக்கும் சென்று அக்குழந்தையைத் தேடினான். அனைத்தும் கிருஷ்ண லீலை என்றுணர்ந்த யமமூர்த்தியும், அட்ட திக்குப் பாலகர்களும், ஏனைய தேவதாக்களும் 'அக்குழந்தை பற்றி யாமறியோம்' என அர்ஜுனனிடம் உரைத்துக் கை விரித்தனர். சோர்ந்து வெட்கிப் போன அர்ஜுனன், தான் இட்ட சபதம் நிறைவேறாமையால் தன் சபதத்தின்படியாகத் தான் உயிர் துறப்பதற்காக ஒரு தீக்குழியை மூட்டி அதில் பாய முனையும் போது ... ஸ்ரீகிருஷ்ணர் ஆங்கே தோன்றித் தடுத்தார்.

'அர்ஜுனா! இதில் எல்லா முயற்சிகளையும் எடுத்து விட்டதாக எப்படி நீ இப்போதே ஒரு முடிவுக்கு வர முடியும்? எவரையேனும் இதில் துணைக்கு அழைத்தாயா? உன்னால் முடியாதது பிறரால் ஆகக் கூடுமே! 'இரையோடு இறையையும் தேடு' '' - எனக் கூறி அர்ஜுனனை மடக்கிய ஸ்ரீகிருஷ்ணர், விண்ணுலகங்களைக் கடந்து எங்கோ அர்ஜுனனை இட்டுச் சென்றார்.

பிரபஞ்சத்திற்கு அப்பால் பரவெளியின் லோகா லோகத்தையுங் கடந்து இருள் உலகைத் தாண்டிய இருவரும் எங்கும் பிரகாசமான கடுவெளியை மிகவும் சிரமப்பட்டுத்தான் அடைந்தனர். அங்கு ஆதிசேஷப்

படுக்கையில் ஸ்ரீமன் நாராயணர் வீற்றிருக்கக் கண்ட அர்ஜுனன் மிகவும் பரவசங் கொண்டு வீழ்ந்து வணங்கிட, ஸ்ரீகிருஷ்ணரோ இப்போது தன்னைத் தானே ஆத்மவலம் வந்து ஸ்ரீமன் நாராயணனாக ஆங்கே தோன்றி ஒளிர்வதையுங் கண்டு அர்ஜுனன் பெரிதும் வியந்தான்

''எம் நரநாராயண அம்சங்களே! உம் வருகைக்காகவே இதுகாறும் காத்திருந்தோம்!'' என்று ஸ்ரீமன் நாராயண மூர்த்தி உரைத்து, அர்ஜுனனுக்கு **'மஹாநாராயண உபநிஷத்'** மாமந்திரங்களைத் தாமே புகட்டி உபதேசித்தார். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே அங்கு ஸ்ரீமன் நாராயணனாக துலங்கக் கண்டு அர்ஜுனன் உள்ளம் நெகிழ்ந்தான்.

இப்போது ஸ்ரீமன் நாராயணன் அவர்களிடம் சுகீர்த்தியின் பத்துக் குழந்தைகளையும் எடுத்துக் கொடுத்திடவே ... அவர்களுடன் கண்ண பராமாத்மாவும்,

---

குடும்பத்தை வருத்தும் பகையை நீக்கி மனஒற்றுமையை நல்கும் கஞ்சனூர் நரசிம்மர்

★ பிறருடைய அதிகாரபலம், ஆணவபலம், தேகபலம், உயர்அந்தஸ்து பலம், ஆள்பலம், வர்க்கபலம், பணபலம், அதர்மக் காமவெறி, பதவிபலத்தால் பலரும் பலவிதமான மிரட்டல், அச்சுறுத்தல், பயமுறுத்தல், பீதிகளுக்கு ஆளாகி வெளியில் சொல்ல இயலாது உள்ளுக்குள் வருந்தி வாழக்கூடும். இவர்களை இத்தகையச் சொல்லொணா பயத்தளைகளில் இருந்து மீட்டு, புத்துணர்ச்சி, ஆன்மீக ஏற்றத்துடன் நல்வாழ்வை நல்கும் ஸ்ரீசாந்த நரசிம்ம மூர்த்தியையும் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் தரிசிக்கலாம்.

★ ஸ்ரீராஜநாராயணர் கோயிலில் அபூர்வமாக உள்ள சிவன் – பார்வதி சன்னிதியுள் ஸ்ரீசாந்தநரசிம்மர் எழுந்தருளி உள்ளார். ராமாயண, மஹாபாரத இதிஹாஸ வைபவங்களில் பங்கேற்றருளும் அபூர்வமான சாந்த நரசிம்ம மூர்த்தி.★

அர்ஜுனனும் பூவுலகிற்குத் திரும்ப விழைந்தனர்.

கஞ்சனூரில் ராஜநாராயணராகத் தோன்றிய ஸ்ரீகிருஷ்ணர்

✡ துவாரகைக்குத் திரும்புவதற்காக அவர்கள் வானில் பயணிக்கும் போது ஸ்ரீகிருஷ்ணர் ஒரு தலத்தில் கீழிறங்கினார். துவாரகையில் இருந்த அக்குழந்தைகளின் தாய் தந்தையரை அழைத்தார். அவர்களை துவாரகையில் கோமதி நதியில் மூழ்கச் செய்து கஞ்சனூர் காவிரியில் எழச்செய்து தரிசனம் தந்தார். இங்கு கஞ்சனூரில் அவர்களுடைய பத்துப் பிள்ளைகளும் பூமிக்கு இறங்கி வந்துள்ள வைபவத்தையும் எடுத்துரைத்தார்.

✡ கஞ்சனூரின் அபூர்வமான உத்தரவாஹினி நதியாக அதாவது வடக்கு நோக்கிப் பாயும் வடகாவிரி நதியில் குழந்தைகளோடு அவற்றின் பெற்றோரைப் புனித நீராடச் செய்தார். பத்துக் குழந்தைகளுக்கு **மஹாநாராயண உபநிஷத்'** மந்திரங்களை ஸ்ரீகிருஷ்ணர் தாமே உபதேசித்து கஞ்சனூரில் பன்முறை ஓதச் செய்தார்.


✡ அந்தப் பத்துக் குழந்தைகளும் பூமியில் பிறந்த க்ஷணத்திலேயே உடனே மஹாநாராயண லோகத்தை அடைந்த அபூர்வமான, அதியற்புத ஆத்மாக்கள் ஆதலின், மஹாநாராயண லோகத்தில் இருந்து நேரடியாக பூமிக்கு வரும் போது முதலில் அவர்கள் ராஜநாராயண பூமியில் புனித நீராடுதல், ராஜநாராயண மூர்த்தியை முதலில் பூலோகத்தில் தரிசித்தல், வழிபடுதல், இங்கு மஹாநாராயண உபநிஷத் மந்திரங்களை உபதேசமாகப் பெற்று ஓதுதல் அதிவிசேஷமானது என்றும் கண்ண பராமத்மாவே நேரடியாக எண்ணற்ற பக்தர்களின் முன்னிலையில் அவர்களுக்கு விளக்கினார்.

கஞ்சனூர் பெருமாள் கோயில் தலவிருட்சமான அசோகமரத்தை மீண்டும் பிரதிட்டிக்க வேண்டும்

✵ அசோக குஸுமேஸ்வரீ அம்பிகை லோகத்திலும், அசோக நரசிம்ம மூர்த்தி லோகத்திலும் அசோகமரம் ஆதிமுதலில் சிருட்டிக்கப் பெற்றதாம். **அசோகமரமே கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலுக்கான தலவிருட்சம்.** வடபாரதத்தில் பத்தாவது திருமால் அவதாரமாகப் போற்றப் பெறும் புத்தர்பிரான் அசோக மரத்தடியில்தான் தோன்றினூர். சீதாப்பிராட்டி இலங்கையில் அசோகவனத்தில் அசோக குல விருக்ஷமான பொன்மயமான சிம்ஸுபா மரத்தடியில் அமர்ந்தார்.

✵ ஆகவே உண்மையான அசோகமரத்தைத் தேடி அறிந்து, இதனை கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் மீண்டும் நிறுவ வேண்டும். ஏனெனில் அசோகமரம் என்றால் நாம் சாதாரணமாக அலங்காரமாக வரிசையாக கட்டடங்கள், பூங்காக்களில் காண்பதான நெடிது வளரும் மரமானது உண்மையான மூலிகா சக்தி அசோகமரம் அல்ல. மாவிலை போலும், ஓரத்தில் வளைவான இலைகளைக் கொண்ட இதனைச் சமுதாய வழக்கில் பொதுவாக அசோகமரம் (false asoka) என்று குறிப்பிட்டாலும், உண்மையான அசோகமரம் வேறானது.

✵ நாமிங்கு விளக்கும் புனிதமான அசோக மரமானது (Saraca asoca) படர்ந்து அகன்று வளர்வது, சீதா அசோகமரம் என்றும் அழைக்கப் பெறும் இம்மரத்தில் மருதமரம் போல் இளஞ்சிகப்புப் பூக்கள், காய்கள், கனிகளுடன் அனைத்துமே மூலிகா சக்திகளை உடையன. அசோக மரப் பூக்கள் பூஜைக்கு மிகவும் புனிதமானவை. தாவரவியல் வெப்தளங்களில் (botanical websites) உண்மையான அசோகமரத்தை தரிசிக்கலாம். ✵



உண்மையான அசோகமரம்

✵ இத்தகையப் புராண வைபவம் நடைபெற்ற வடக்கு நோக்கிக் காவிரி நதி பாயும் தலமே நாமிங்கு காணும் கஞ்சனூர். கண்ணபிரான் ஸ்ரீராஜநாராயணராகக் காட்சி தந்ததும் அவர்கள் வழிபட்ட திருமால் ஆலயமுமே நாமிங்கு காணும் விஷ்ணுபதி புண்யகால உற்சவ பூமியான கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயண ஆலயபூமி.

✵ இவ்வற்புத வைபவம் நிகழ்ந்த தினம் அந்த யுகத்தின் மாசி மாதப் பிறப்பின் விஷ்ணுபதிப் புண்யகாலத் திருநாளாம். இக்காரணத்தாலும் நடப்பு விளம்பி தமிழ் ஆண்டின் மாசி மாதப்பிறப்பில் (13.2.2019) கஞ்சனூர் ஸ்ரீராஜ நாராயணப் பெருமாள் கோயிலில் நிகழ்வதாக பகவத் சங்கல்பத்தால் அமையும் விஷ்ணுபதி உற்சவத்தின் தெய்வீகப் பின்னணி ஆகும்.

✵ இவ்வாருக ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் திருவருளால் சுகீர்த்தி, அவர்தம் பத்தினி மாதா, பத்துக் குழந்தைகளும் கஞ்சனூரில் ஸ்ரீராஜநாராயணப் பெருமாளை தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற புண்யபூமி கஞ்சனூர் திருமால் வளாகம். இதே போன்றே மஹான் ஹரதத்தர் சரிதத்திலும் விண்ணுலகஞ் செல்லும் ஆத்மாக்களின் அனுபூதிகளும் நிறைந்து வரக் காண்கிறோம்.

✵ இவை யாவும் வரவள பூமி, சுபமங்கள பூமி, பிதுர்முக்தி பூமி, புண்ணியத் தீர்த்த பூமி, குருவருள் பூமியாகப் பலவிதங்களில் கஞ்சனூர்த் தலம் உலகச் சமுதாயத்தார்க்கு அருள்வதைப் புலப்படுத்துவன.

✵ இப்புராண வைபவத்தால் அர்ஜுனனுடன் ஏனையோரும், லட்சக் கணக்கான பக்தர்களும் நன்கு தரிசிக்கும்படியாக துவாரகையின் மஹாராஜாவான ஸ்ரீகிருஷ்ணரே ராஜநாராயணப் பெருமாளாகத் தோன்றிக் கஞ்சனூரில் காட்சி தந்தருளும் பாக்கியத்தைப் பெற்று ஆனந்தித்தனர்.



மஹான் அரதத்தர்

அர்ஜுனன் தன் கர்வத்தை உணர்ந்து களைதல்

✵ அர்ஜுனனும் தன்னால், தன் காண்டீப வில்லால் எதையும் சாதிக்க முடியும் என்ற அகங்காரத்தையும் இந்தக் கிருஷ்ண லீலா அனுபூதி மூலம் களைந்து கொண்டான். மேலும் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு அக்னி மூர்த்தியின் தரிசனத்தையும் கஞ்சனூரில் பெற்றுத் தந்தார். ஏனெனில் அனல் பிழம்பாக, ஜோதிப் பிரவாகத்துடன் ஜ்வலிக்கும் அக்னி மூர்த்தியை இதிலும் நம் பூமியில் தரிசித்தல் மிகவும் கடினம்.

✵ அக்னி மூர்த்தி தாமே லிங்கம் பிரதிட்டித்து வழிபட்ட தலம் கஞ்சனூர் என்பதாலும், மிகவும் சக்தி வாய்ந்த காண்டீபம் வில்லை அர்ஜுனனுக்கு நல்கியவர் அக்னி மூர்த்தி என்பதாலும், அர்ஜுனனுக்கு அக்னி

கஞ்சனூர் நரசிம்மருக்கான காப்பு வழிபாடு

★ கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் ஸ்ரீசாந்த நரசிம்ம மூர்த்திக்கு சுவாதி, புதன், ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வகையில் பக்தர்கள் அரைத்த சுத்த சந்தனத்தால் காப்பிட்டு, பானகம் படைத்து தானமளித்து வழிபடுவதானது – எத்தகைய பகைமை, எதிர்ப்பு, இழிச்சொல், அவமானம் போன்றவற்றில் இருந்தும் குடும்பத்தை மீட்டுக் காத்து ரட்சிக்கும்.

★ திருவோணம் அல்லது சுவாதி நட்சத்திர நாளில் ஸ்ரீசாந்த நரசிம்மருக்கு மலைத்தேனால் அபிஷேகம் ஆற்றி வழிபடுவதும் விசேஷமானது. மனபேதங்களால் உழலும் இல்லறத்தில் மனக்கசப்புகள் நீங்கி சாந்தம், அமைதி உண்டாவதற்கும், மனபேதங்கள் அகன்று மனஒற்றுமை ஏற்படுவதற்கும், ஸ்ரீசாந்த நரசிம்மருக்கான தேனபிஷேகப் பலாபலன்கள் அருள்வதாம். ★



கஞ்சனூர் பெருமாள் கோயில் லிங்கம்

மூர்த்தியின் ஸ்வயரூப தரிசனம் முக்கியமானதாயிற்று. கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயிலில் அக்னி மூர்த்தி பிரதிட்டித்து வழிபட்ட சிவலிங்கத்தை தரிசிக்கலாம்.

✫ ராஜநாராயணப் பெருமாள் பூமியாகிய கஞ்சனூரில் துவாரகாவின் மஹாராஜாவான கண்ணபிரானே ராஜநாராயணப் பெருமாளாகவும் காட்சி தந்து அக்னி மூர்த்தியை ஈண்டு வரவழைத்து அர்ஜுனனுக்கு தரிசனம் செய்வித்தார்.

✫ அர்ஜுனனும் ஏனையோரும் வேண்டியபடியாக கிருஷ்ண பரமாத்மா கஞ்சனூர் தலத்தில் தாம் ராஜநாராயண விஷ்ணுவாகவும் பொலிந்து உலகச்

கஞ்சனூர் பெருமாள் கோயிலில் தைலக்காப்பு வழிபாடு

★ கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயத்தின் முலமூர்த்திகளான வரதாராஜர், ஸ்ரீதேவி, பூதேவி மூர்த்தங்கள் கற்சிலையாக அல்லாது பழங்காலச் சுதைமூர்த்திகள். ஆகவே அபிஷேகம் அல்லாது தைலக்காப்பே இடப்படும். திருவோணம், அமாவாசை, பௌர்ணமி, சனிக்கிழமை, புதன்கிழமை நாட்களில் சுத்தமான சந்தனாதித் தைலம், நல்லெண்ணெய், சாம்பிராணி கூடிய தைலக்காப்பு, அவரவர் வசதிக்கேற்ற அளவில் 3, 6, 12, 18 விதமான அபிஷேக ஆராதனைகளை ஆற்றுதல் பன்மடங்கில் பலன்களை அருள்வதாம்.

★ கஞ்சனூர்த் தலத்து சிவா – விஷ்ணு வழிபாட்டின் பலாபலன்களால் பிள்ளைப்பேறு கிட்டும். தமக்குக் கிட்டி உள்ள குழந்தைச் செல்வங்கள் பக்தி, நல்லொழுக்கம், நற்குணம், சற்குணத்தோடு வாழ்வதற்கும், நன்முறையில் பயின்று புனிதமான இல்லற வாழ்க்கையை அடைவதற்கும் உதவும். ★

சமுதாயத்தாரின் பல்வகை கஷ்டங்கள், தோஷங்களை தாமே முன் வந்து நிவர்த்தி செய்து நாடாளும் மாமன்னரின் பணி போலுமாய்க் காப்பதாகவும் அருளிச் செய்தார்.

✵ இவ்வாருகத் தாமே முன் வந்து அருளும் காருண்ய மூர்த்தியையே நாம் இன்று ராஜநாராயணப் பெருமாளாகக் கஞ்சனூர் திருமால் ஆலயத்தில் தரிசிக்கின்ருேம். ஆகவே துவாபர யுகத்திற்கு முன்னிருந்தே அருளி வரும் பழங்கோயில் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயம்.

பகை, பீதியை அகற்றி சாந்தத்தை வர்ஷிக்கும் கஞ்சனூர் பெருமாள் ஆலயத்தின் நரசிம்மர்

✵ அசுரனுகிய ஹிரண்யகசிபு தன்னை வெல்வார் எவரும் இல்லை என்ற இறுமாப்பில் இருந்தான். ஒரு முறை தன்

குடும்பத்தை வருத்தும் பகையை நீக்கி மனஒற்றுமையை நல்கும் கஞ்சனூர் நரசிம்மர்

★ பிறருடைய அதிகாரபலம், ஆணவபலம், தேகபலம், உயர்அந்தஸ்து பலம், ஆள்பலம், வர்க்கபலம், பணபலம், அதர்மக் காமவெறி, பதவிபலத்தால் பலரும் பலவிதமான மிரட்டல், அச்சுறுத்தல், பயமுறுத்தல், பீதிகளுக்கு ஆளாகி வெளியில் சொல்ல இயலாது உள்ளுக்குள் வருந்தி வாழக் கூடும். இவர்களை இத்தகையச் சொல்லொணு பயத்தளைகளில் இருந்து மீட்டு – ஆன்மீகப் புத்துணர்ச்சி, ஆத்மீக ஏற்றத்துடன் நல்வாழ்வை நல்கும் ஸ்ரீசாந்த நரசிம்ம மூர்த்தியையும் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் தரிசிக்கலாம்.

★ ஸ்ரீராஜநாராயணர் கோயிலில் அபூர்வமாக உள்ள சிவன் – பார்வதி சன்னிதியுள் ஸ்ரீசாந்தநரசிம்மர் எழுந்தருளி உள்ளார். ராமாயண, மஹாபாரத இதிஹாஸ வைபவங்களில் பங்கேற்றருளும் அபூர்வமான சாந்த நரசிம்ம மூர்த்தி.★

வலிமையைப் பெருக்கிக் கொள்ள தவம் புரிய விழைந்தான். கர்பமுற்றிருந்த தன் பத்னியாம் கயாது தேவியை அரண்மனையில் அசுரர்களின் பாதுகாப்பில் இட்டு மந்த்ராசல மலையின்பால் கடுந் தவத்திற்காகச் சென்று விட்டான். கயாது மாதாவின் கருவில் உத்தம விஷ்ணு பக்தனாக பிரஹ்லாத ஆழ்வார் வீற்றிருந்து வளர்வதை அறிந்த நாரதமஹரிஷி, ஏழு ரிஷிபத்னீயரின் துணையோடு கயாது மாதாவை பத்திரமாக அழைத்துச் சென்று வழிபடச் செய்த தலங்களில் கஞ்சனூர், தஞ்சாவூர் அருகே பசுபதிகோயில் எனும் பெயருடைய

தஞ்சைப் பெருவுடையார் கோயில் மஹாநந்திக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு – அரைத்த சந்தனத்தால் ஆன முழுமையான சந்தனக் காப்பு

★ முயற்சி திருவினையாக்கும். பக்தர்கள் முயன்றால் ஒவ்வொரு கோயிலிலும் மக்குச் சந்தனத்தால் அல்லாது அரைத்த சந்தனத்தால் மட்டுமே தெய்வ மூர்த்திகளுக்குக் காப்பிடும் தொன்மைப் புனிதத்தை மீண்டும் புனரமைத்திடலாம்.



தஞ்சாவூர் சந்தனக்காப்பு

★ **சத்குரு வேங்கடராம சுவாமிகளின்** குருவருளால் 12.5.2015 அன்று தஞ்சாவூர் ஸ்ரீபிருஹதீஸ்வரர் கோயிலின் பிரும்மாண்டமான நந்தி மூர்த்தியின் திருமேனி முழுமைக்குமாக அரைத்த சந்தனத்தால் ஆன காப்பிடும் மகத்தான வைபவம் நிகழ்ந்ததை யாவரும் அறிவர். ஆழ்ந்த நம்பிக்கை கூடிய குருவருளால் சத்சங்கப் பூர்வமாக எந்த நற்காரியமும் கனியும்.. ★

'கஞ்சனூர் தலத்துக்கு உரித்தான (ஏழு) சப்தஸ்தானத் தலங்கள்'

✵ சுதர்ஸன விஷ்ணுவின் அம்சத்தவராகக் கஞ்சனூரில் தோன்றிய ஹரதத்தர், பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பரிசுத்தமான பிரம்மச்சர்யத்தைக் கடைபிடித்தார். **'இல்லறமே நல்லறம், இல்லறத்தைச் செம்மையாய் ஆற்றி, சிவபரத்வத்தை நிலை நாட்டி எம்மை அடைவாயாக!'** - என்ற அக்னீஸ்வரரின் இறைஆணையை ஏற்று, மஹாலக்ஷ்மீ அம்சமாகக் கஞ்சனூரில் தோன்றிய கமலாக்ஷீ தேவியை மணந்து புனிதமான இல்லறத்தைக் கடைபிடித்தார்.

✵ மஹான் ஹரதத்தர் சீரிய குடும்ப வாழ்வை ஏற்று, நமசிவாயப் பஞ்சாட்சர ஜபம், இறைநாமம் ஓதுதலோடு வாழ்தல் கலியில் முக்தி மார்கத்திற்கு எளிய மார்கம் என்பதைப் புகட்டியும், புலப்பித்தும் கடைபிடித்தும் வந்தார்.

✵ ஹரதத்தரின் நித்தியக் கடமைகளுள் ஒன்று - கஞ்சனூரின் அருகருகே உள்ள **திருக்கோடிக்காவல், திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர்** ஆகிய ஏழு தலங்களுக்கும் பாதயாத்திரையாக நிதமும் நடந்து சென்று வழிபடுதலாம். இதில் அரதத்தருடன் தினமும் ஆயிரக் கணக்கானோர் சென்று சத்சங்க வழிபாடாகக் கடைபிடித்தனர்.

✵ திருவையாறு சப்தஸ்தானம் போல் இவ்வேழும் கஞ்சனூரின் சப்தஸ்தானத் தலங்களாகப் போற்றப் பெறும் இவ்வழிபாட்டை கஞ்சனூர் பகுதியில் மீண்டும் புனரமைக்க வேண்டும். ✵

கிராமத் தலத்தின் கேட்டை நட்சத்திரக் கோயில் போன்றன முக்கியமானவை.

✵ விஷ்ணு மூர்த்தியைத் தன் கணவன் ஹிரண்யகசிபு பெரிதும் தூஷித்து வந்தமையால் - அவன்தன் பத்னியாம் கயாது மாதா பெரிதும் வருந்தினள். வம்சத்தை வாட்டக் கூடிய இப்பெரும் குற்றத்திற்குப் பரிஹாரமாகத் தனக்கு ஒரு விஷ்ணு பக்தனே குழந்தையாக வர வேண்டும் என்று உத்தமமாகப் பிரார்த்தித்து வந்தாள். இதற்கான நல்வழி முறைகளை நாரதமுனிவர் சப்த ரிஷிமாதாக்கள் மூலமாக கயாது மாதாவிற்கு அவ்வப்போது அளித்து வந்தார். பிரார்த்தனை நன்கு கனிந்து பிரஹ்லாத ஆழ்வார் பிறந்தவுடன் கயாது மாதா பிள்ளையோடு வந்து கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாளை வழிபட்டார்.

✵ நரசிம்ம அவதாரம் எப்போதும் உண்டு எனினும், பிரஹ்லாதத் தோற்ற வைபவம் மூலமாக நரசிம்ம மூர்த்தி பூவுலகச் சமுதாய வழிபாட்டிற்காக பூமிக்கு வரும் அனுபூதி கனிந்தது.

சாந்தத்தை வர்ஷிக்கும் கஞ்சனூர் ஸ்ரீசாந்தநரசிம்ம மூர்த்தி வழிபாடு

✵ எந்தக் கோயிலும் எந்த தெய்வத்திற்கும் சந்தனக் காப்பு சார்த்தும் போது - கைகளால் அரைத்த சுத்தமான சந்தனத்தை மட்டுமே சார்த்த வேண்டும் என்பதில் வெகு கவனமாக இருக்கவும். கடையில் வாங்கும் மக்குச் சந்தனப் பவுடரைக் கரைத்து தெய்வத்துக்குச் சந்தனக் காப்பாகச் சார்த்துவது தகாத செயல். இதில் சாபமே மிஞ்சும். ஆனால் இவ்வாறுதான் பல கோயில்களிலும் தற்போது நிகழ்ந்து வருகிறது. இது இல்லத்தை, சமுதாயத்தை பாதிக்கும்.

✵ இவ்வாறல்லாது பக்தியுடன் அடியார்கள் கைகளால் சந்தனக் கல்லில் சந்தனக் கட்டையால் அரைத்துக் கிட்டும்

சோகத்தை நிவர்த்திக்கும் அசோகப் பூ வழிபாடு
சோக நிவர்த்திக்கான சாந்த சக்தித் தலங்கள்

✡ இலங்கையில் ராவணனால் சிறை பிடிக்கப்பட்டு அசோகவனத்தில் இருந்த சீதாதேவி ராமபிரானைப் பிரிந்த சோகத்தில் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணிய போது, சீதாதேவி அமர்ந்திருந்த சிம்ஸுபா அசோகமரத்தின் விருட்ச தரிசனமும், அசோகமரத்தின் மீது அமர்ந்திருந்த ஆஞ்ஜநேய மூர்த்தியின் ராமநாம ஜபமும் சீதாபிராட்டியாருக்கும் மனோதைர்யம் வார்த்தன. ஆகவே அசோகமரத்திற்கு சோகத்தை நிவர்த்தி செய்யும் ஆன்மசக்தி உண்டு. போலி அசோக மரம் அல்லாது உண்மையான அசோகமரப் பூக்களைக் கண்டறிந்து பெற வேண்டும்.

✡ குடும்பத்தில், தொழிலில் பலவிதமான சோக நிகழ்வுகளுக்கு ஆட்பட்டு வாடித் துன்புற்று வாழ்வோர், இளஞ்சிகப்பு நிறமுடைய மருத மரப்பூக்கள், உண்மையான அசோகமரப் பூக்களால் அர்ச்சித்து இல்லத்தில், ஆலயத்தில் வழிபட்டு வர வேண்டும். காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பதிகம், மாணிக்கவாசகரின் 'காருணியத்து இரங்கல் பதிகம், சீதோ உபநிஷத் எனும் உபநிஷத் மந்திர பாராயணமும் சோகத்தை அகற்றி சாந்தத்திற்கு அருள்வதாம்.

✡ சோகத்தன்மையை நிவர்த்தி செய்து அருளும் சாந்த சக்தித் தலங்கள் சுக்ர ஸ்தலமாகிய **கஞ்சனூரின் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயம்,** மாயூரம் - பேரளம் அருகில் உள்ள **இஞ்சிக்குடி சிவன்கோயில்,** பட்டுக்கோட்டை - ஒத்தக்கடை அருகில் உள்ள **பூவாணம் ஸ்ரீபுஷ்பவனேஸ்வரர் - ஸ்ரீவாடாமலர் மங்கை (ஸ்ரீஅஸோக குஸுமேஸ்வரீ)** சிவாலயம் போன்றவை.



சுத்தமான சந்தனத்தால்தான் எந்த தெய்வ மூர்த்திக்கும் சந்தனக் காப்பிட வேண்டும். அனுமார் ஸ்ரீராமர் அறிவுறுத்திய படியாகத் தம் திருக்கரங்களால் சந்தனம் அரைத்து வழிபட்ட திருத்தலம் கஞ்சனூர்.

✵ திரேதா யுகத்தின் ராமாயணத்தில் இலங்கைப் போரில் ராமாதி இலக்குவர்கள் போர்க்களத்தில் மயக்கமுற்றது - ராவணனின் மிகவும் சக்தி வாய்ந்த மூலபல சேனையின் வரத்திற்கு மதிப்பளித்து அனுமார் சற்றே தயங்கியது- ராமாவதாரம் முடிந்து ஸ்ரீராமர் வைகுண்டம் ஏகியதால் ஏற்பட்ட பிரிவு - போன்றவற்றின் ஊடே அனுமார் மூர்த்தி பெரிதும் சோகத்தில் ஆழ்ந்தார். ஸ்ரீராமரிடம் தம் சோகத்தின் துன்பத்தை எடுத்துரைத்தார்.

கஞ்சனூர் பெருமாள் கோயிலில் அருளும் ஸ்ரீசௌபாக்ய ராமபிரான்

✵ இதற்கு முன்னால் ... தசரதரின் பிரிவால் வருந்திய தன் தாய்மார்களின் சோகத்தை எண்ணி வருந்திய ஸ்ரீராமர் கஞ்சனூர் தலத்தில் ஸ்ரீஅக்னீஸ்வரரையும், ஸ்ரீராஜநாராயணரையும் வழிபடும்போது மகத்தான சாந்தத்தைத் தான் பெற்ற அற்புதத்தையும் உண்ணிய ஸ்ரீராமர், கஞ்சனூரின் சாந்தவளத்தை பரவசத்துடன் அனுமாருக்கு உணர்த்தினார்.



கஞ்சனூர் ராமர்

✵ இவ்வாறு கஞ்சனூரின் தலமகத்துவத்தை ஆஞ்ஜநேயருக்கு உணர்த்திய **'சௌபாக்ய ராமராக'** கஞ்சனூர்

ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் ஸ்ரீராமர் அருள்கின்றார்.

✵ ஆஞ்ஜநேயரும் ஸ்ரீராமர் உரைத்தது போல் கஞ்சனூருக்கு வந்தேகி சிவா விஷ்ணு மூர்த்திகள், ஸ்ரீராஜநாராயணப் பெருமாள், நரசிம்மரை வழிபட்டுச் சாந்தம் பெற்றார். இதற்காக அனுமாருக்கு விசேஷமாக அருளிய மூர்த்திகள் புதுக்கோட்டை - அறந்தாங்கி - மணமேல்குடி அருகில் உள்ள மஞ்சக்குடி கிராமத்தில் 'அஞ்சேல் என்ற பெருமாள் (ஸ்ரீபயக்ஷயஹரி)' ஆலயத்தின் வேதநரசிம்மர் மற்றும் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயத்தின் ஸ்ரீசாந்த நரசிம்ம மூர்த்திகள் ஆவர்.

✵ ஸ்ரீராமர், சீதை தேவி, லக்ஷ்மணர், ஆஞ்ஜநேயருக்கு சோகநிவர்த்தி தந்தமையால் , கஞ்சனூர் ஸ்ரீராஜ நாராயணப் பெருமாள் கோயிலின் நரசிம்ம மூர்த்திக்கு **அசோக நரசிம்மர்** என்ற சித்புருஷ முத்ரா அடைமொழியும் பரிமளிக்கிறது. அ+சோக என்பதில் 'அ' என்றால் 'இல்லாதது' எனும் பொருளும் வரும். எனவே அசோகம் என்றால் சோகம் இல்லாது சாந்தம் கமழும் ஆனந்தத்துடன் இருத்தலாகும்.

✵ இக்காரணங்களால் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலின் தலவிருட்சமாக அசோகமரம் முற்காலத்தே திகழ்ந்து வந்தது. இத்தல விருட்சத்தை கஞ்சனூர் பெருமாள் கோயிலில் மீண்டும் நிறுவிப் புனரமைக்க வேண்டும்.

விஷ்ணுபதி பண்டிகை மஹிமை

✵ ஒவ்வொரு தமிழ் ஆண்டிலும் **வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி** ஆகிய நான்கு மாதப் பிறப்பு நாட்களில் வருவன நான்கு **விஷ்ணுபதிப் பண்டிகை தினங்கள்.**

✵ பொங்கல், தீபாவளிப் பண்டிகைகள் போல்

இல்லத்திலும், ஆலயத்திலும் எல்லோராலும் பண்டைய யுகங்களில் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வந்த விஷ்ணுபதிப் பண்டிகையானது - பிரதோஷ பூஜை, அருணாசல கிரிவலம் போல் இடையில் சமுதாய வழக்கில் விடுபட்டு - தற்போது **சத்குரு வேங்கடராம சுவாமி** போன்ற மஹான்களால் மீண்டும் புனரமைக்கப் பெற்றுக் கடைபிடிக்கப் பெற்று வருகிறது.

✵ விஷ்ணுபதிப் பண்டிகையின் தொன்மையை உணர்த்தும் வண்ணமாக ... **வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி** ஆகிய நான்கு மாதப் பிறப்பு நாட்களும் விஷ்ணுபதிப் பண்டிகையாக யுகயுகமாக அனைத்துப் பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டு வருவதும், **ஷண்ணுவதி பிதுர்முக்தி தினங்கள்** எனப்படும் தொண்ணூற்ருறு வருடாந்திர பிதுர்முக்தி நாட்களில் ஒன்ருக விஷ்ணுபதிப் பண்டிகை துலங்கி வருவதும் விஷ்ணுபதிப் பூஜையின் ஆதியுகப் பழமையைச் சுட்டுவதாம்.


அரதத்தர்

✵ சித்புருஷர்கள், ரிஷிகள், **சத்குரு வேங்கடராம சுவாமிகள்** போன்ற மஹான்கள் உலகச் சமுதாயத்தில் விடுபட்டுள்ள விஷ்ணுபதி போன்ற பண்டிகைகளை, உற்சவங்களை ஒவ்வொரு யுகத்திலும் நடப்புக் கலியிலும் ஆலயங்களில், சமுதாயத்தில், இல்லங்களில் புனரமைத்து நடத்தித் தந்து நமக்கு வழிகாட்டி வருவதும் நாம் பெற்ற பாக்யம்.


✵ ஒவ்வொரு தமிழ் வருடத்திலும் வரும் அறுபதிறுறு எனும் 96 ஷண்ணுவதிப் பண்டிகைகளில்,

இந்த நான்கு மாதப்பிறப்பு விஷ்ணுபதி தினங்கள் கூடிய பன்னிரு மாதப்பிறப்புகள், 12 அமாவாசை தினங்கள், பதினான்கு மாளயபட்சத் திதிகள் போன்றன வருவதால் விஷ்ணுபதிப் புண்யகாலம் எனும் பிதுர்.முக்தி தினமாகவும் போற்றுவர்.

விஷ்ணுபதி உற்சவத் திருத்தலம்: கஞ்சனூர் (அபிமானதேசம்)
கஞ்சனூர் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில்
விஷ்ணுபதி நாள்: 13.2.2019 - மாசி மாதப்பிறப்பு

✡ நடப்பு விளம்பி தமிழ் ஆண்டின் மாசி மாதப்பிறப்பில், 13.2.2019 புதன்கிழமை அன்று அமையும் விஷ்ணுபதிப் புண்யகாலத்திற்கான உற்சவத் தலமாகச் சித்தர்கள் போற்றுவது சுக்கிர ஸ்தலமான **கஞ்சனூரின் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் (ஸ்ரீவரதராஜர்) ஆலய** பூமியாம்.

✡ தற்போது கலியுகத்தில் 5120 ஆண்டுகள் கடந்துள்ளன. இன்னமும் நான்கு லட்சத்துச் சொச்ச ஆண்டுகள் கலியுகத்தில் வர உள்ளன. ஏற்கனவே 84 லட்சம் பிறவிகளைக் கடந்தே ஒவ்வொருவருக்கும் பெறுதற்கரிய மானுடப் பிறவி வாய்த்துள்ளது. இனியேனும் பிறவித் தளையில் சிக்காது நற்கதி பெற்று இறைத் திருவடிகளை அடைவதற்குப் பெரிதும் துணை புரியும் அருட்சாதனமுமே விஷ்ணுபதிப் புண்யகால வழிபாடு.



கஞ்சனூர் பெருமாள் கோயில்

✡ நடப்புக் கலிகாலத்தில் சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் விளம்பி தமிழ் ஆண்டின் தை மாதம்

சுக்ல (வளர்பிறை) பஞ்சமி தினத்தில் கஞ்சனூரில் மண்ணுலகத்தாரும், விண்ணகத்தாரும் கண் கூடாகக் காணும்படியாக ... விண்ணுலகில் இருந்து கோடி சூரியப் பிரகாச மஹாரதமானத் கஞ்சனூர் திருவீதிக்கே வந்திறங்கிட.... மஹான் ஹரதத்தரோடு பலரும் இவ்விமானத்தில் ஏகியப் புனிதப் பவித்ரமான அனுபூதி நிகழ்ந்த கஞ்சனூர் புண்யதளத்தில் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறும் விஷ்ணுபதி உற்சவம் எனில் இதன் மஹிமையும், மகத்துவமும் சொல், பொருளுக்கு அப்பாற்பட்ட ஒப்பற்ற இறைப்பொருள் அல்லவா.

✵ இந்நூலின் அட்டைப் படத்தில் காண்பது போல் மஹாசாம்ப மஹாரதமே வந்திறங்கிய அற்புத வைபவம் நிகழ்ந்த புண்யபூமியான கஞ்சனூரில் ஸ்ரீராஜநாராயணப் (வரதராஜர்) பெருமாள் ஆலயத்தில் - அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மஹான் ஹரதத்தரின் (விமுக்த) குருபூஜை நிகழும் நடப்பு விளம்பி தமிழ் ஆண்டின் மாசி மாதத்தில் 13.2.2019 புதன்கிழமை அன்று விஷ்ணுபதி உற்சவமும் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு இப்பெருமாள் கோயிலில் மீண்டும் புனரமைக்கப் பெற்று நிகழ்கிறது எனில் என்னே இக்கலிகால உலகச் சமுதாயத்தின் பாக்கியம்!



கஞ்சனூர் தெட்சிணாமூர்த்தி திருவடியில் ஹரதத்தர்

✵ சுக்ரஸ்தலமாகக் கஞ்சனூர் பிரசித்தி பெறும் முன்னரேயே ஆதியாதி யுகந்தொட்டுத் துலங்கும் பழந்தொன்மையுடன் சிறப்பன கஞ்சனூரின் சிவா-விஷ்ணு ஆலயங்கள். இதில் **கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில்** ராமாயண, மஹபாரத, பாகவதப் புராண வைபவங்களிலும் பங்கேற்றுச் சிறப்பதாம்.

தை மாதத்தின் மாதாந்திர சிவராத்திரி நாளில் ஐந்து வயது சிறுவனும் ஹரதத்தரை ஆட்கொண்ட தட்சிணாமூர்த்தி

✵ அமாவாசைக்கு முந்தைய திதி தினம் அதாவது தேய்பிறை பிரதோஷ திதிக்கு அடுத்து வருவது மாதாந்திர மாதசிவராத்திரி என்பது பலரும் அறியாதது. மாசி மாதத்தின் மாதாந்திர சிவராத்திரி நாளே மஹாசிவராத்திரி தினம். இதே போல் தை அமாவாசைக்கு முதல் நாள் வரும் தேய்பிறைச் சதுர்த்தசித் திதி தினம், தை மாதத்தின் மாதாந்திர சிவராத்திரித் திருநாள் ஆகும்.

✵ சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தை மாதத்தின் மாதசிவராத்திரி விசேஷ தினத்தில்தான் கஞ்சனூர் ஆலயத்தில் தென்முகக் கடவுளாம் தட்சிணா மூர்த்தி, ஐந்து வயது சிறு பாலகனும் சுதர்ஸனனின் முன் காட்சி தந்து ஞானத்தை வார்த்தார். இக்காரணத்தால் கஞ்சனூர் அக்னீஸ்வரர் கோயிலில் மட்டுமே அபூர்வமாகக் காணப் பெறுவதாக இங்கு தக்ஷிணாமூர்த்தியின் திருவடிகளில் ஹரதத்தர் வீற்றிருப்பதை தரிசிக்கலாம். இது பற்றிய விரிவான விளக்கம் இந்நூலின் பிற்பகுதியில் வரும்.

✵ மாணிக்கவாசகர் போல் பாலஞானியாம் ஹரதத்தர் ஈசனிடம் இருந்தே உபதேசம் பெற்ற தை மாதத்தின் மாதசிவராத்திரி தினமானது, ஹரதத்தரின் குருவருளைப் பெய்யும் உத்தம அருணாசல கிரிவல மாதசிவராத்திரி தினமாகவும் பரிமளிப்பதாம். இவ்வகையில் 2.2.2019 அன்று அமையும் தை மாதத்தின் மாதசிவராத்திரி அருணாசல மாதசிவராத்திரி கிரிவல மகத்துவம் பற்றி ஸ்ரீஅகஸ்திய விஜயம் பிப்ரவரி 2019 இதழில் அளித்துள்ளோம். ஈசனும் மஹான் ஹரதத்தரும் இணைந்து படைத்த நமசிவாய பலாதி பல மந்திரத்தை ஓதி 2.2.2019 அன்று அருணாசல கிரிவலத்தை ஆற்றுதல் சிறப்பான பலன்களை நல்குவதாம். ஏனைய விளக்கங்களை இப்புத்தகத்தில் பக்கம் 50ல் காணவும். இத்தகைய அதிவிசேஷமான நாட்களை வாழ்வில் விட்டு விடாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். ✵

✵ இதிலும் புனிதச் சிறப்புடையதாக ... மஹான் ஹரதத்தர் விண்ணகத்து மஹாரதமேறிப் பலருக்கும் முக்தா முக்த முக்தியை இறையருளால் பெற்றுத் தந்தருளிய நல்வருடமான அதே விளம்பி ஆண்டின் மாசி மாதப்பிறப்பின் போது கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலானது தற்போது விஷ்ணுபதி உற்சவங் காண்பதும் கலியுகத்தாரின் அதிர்ஷ்டமே.

எவ்வாறு ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கஞ்சனூர் தலத்தில் லட்சக் கணக்கானோரின் முன்னிலையில் மஹான் ஹரதத்தர் தீமூக்காலி ஏகிய வைபவமும் - மஹான் ஹரதத்தரின் கடைக்காலத்தே புஷ்பக விமானத்தில் ஏகிய அனுபூதியும் கனிந்தனவோ - இதே போல் பக்தர்கள் லட்சக் கணக்கில் பக்தர்கள் திரண்டு விளம்பி தமிழ் ஆண்டு மாசி மாதப்பிறப்பின் (13.2.2019 சனிக்கிழமை) விஷ்ணுபதி உற்சவத்திலும் பங்கேற்க வேண்டும் என்பது விண்ணுலக, மண்ணுலகத்தாரின் சீரிய பிரார்த்தனை. இதனை நிறைவேற்றித் தர வேண்டியது உலகச் சமுதாயத்தின் அரிய திருப்பணியுமாம்.

கஞ்சனூர் பெருமாள் கோயிலின் அபூர்வமான சுதை மூர்த்திகள்

✵ கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப்பெருமாள் கோயிலில் மூலவர்களாகிய ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜ மூர்த்திகள் மூவரும் பழங்காலத்துச் சுதை வடிவம் ஆதலின் தைலக் காப்பு மட்டுமே இடப் பெறும். அபிஷேக ஆராதனைகள் உற்சவராகிய ராஜநாராயணப் பெருமாளுக்கே ஆற்றப் பெறுகின்றன. கற்சிலா வடிவத்தை விட சுதை மூர்த்திகள் பழமையும், ஏற்றமும்

மிகுந்தவை. குடந்தை - மருதாநல்லூர் அருகே நந்திவனம் ஸ்ரீவாசுதேவப் பெருமாளும் சுதை மூர்த்தியே. கஞ்சனூர், நந்திவனம் போன்று சுதை மூர்த்திக் கோயிலில் விஷ்ணுபதி உற்சவம் நிகழ்வது அபூர்வமே.

சுதர்ஸன அம்சத்தவராகக் கஞ்சனூரில் தோன்றிய மஹான் அரதத்தர்

✵ மஹான் ஹரதத்தர் இன்றையக் கலியுகக் காலத்தில் சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கஞ்சனூரில் தோன்றி, லட்சக் கணக்கானோர்க்கு ஜகத்குருவாகப் பொலிந்து உலக மக்கள் சமுதாயத்திற்கு உத்தமச் சேவைகளை ஆற்றியதும் கஞ்சனூர் தலமஹிமைக்கு மெருகூட்டி ஏற்றம் தருவதாம்.

✵ அரன் (ஹரன்) என்றால் ஈஸ்வரன். அரி (ஹரி) என்றால் பெருமாள். சுதர்ஸனன் எனும் அரதத்தர் - பரமேஸ்வர, மஹாவிஷ்ணு மூர்த்திகளின் ஆக்ஞையுடன் சுதர்ஸன அம்சத்துடன் கஞ்சனூர்த் திருத்தலத்தில் தோன்றியவர். ஐந்து வயதுச் சிறுராய்த் தம் ஆத்மா, உடல், பொருள், ஆவி அனைத்தையும் கஞ்சனூர் இறைவன், இறைவியாம் ஸ்ரீஅக்னீஸ்வரர் - கற்பகாம்பிகையின் திருவடிகளில் தத்தம் இட்டுப் பரிபூரணமாக தியாகச் சித்தத்துடன் அர்ப்பண சமர்ப்பணம் ஆற்றிய பெம்மான். இதனால் **'ஹரதத்தர் (அரதத்தர்)'** என்று சர்வேஸ்வரனாலேயே உவந்து அழைக்கப் பெற்ற உத்தம மஹாபுருஷர்.

✵ ஐந்து வயதே நிரம்பிய பாலகனும் ஹரதத்தருக்கு தென்முகக் கடவுள் நமசிவாய பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து ஸ்படிக லிங்கம், ருத்ராட்சம், ஜபமாலை, மந்திர தீட்சை, பூஜைகளுக்கான ஆகம, அனுட்டானங்களைத் தந்தருளினார்.

✵ இப்புனிதமான வைபவத் திருநாளில்

தட்சிணாமூர்த்தியின் பஞ்சாட்சர மந்திர உபதேசத்தோடு துவங்கிய முறையான பஞ்சாட்சர ஜபமானது - பல்லாயிரக் கணக்கில் ஹரதத்தரின் திருநாவிலும், மனத்திலும், உள்ளத்திலும் த்ரயம்பக மூன்று துறை ஜபமாய் தினமும் கனிந்திட ... சிறுவனும் அரதத்தன் பால பருவத்தில் இருந்தே சிவப் பழமாய், மஹாதேஜஸுடன் உலகச் சமுதாயத்தில் உலா வந்து திகழலாயினன்.

✵ சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன், விளம்பி தமிழ் ஆண்டில் உத்தராயணத்தில், ஹேமந்த ருதுக் காலத்தில் தை மாதத்தின் சுக்லபட்சம் (வளர்பிறை) பஞ்சமித் திதி திருநாளில் திருக்கயிலாயத்தில் இருந்து கஞ்சனூர் வீதிக்கே வந்தேகிய பல சூரிய கோடிப் பிரகாசத்தோடு ஒளிர்ந்த புஷ்பக விமானத்தில் - ஏனைய பக்தகோடி ஜனங்களோடு ஏகி அபூர்வமாக மானுட சரீரத்தோடே கைலாஸம் புக்கிய பெம்மான் **மஹான் அரதத்தர்.**

✵ தாம் பெற்ற கயிலாய கைவல்ய முக்தியைப் பலருக்கும் பகிர்ந்தளித்த ஆத்மசக்திப் பகலவன் ஹரதத்தர். அகஸ்திய மஹாபிரபுவின் தரிசனத்தையும் உற்றவர்.

✵ நம் பூவுலகில் மானுடரின் அறுபது ஆண்டு ஆயுள் நிறைவை **ஷஷ்டி அப்த பூர்த்தி** வைபவமாகக் கொண்டாடுவர் அல்லவா. காலத்தை யோகத்தால் கடக்கும் மஹானுபாவர்கள், திரிகால ஞானதீர்கதரிசிகள், என்றும் வாழும் ஏகாந்த ஜோதிகளான மஹான்கள் முக்தி பெறும் குருபூஜை தினமானது - பல அறுபது ஆண்டுகளைக் கடந்து - ஒவ்வொரு அறுபதாவது ஆண்டின் குருபூஜைத் திதி நன்னாளும் **ஷஷ்டிதமாப்த விமுக்தி** குருபூஜை தினமாகிச் சிறப்பதாம். இதனை நித்ய விசேஷமான ஆராதனைகளுடன் ஓராண்டுக்குக் கொண்டாடுவர்.

✫ மஹான்களின் இதிலும் குறிப்பாக ஜோதியாய்க் கலந்தோர், ஞானசம்பந்தர், ஹரதத்தர் போல் மஹாசிவரதத்தில் ஏகி திருக்கயிலாயம் புக்கியோர், பஞ்சபூதமாய்க் கரைந்து ஐக்யமானோராகிய - திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், அப்பர் சுவாமிகள், ஹரதத்தர், திருவிசநல்லூர் ஸ்ரீதர அய்யாவாள், வடலூர் வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் போன்ற ஞானியர், யோகியர், மஹரிஷிகள், ஜீவன்முக்தர்கள், மஹான்களின் ஒவ்வொரு வருடாந்திர குருஆராதனை (குருபூஜை) தினமும் பல அறுபது ஆண்டுகளைக் கடந்து என்றென்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கல்பவிருட்ச ஐஸ்வர்யமாம்.

ஹரதத்தர் ஈசனின் உபதேசம் பெற்ற தை மாதத்தைய மாதசிவராத்திரித் திருநாள்

★ **'ஆசானும் ஈசனும் ஒன்றே'** என்பதை மஹான் ஹரதத்தரின் சரிதம் மூலமாகப் புலப்பிக்கும் இந்த விளம்பி தமிழ் ஆண்டில், திருஅண்ணாமலையில் தை மாதத்தைய மாதசிவராத்திரி இரவில் (2.2.2019) அருணாசல மலைவலத்தில் நமசிவாய பஞ்சாட்சரம், பஞ்சாட்சர பலாதி பல அருமந்திரத்தை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி ஓதி கிரிவலத்தை ஆற்றித் திரண்ட குருவருளை வாழ்வில் அடைந்து கொள்ளவும்.

★ **இந்த விளம்பி வருடத் தை மாதத்தின் மாதசிவராத்திரி நாள் நாம் அறியாது நம் வாழ்வில் கடந்து விட்டதே என்று எண்ணல் வேண்டாம்.** 2.2.2019 முதல் 29.1.2020 வரை மஹான் ஹரதத்தரின் விமுக்தி குருபூஜை ஆண்டாவதால், இனி வருகின்ற எந்த மாதத்தின் மாதசிவராத்திரி, பௌர்ணமி, அமாவாசை நாளிலும் **'பஞ்சாட்சர பலாதிபல மந்திரம்'** ஓதி அருணாசல கிரிவலம், ஹரதத்தர் சப்தஸ்தானமான ஏழு சிவத்தலங்களின் வலத்தை ஆற்றிடலாம். ★

✵ இதன் காரணமாக மஹான்களை **'என்றும் வாழும் ஏகாந்த ஜோதி'** என **சத்குரு வேங்கடராம சுவாமிகள்** போற்றுவார். ஆகவே அனைத்து மஹான்களின் குருபூஜை தினத்திலும் அந்தந்த மஹானின் ஜீவசமாதி, அதிஷ்டானம், ஜீவாலய தரிசனம் புனிதமானது.

தை மாதத்தின் மாதசிவராத்திரி தினத்தில்
மஹான் ஹரதத்தர் பெற்ற இறைதரிசனம்
அருணாசல மாதசிவராத்திரி கிரிவல மஹிமை
விளம்பி ஹூ தை மீ" மாதசிவராத்திரி - 2.2.2019

✵ தினசரி மாலைப் பொழுதை நித்திய பிரதோஷமாகவும், தினசரி ராத்திரிக் காலத்தை நித்திய சிவராத்திரியாகக் கொண்டும் வழிபடுவதும் உண்டு. பைரவ உபாசனையில் நித்திய சிவராத்திரி முக்கியமான சாங்கியமாக வரும். தேய்பிறையில் வரும் பிரதோஷ நாள் இரவிலோ அல்லது மறுநாள் இரவிலோ வரும் தேய்பிறைச் சதுர்த்தசித் திதியே மாதசிவராத்திரி தினமாவதை நாம் அறிவோம். இதன்படியாக மாசி மாதத்தின் தேய்பிறைச் சதுர்த்தசித் திதியான மாதாந்திர சிவராத்திரியே மஹாசிவராத்திரித் திருநாள்.

✵ தமிழ் வருடத்தின் பன்னிரு மாதங்களின் பன்னிரெண்டு மாதசிவராத்திரி வழிபாடுகளையும் பண்டைய யுகங்களில் தேவாதி தேவர்களும், மானுடச் சமுதாயமும் திருஅண்ணாமலை, திருவானைக்கோயில், குடவாசல் அருகே ராப்பட்டீஸ்வரம் தலங்களில் மாதந்தோறும் கொண்டாடி வந்தது போல் கஞ்சனூரிலும் பன்னெடுங் காலமாக நிகழ்ந்து வந்துள்ள மாதாந்திர சிவராத்திரி வழிபாட்டைக் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் சிவாலயத்தில் மீண்டும் தொடங்கிட வேண்டும்.

☆ 'நமசிவாய' என்பது ஐந்தெழுத்துப் பஞ்சாட்சரம் 'ஓம் நமசிவாய' என்பது ஆறெழுத்து ஷடாட்சரம். இம்மாத கிரிவலத்தில் பஞ்சாட்சர மந்திரம், திருக்குறள் போல் இரண்டே வரிகளைக் கொண்ட பஞ்சாட்சர பலாதிபல மந்திரம் இரண்டையும் சத்சங்கப் பூர்வமாகப் பலரும் சேர்ந்து ஓதி, ஜபித்தவாறும், இம்மாதத்தைய அருணாசல ஹரதத்த **'கைவல்ய முக்தா முக்த முக்தாவளி'** மாதசிவராத்திரி கிரிவலத்தைக் கடைபிடித்தல் புனிதமானதாம்.

☆ இந்தத் தை மாதத்தின் மாதசிவராத்திரித் திருநாளில் ருத்ராட்சம், ருத்ராட்ச மாலை, தாமரைமணி மாலை, துளசி மணிமாலை, ஜபமாலை தரித்தும் **'நமசிவாய'** எனும் ஐந்தெழுத்துப் பஞ்சாக்கர மந்திரத்தையும், ஆசானும் ஈசனும் இணைந்து படைத்த கீழ்க்கண்ட **'பஞ்சாட்சர பலாதிபலத் துதி**யையும்' ஓதியவாறு பலருடன் சேர்ந்து சத்சங்கமாக கிரிவலம் ஆற்றுதல் புனிதமானது.

''ஞானக்ஞான ப்ரயுக்தானும் பாபானும் மஹதாமபி
ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி கீர்தனாத் ...''

'பஞ்சாட்சர பலாதிபலத் துதி' பற்றிய விளக்கத்தை பக்கம் 68ல் காணவும்.

☆ வரவளம் மிகுந்த இந்த கிரிவல வழிபாடானது இல்லறம், நாடு, உலகச் சமுதாயம், இவ்வுலகுக்கு மட்டுமன்றி , எவ்வுலகுக்கும் அருள்வதாம். வாழ்வில் நெடுங்காலமாகத் தடைபட்டு வரும் நற்காரியங்கள் நிறைவேறுவதற்குத் துணையாகும் வரவள மாதசிவராத்திரித் திருநாள்.

✵ ஆசானும் ஈசனும் உற்பவித்து ஓதி அருளிய இவ்வரிய இரு வரி பஞ்சாட்சர பலாதிபலா சுலோகத்தை இன்று முதலே தினமும் பக்திப் பூர்வமாக ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஓதி வந்தால், ... ஓரிரு நாட்களில் ... ஏன் ஒரு சில மணி நேரத்தில் கூட நன்கு மனப்பாடமாகி விடும்.

✵ எளிதில் மனனம் ஆகி மனம், உள்ளம், சித்தம், இருதயாகாசத்தில் சக்தி வாய்ந்த இந்த சுலோகத்தை இருத்திய நிலையில் இம்மாதத்தின் அருணாசல மாதசிவராத்திரி (2.2.2019) கிரிவலத்தை ஆற்றுதல் வாழ்வில் பெறுதற்கு அரிய பாக்யமும், பேறும் ஆகும். ஆசானும் ஈசனும் ஒன்றே என்பதையும் உணர்விக்கும் உத்தமத் துதி.

✵ ஆத்மாகவாக இருதயத்தில் ஈசன் வீற்றிருக்க - மனதில் ஆசானை (குருவை) பிடித்தல் பெரும் பாக்யம் அல்லவா. இதையே மாணிக்கவாசகர் 'பிடித்த பத்து' திருவாசகத்தில் 'சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்து அருள்வது இனியே' என்கிறார். இறைவனை, குருவை 'சிக்கெனப் பிடிக்கும்' வைபவத்தை நிறைவேற்றித் தரும் விளம்பி ஆண்டின் தை மாதத்தைய உத்தம சிவராத்திரி!

ஹரதத்தருக்குக் கஞ்சனூரில் தை மாதத்தின் ஔதும்பர சிவராத்திரியில் கிட்டிய சிவ்தரிசனம்

✵ கஞ்சனூரில் சுதர்ஸன விஷ்ணு அம்சமாக வைணவக் குடும்பத்தில் தோன்றியவர் சுதர்ஸனர். இவர் ஐந்து வயதிலேயே ஆத்மார்ப்பணமாக, ஆத்மார்த்தமாக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரரிடம் அர்ப்பணித்தார். அந்த க்ஷணத்தில் சாட்சாத் சர்வேஸ்வரனும் ஸ்ரீஅக்னீஸ்வரர்

ஸ்ரீகற்பகாம்பிகை சமேதராக பிரம்ம முகூர்த்த நேரத்தில் தோன்றி பாலகனும் சுதர்ஸனின் முன் காட்சி தந்தார். சுதர்ஸனருக்கு **ஹரதத்தர்** எனும் விசேஷமான பெயரையும் சூட்டி ஆட்கொண்டார்.

✵ திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலில் குருந்த மரத்தடியில் ஈஸ்வரனே ஆசான் (குரு) வடிவில் வந்து மாணிக்கவாசகப் பெம்மானுக்கு மஹாதீட்சையும், மஹாபஞ்சாக்கர மந்திர உபதேசமும் வார்த்தாற் போல் ... கஞ்சனூர் கோயிலில் சர்வேஸ்வரனும் அக்னீஸ்வர மூர்த்தி - தக்ஷிண மூர்த்தி வடிவத்திலும் தோன்றி குருமூர்த்தியாக, பிரபஞ்ச ஜகத்குரு மூர்த்தியாக அரதத்தருக்கு மஹாசிவ தீட்சையும், பஞ்சாட்சர உபதேசமும் அருளிச் செய்தார். இவ்வற்புத தினமே **தை மாதத்தின் ஔதும்பர மாதசிவராத்திரி தினம்.** மறுநாள் தை அமாவாசை. இதற்கடுத்த மாசி மாதத்தின் மாதாந்திர சிவராத்திரியே மஹாசிவராத்திரி புண்யதினம்.

✵ இதன் காரணத்தாலும் நடப்பு விளம்பி தமிழ் ஆண்டின் தை மாதத்தின் தேய்பிறைச் சதுர்த்தசி தினமான மாதாந்திர சதுர்த்தசி நன்னாளானது (2.2.2019) - அருணாசல மாதசிவராத்திரி கிரிவலத்தில் **அரதத்த கைவல்ய விமுக்த சிவராத்திரி** கிரிவல பஹுபுண்ய தினமாகவும் சிறப்பதாம்.

✵ கஞ்சனூர் மஹான், ஞானயோகி ஹரதத்தருக்கான விமுக்தி குருபூஜை
விமுக்தி குருபூஜை: 9.2.2019 சனிக்கிழமை
✵ கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயம், மஹான்

✵ 60 ஆண்டுகளுக்கு ஒரு முறையாக, நம் வாழ்நாளில் ஒரு முறை அபூர்வமாக விளம்பி தமிழ் ஆண்டில் வரும் ஹரதத்த குருஆராதனை

ஹரதத்தருக்காக இங்கு (திருமஞ்சனம்) வீதியில் உள்ள தனிக் கோயில், கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயண (வரதராஜர்) கோயில், ஹரதத்தர் சப்தஸ்தானமாக முற்காலத்திலும் இப்போதும் பிரசித்தி பெற்றுள்ள ஏழு சிவாலயங்கள் மற்றும் பற்பல ஸ்தலங்களிலும் 9.2.2019 சனிக்கிழமை அன்று ஹரதத்தரின் வருடாந்திர குருபூஜை (குருஆராதனை) நிகழ்கிறது.

✵ பொதுவாக எந்த ஒரு மஹானின் பூலோகத் தோன்றல் தினமானது **குருஜெயந்தி** எனவும் - பூலோகத்தில் அம்மஹான் தம் பூவுடலை உகுத்து முக்தி பெற்றத் திதித் திருநாள் குருபூஜையாகவும் (குருஆராதனை) கொண்டாடப்படுவதை நாமறிவோம். இவ்வகையில் நடப்பு விளம்பி தமிழ் வருடத்தின் தை மாதத்தின் சுக்ல பஞ்சமி திதி நன்ஞளே (9.2.2019) மஹான் அரதத்தருக்கான வருடாந்திர குருபூஜை, குருஆராதனை தினம்.

✵ மஹான் ஹரதத்தர், சுமார் ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் விளம்பி தமிழ் ஆண்டில் கஞ்சனூர் திருவீதிக்கு வந்தேகிய புஷ்பக ரதத்தில் ஏறி அபூர்வமாக மானுடச் சரீரத்துடனேயே கயிலாயம் புக்கிய தை மாதத்தின் சுக்ல பஞ்சமித் திதி தினமே - தற்போது நடப்பு விளம்பி தமிழ் ஆண்டில் 9.2.2019 சனிக்கிழமை அன்று பூரித்து மஹான் ஹரதத்தருக்கான **விமுக்தி குருஆராதனை (குருபூஜை)** தினமாகவும் நம் வாழ்நாளில் இப்போது கனிந்து வருவதாம்.

9.2.2019 முதல் 29.1.2020 வரை ஓராண்டுக் காலம் கொண்டாடப் பெற வேண்டிய ஹரதத்தர் விமுக்தி குருபூஜை ஆராதனை

✵ பொதுவாக அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை

இந்த பூமியில் எல்லோர்க்கும் குரு உண்டு வாழ்வில் குருவை அடையும் வழிமுறை

✵ தீயோரும், நம்பிக்கை இல்லாதோரும் திருந்தி வாழ்ந்து நற்கதி பெறுமாறும் இப்பூவுலகில் அனைவருக்குமாக குரு வாய்ப்பதை அசுரர்களுக்கு குருவான சுக்ர ரிஷியின் (பிருகு முனிவர்) சரிதம் புகட்டும். ஆனால் குருவின் மஹத்துவம் பற்றி எவ்வளவுதான் படித்தாலும், கேட்டாலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ்வில் இப்பிறவியில் தக்க குருவை தேடி நாடிப் பற்ற வேண்டுமே.

✵ தக்க குருவை நாடி, கண்டு தரிசித்துப் பற்றும் வரையில் பாம்பன் சுவாமிகள், ஹரதத்தர், மாதா அமிர்தானந்தமயீ, ராமகிருஷ்ண பரமஹம்ஸர், காஞ்சிப் பெரியவர், பூண்டி மஹான், ஷிர்டி சாய்பாபா, புட்டபர்த்தி சாய்பாபா, அரவிந்த மாதா போன்ற தனக்குப் பிடித்த மஹானை ஆன்மீக வழிகாட்டியாகக் கொண்டு அந்தந்த மஹானின் ஜீவசமாதியிலும் அல்லது அருகில் உள்ள எந்த ஜீவசமாதியிலும் தனக்குப் பிடித்த மஹானைச் சிந்தனையில் இட்டும் வழிபட்டு வர வேண்டும். இதுவும் தக்க குருவை வாழ்வில் அடையும் எளிய மார்கமாகும்.

✵ இப்பிறவிக்குள் குருவை அடைவதற்கு மஹான்களின் ஜீவசமாதி தரிசனம், குருஜெயந்தி மற்றும் குருபூஜை வழிபாடுகள் துணை புரியும். குருவை அடையும் வரையில் இடையில் ஆன்மீக வழிகாட்டிகள் வந்து செல்வர். அவரவருடைய குருவிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதும் ஆன்மீக வழிகாட்டிகளின் சீரிய பணி. ✵

அந்தந்த மஹான் முக்தி பெற்ற தமிழ் ஆண்டில் வரும் விமுக்தி குரு பூஜையை ஒரு வருடம் முழுதும் கொண்டாடும் சாங்கியமும் உண்டு.

✵ இதன்படியாக விளம்பி ஆண்டின் தை மாதத்தின் சுக்ல பஞ்சமித் திதியில் மஹாசிவரதம் ஏகி கயிலாயம் புக்கிய மஹான் ஹரதத்தரின் குரு பூஜை தினமானது நடப்பு விளம்பு ஆண்டில் தை மாதத்து சுக்ல பஞ்சமித் திதி நாளில் விமுக்தி குருபூஜையாக 9.2.2019 அன்று அமைவதால், 9.2.2019 முதல் 29.1.2020 வரையில் ஓராண்டுக் கால ஹரதத்தர் விமுக்தி குரு ஆராதனைக் காலமாகப் பண்டைய சாங்கியத்திபடியாய்க் கொண்டாடப் பெற வேண்டும்.

✵ பெரும்பாலும் நம் வாழ்நாளில் ஒரு முறையே மஹான் ஹரதத்தரின் **விமுக்த குருபூஜை** வந்தமையும் பவித்ரமான நன்னுள் என்பதால் வாழ்வில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும்.

✵ 61, 70, 80 வயதைக் கடந்தோருக்குச் சிறு வயதிலும், முதிய வயதிலுமாக இந்த விமுக்தி குருபூஜை வாழ்க்கையில் இரு முறை வாய்க்கலாம் எனினும் இவ்வைபவத்தை அச்சிறு வயதில் அறிந்திருப்பரா அல்லது அப்போது **விமுக்தி குருபூஜையாக, அந்த மஹானுக்கான ஷஷ்டிதமாப்த குருஆராதனையாகக்**

✵ பழங்காலக் கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகளின் படியாக, தமிழ்த் தாத்தா உ.வே.ஸ்வாமிநாத அய்யர் அவர்கள் - **'ஸ்ரீஹரதத்த சிவாச்சாரியாரின் மஹாயாத்திரை கலியப்தம் 3974 விளம்பி வருஷம் தை மாசம் சுக்லபட்ச பஞ்சமி'** என்ற அரிய ஆன்மீக சரித்திரக் குறிப்பைப் பொறித்துள்ளார். (திருத்தலங்கள் வரலாறு நூல்).

கடைபிடிக்கப் பெற்றதா என்பதும் நினைவில் இராது அல்லவா. மேலும் ஹரதத்தரின் குருகுலவாச அனுபூதிகளை, திவ்யமான சரிதத்தை, இவ்விதழில் காண்பது போல் விரிந்த விளக்கங்களுடன் அறிந்த பின் பலருக்கும் எடுத்துரைத்து மஹான் ஹரதத்தரின் விமுக்தி குருபூஜையில் பங்கேற்கும் போது இதன் மஹத்துவமே தனிதான்.

✡ சுதர்ஸன அம்ஸசுதர் மஹான் ஸ்ரீஹரதத்தரின் விளம்பி தமிழ் ஹூ பரிசரா கபீர பிபர்த்த ஷஷ்டிதமாப்த குருபூஜை

✡ சிதம்பரம் அருகே ஆச்சாள்புரத்தில் ஆளுடைய பிள்ளையாம் திருஞான சம்பந்தர்பிரானுக்கென விசேஷ வைபவமாக சர்வேஸ்வரன் அனுப்பி வைத்த கயிலாய விமானமானது, ஆச்சாள்புரம் ஆலயவளாகத்துள் வந்தேகியது. அப்போது சம்பந்தர்பிரானோடு, அவர்தம் பத்னியார் பூர்ண தோத்ராம்பிகை, முருகநாயனர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் போன்ற நாயன்மார்கள், காகபுஜண்ட மஹரிஷியோடு ஏனையோரையும் நொடித்தான்மலை எனப்படும் கைலாசத்திற்கு அச்சிவமஹாரதம் அழைத்துச் சென்றது.

✡ இதே போல், இற்றைக்கு ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ... இதே விளம்பி தமிழ் வருடத்தின் தை மாதத்தின் சுக்ல பஞ்சமித் திதி நாளில், மஹான் ஹரதத்தருக்காக சர்வேஸ்வர மூர்த்தி அனுப்பிய கயிலாய மஹாரதம் திருக்கயிலாயத்தில் இருந்து கஞ்சனூர் ஸ்தலத்தின் திருவீதிக்கே வந்தேகியது.

✡ பல கோடானு கோடி சூரியப் பிரகாசம் நிறைந்த இந்த மஹாசிவரதத்தில் மஹான் ஹரதத்தர் ஆனந்தத்துடன் உடன் வந்த பலரையும் ஏற்றி முக்தி மார்கத்தில் இட்டு அபூர்வமாக மானுட சரீரத்தோடே அனைவரோடும் திருக்கயிலாயம் புக்கினர்.

✵ அதுபோது கடைசி நேரத்தில் வந்த ஒரு நாயொன்று, 'சுவாமி! நாயினும் கடையேனுகிய அடியேனுக்கு இந்த மஹாசிவரதத்தில் ஏறும் பாக்யம் உண்டா?' என்று ஹரதத்தரிடம் பவ்யமாகப் பணிந்து கேட்டு நின்ற போது, மஹான் ஹரதத்தர் அதற்கும் நற்கதி அளித்து கயிலாயத் தேரினுள் இட்டுச் சென்றார். **மானுடர் முதல், பறவை, நாய் உள்ளிட்டு எந்த ஜீவனுக்கும் குரு மூலமாகவே நற்கதி, முக்தி, மோட்சம் எல்லாம் கிட்டும் என்பதற்கான நற்பாடமிது.**

✵ மஹான் ஹரதத்தர் குரு ஆராதனை தினம் 9.2.2019 சனிக்கிழமை

✵ ஸ்ரீஹரதத்தர் கயிலாயமஹாரதம் ஏகி முக்தி உற்ற தமிழ் ஆண்டு: கலியுகாதி 3974

✵ நடப்புக் கலியுகாதி ஆண்டு - 5120

✵ மஹான் ஸ்ரீஹரதத்தருக்கான 1146ம் ஆண்டு குருஆராதனை

✵ தற்போதைய விளம்பி தமிழ் ஆண்டின் தை மாதத்தைய சுக்ல பட்சமித் திருநாளில் 9.2.2019 அன்று வரும் மஹான் ஹரதத்தரின் குருபூஜை, அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறையே வரும் **விமுக்தி குருபூஜை** குருபூஜையாகவும் வந்தமைவது நாம் இப்பூவுலக வாழ்வில் பெற்ற அரும்பெரும் பாக்யமாம்.

✵ மஹான் ஹரதத்தருக்கான வருடாந்திர குருபூஜை ஆண்டு தோறும் கஞ்சனூரில் கைலாஸ கமன உற்சவமாகத் தற்போது நிகழ்ந்து வருகிறது. முற்காலத்தில் வருடாந்திர குரு ஆராதனையும், அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் விளம்பி ஆண்டின் குருபூஜையும் பிரும்மாண்டமான அளவில் முற்காலத்தில் கஞ்சனூரில் கொண்டாடப்பட்டு வந்தது. இவற்றைக் கஞ்சனூரில் மீண்டும் புனரமைக்கவும்.

★ காவிரி மஹாபுஷ்கரம், தாமிரபரணி புஷ்கரம் போன்று நம் வாழ்வில் ஒரு முறையே வந்தமையும் - மஹான் ஹரதத்தருக்கான இத்தகைய ஷஷ்டிதமாப்த விமுக்தி குருபூஜையில் (குரு ஆராதனை) - நம்மால் இயன்ற அளவில் பங்கேற்பதும், பலருக்கும் அறிவிப்பதும் புனிதமான திருப்பணி.

★ இவ்வரிய சேவை மூலம் உத்தமச் சித்புருஷர்கள், மஹரிஷிகள், ஞானியர், யோகியர், பரமஹம்ஸர்கள், ஜீவன்முக்தர்கள், ஜிங்ஞாசுக்கள், சத்குருபிரான்களின் குருவருள் சகிதம் -சர்வேஸ்வரனும் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் - ஸ்ரீகற்பகாம்பிகை, கஞ்சனூர் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவரதராஜப் பெருமாள், ஸ்ரீராஜநாராயணப் பெருமாளை வழிபட்டுத் திரண்ட குருவருளுடன் திருவருளை உய்ப்போமாக.

வேதாக்னிச் சிவப்பழமாக அரதத்தர் பிரகாசித்த அற்புத வைபவம்

★ மானுட வாழ்வில் திருந்தி வாழ்தல் என்பது வைராக்ய சித்யோகம் என்பார் **சத்குரு வேங்கடராம சுவாமி**. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ... அறியாமை, அகங்காரத்தாலும், தக்க ஆன்மீக வழிகாட்டி, குருவை வாழ்வில் பெறுமையாலும், அறிவு கர்வத்தாலும் பலரிடம் சைவநிந்தை சற்றே பெருகி இருந்த காலமது. அப்பொழுது சைவத்தின் மகத்துவத்தை உலகத்தார்க்கு எடுத்துரைக்கும் கடமையை இறைவனே ஹரதத்தருக்கு அளித்து, அவரைக் கஞ்சனூரில் வைணவக் குடும்பத்தில் தோற்றுவித்தார்.

★ இரண்டு வயது பாலகனாக நடக்கும் பருவத்தில் இருந்தே ருத்ராட்சம், திருநீறு இவற்றோடு சுதர்ஸனராம்

ஹரதத்தர் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயிலில் நிதமும் நெடுநேரம் வழிபட்டு நமச்சிவாய பஞ்சாட்சரத்தை ஒவ்வொரு வேளையிலும் பக்தி சிரத்தையுடன் ஆயிரக் கணக்கில் ஓதி, ஜபித்து வந்தார். இடைவிடாத நித்திய பஞ்சாட்சர ஜப, தவ, தியான யோகத்தால் சிறுவனின் திருமேனியிலும் இதற்கு அப்பாலுமாக சிறுவன் அரதத்தர் தேஜோமயப் பிரகாசத்துடன் திகழ்ந்தான்.

✵ கஞ்சனூரில் பக்திப் பிரவாகத்துடன் வாழ்ந்த அரதத்தரைப் பலரும் பொறாமையால் நிந்தனை செய்து வந்தனர். சுதர்ஸனர் நிதமும் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயத்தில் ஆழ்ந்த தியானத்தில் நெடுநேரம் லயித்துக் கிடப்பார். இவருடைய யோகநிலையைக் கலைக்க விருப்பமின்றி இரவில் ஆலயத்தில் இவரை இருத்தி விட்டு ஆலய நடையை சார்த்திச் செல்வர். இரவில் ஆலய நடையைச் சார்த்தும் போது எந்த வகை யோகாசனத்தில், எந்த வகை தியானத்தில் சிறுவன் அரதத்தன் காணப் பெற்றானோ - அதே யோகாசனத்தில், அதே தியான நிலையில், காலையில் நடை திறக்கும் போது வீற்றிருக்கக் கண்டு அனைவரும் அதிசயிப்பர்.



ஜனவரி 2019 அட்டைப்படம்

✵ சுதர்ஸனின் கனிந்த ஆத்மப் பரிபக்குவத்தையும் இதன் மூலம் உலகச் சமுதாயம் அறியலாயிற்று. ஒரே இடத்தில் அங்க அசைவு ஏதும் இன்றி நீண்ட நேரம் மௌனத்துடன் ஆற்றுவது காஷ்ட

யோகம். இவ்வாறு ஆற்றி (உ)வந்தவர் காஞ்சி பரமாச்சார்ய சுவாமிகள்.

✵ தினமுமே நெடுநேர ஜபதவ தியானத்தில் திளைக்கும் ஆன்மீக லயிப்பானது, சிறுவன் அரதத்தனுக்கு குழந்தைப் பருவத்திலேயே அபூர்வமாகக் கை கூடி வந்ததும் குருவருளாலும், திருவருளாலுமாம். ஆம், அரதத்தருக்கு 'குருவாய் உருவாய் உளதாய் இலதாய் சர்வ வியாபியாய்' அக்னீஸ்வரர் காட்சி தந்து தட்சிணா மூர்த்தியாகவும் நேரடி உபதேசமும் தந்த வைபவமும் பாலபருவத்திலேயே ஐந்து வயதின்பால் கனிந்ததை ஏற்கனவே கண்டோம்.

✵ சுதர்ஸனன் வைணவக் குடும்பத்தில் பிறந்து சிவபக்தியில் மூழ்கி இருப்பது குறித்து உற்றம், சுற்றத்தினர் மனத்தாங்கல் கொண்டனர். இவர்களின் அழுத்தத்தால் தந்தையாரும் சினத்தில் ஒரு நாள் சிறுவனை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டார்.

✵ எனினும் சுதர்ஸனர் பசியால் வதங்கினார் இல்லை. பத்து மாதம் சுமந்து பெற்ற மாதாதான் தவித்துப் போனார். தாயார் புதல்வனின் தெய்வீக அம்சத்தை உணர்ந்தவர், எனினும் பொறுமை காத்தார். அன்றைய தினம் முழுதும் தங்க இடமின்றியும், உணவில்லாத போதும் ஆன்மப் பசி, ஆத்மதாகம் மட்டுமே வழக்கம் போல் சுதர்ஸனனைப் பற்றின. பச்சிளங் குழந்தையாக சீர்காழி ஆலயத்தின் பிரம்ம தீர்த்தக் குளக்கரையில் திருஞான சம்பந்தர் பசியால் வாடிய போது அம்பிகைதானே பொற்கிண்ணத்தில் ஞானப்பாலை ஈந்து ஊட்டின திவ்ய சரிதத்தை யாவரும் அறிவர்.

✵ ஐந்து வயதுச் சிறுவன் சுதர்ஸனன் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயிலில் தட்சிணா மூர்த்தி சன்னிதியை அடைந்தனன். அன்றும் வழக்கம் போல் இரவில் சுதர்ஸனனை தட்சிணா மூர்த்தி சன்னிதியிலேயே இட்டு விட்டு ஆலய நடையைச் சார்த்திச் சென்றனர்.

இறைவனே நேரில் பக்தி, ஞானம், வேதம், ஊட்டிய ஹரதத்தர் சரிதப் படலம்

✵ இரவு முழுதும் சுதர்ஸனன் இறைவனிடம் பிரார்த்தித்துத் தன்னை இகபர சுகத்தில் இருந்து விடுவித்துத் தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டி நின்றான்.

✵ சர்வேஸ்வரனும் கற்பகாம்பிகை சமேத அக்னீஸ்வரராயும், தட்சிணா மூர்த்தியாகவும் காட்சி தந்து சுதர்ஸனனுக்கு நால்வேதங்கள், ஆறு அங்கங்கள், அறுபத்து நான்கு கலைகளையும் நேத்ர தீட்சை, ஸ்பரிச தீட்சை, விபூதி தீட்சையாகப் பலவிதங்களில் புகட்டினார். இவ்வகையில் ஆய கலைகள் அறுபத்து நான்கும், இன்னோரன்ன ஞானம் யாவும் அனைத்தும் கடவுள் அருளால் ஸ்வயம்புச் செல்வமாக அடையப் பெற்றான் சுதர்ஸனன்.

தை மாதத்தின் மாதசிவராத்திரி நாளில் பிரம்ம முகூர்த்த நேரத்தில் தோன்றி உபதேசத்தை வார்த்த இறைவன் ஐந்து வயது பாலகனும் சுதர்ஸனனுக்கு இவ்வாறு கட்டளை இட்டார். ''ஹரதத்தா! இனி இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, யாமிடும் இனிய அருட்பணியை உயர்ந்த உத்வேகம், ஒப்பிலா ஆத்மசக்தியுடன் இவ்வுலகச் சமுதாயத்தில் ஆற்றி சிவபரத்வத்தை நிலை நாட்டி வருவாயாக! யாம் என்றென்றும் எந்நேரமும் நீயே உணரும்படியாக நின்னுடன் இருந்தருள்வோம்!'' - தட்சிணா மூர்த்தியின் ஞானத்திருவாய்மொழி வாக்கிது.

அரதத்தர்




✵ சகலகலா வல்லுனராக, பக்திச் செல்வம், வேதச்செல்வம், ஞானச்செல்வம், வித்யாசெல்வம், அருட்செல்வம் ஆகிய

ஐந்து பஞ்சசெல்வங்களும் நிறைந்தவனுக ஐந்து வயது பாலக தேஜோமய ஸ்வரூபனுய் ஒளிப் பிரகாசம் நிறைந்த வதனத்துடன் ஆலயத்தில் இருந்து வெளிவரக் கண்டு ஊரார் வியந்து சாஷ்டாங்கமாக வீதியிலேயே வீழ்ந்து வணங்கினர்.

✵ ஹரதத்தனுக இப்போது ஈஸ்வர வாக்குப்படிக் கனிந்த சுதர்ஸனன் இறைவன் கட்டளைப்படி, இல்லம் திரும்பினுன். தந்தை வெகுண்டார். முதல் நாள் வரையில் வேதப்படிப்பை இன்னமும் துவங்காத அரதத்தர் இன்று வேதம், ஆகமம், சாத்திரம், உபநிடத, புராணங்களின் சாரத்தை - சரளமாக உரைப்பது கண்டு 'ஓரிரவில் இவ்வளவு வானளாவிய ஞானம் பூரித்ததா?'' என்றெண்ணி முதலில் தந்தையே வியந்து நின்ருர்தாம்.

எனினும் நிந்தனையாளர்கள் சினத்திலே இருந்தனர். இப்போது பொருமையாளர்களின் வாதங்களுக்கு, ஹரதத்தர் தக்க வேதமந்திரங்கள், புராணங்களில் இருந்து ஆழ்ந்த விளக்கம் தந்திடவே அவர்கள் ஒரு புறம் அவன்தன் அபார வேதஞானம் கண்டு அதிர்ந்து வியந்தாலும் மறுபுறமோ சினத்தழலார் ஆயினர். தந்தை தம் பிள்ளையின் அரிய ஞானத்தை ஒரு சிறிதேனும் உணர வந்தாலும். உற்றம், சுற்றத்தின் சினம் பெருத்தது. ஹரதத்தரின் தந்தையார் தம் பிள்ளைப் பேற்றுக்காக ஏங்கித் திருமாலிடம் பிரார்த்தனை செய்ததையும், பெருமாள் அவருடைய கனவில் தோன்றி 'நின் குடும்பத்தில் யாமே சுதர்ஸன அம்சத்துடன் தோன்றுவோம்' என்று வாக்கருளியதையும் மறந்தவரானுர் போலும்.


அரதத்தர்

✵ அனல் பொங்கும் தீயினுள் அமர்ந்து சிவபரத்வத்தை நிலைநாட்டிய ஐந்து வயது பாலஞானி அரதத்தர்

✵ இப்போது சுதர்ஸனன் சர்வேஸ்வரனால் அரதத்தர் எனப் பெயரிடப்பட்டு முன்னை விட அதீதமான தேஜோ மயத்துடன் வேதவித்தாகவும், ஞானப் பிரகாசத்துடனும் பொலிந்து சிறந்து விளங்குவதைக் கண்டு பொறாதோர் கொதித்தெழுந்தனர்.

''கொழுந்து விட்டெறியும் தீக்குழிக்குள் வெந்து சுடும் இரும்பு முக்காலியில் (தீமுக்காலி) அமர்ந்து சிவபரத்வத்தை உணர்த்துவாயாகில் யாமும் ஏற்போம்!'' என்று கடுமையான நியதியை சுதர்ஸனனுக்கு இட்டனர். அக்னீஸ்வரரின் இறையருளால் இச்சோதனையை மனமுவந்து ஏற்றான் சிறுவன் அரதத்தன்.

✵ சுதர்ஸனனைக் கடுமையான சோதனைக்கு ஆட்படுத்தியோர், அக்னிச் சோதனையை சிவாலயத்தில் அல்லாது கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயத்தில் நிகழ்த்தி எரிதழலின் உள்ளே சுதர்ஸனன் அமர்ந்து காட்டிப் புலப்படுத்த வேண்டும் என்றும் நியதித்தனர்.



தீ முக்காலியில் அரதத்தர்

பிறர் கண்களுக்குத்தான் இது சோதனையாகத் தென்பட்டதே தவிர - எரியும் சுண்ணாம்புக் காளவாயில் இடப்பட்ட அப்பர் சுவாமிகளுக்கு சுண்ணாம்புக் காளவாயானது குளிர்ந்த கயிலாயச் சிகரவளாகமாக் ஈஸ்வரன் ஆக்கித் தந்தது போலவும் - சம்பந்தர்பிரான் போல் ஞானக் குழந்தையான அரதத்தருக்கு இது

ஈசனின் பிறிதொரு இறைத் திருவிளையாடல் என்ற உண்மை புலப்பட்டது.

✵ இப்போதிருக்கும் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணர் (ஸ்ரீவரதராஜர்) பெருமாள் கோயிலில்தான் அக்காலத்தே இந்தத் தீமுக்காலி பரீட்சை வைபவம் நிகழ்ந்தது. ஸ்ரீராஜநாராயணர் கோயிலில் கருடாழ்வாருக்கும், மூலத்தானப் பெருமாளுக்கும் இடையே மத்ய மண்டபத்தில் ஆழ்ந்த பள்ளத்தில் ஆயிரக் கணக்கான விறகுகளை வைத்துப் பத்துப் பதினைந்து அடி உயரத்துக்குத் தீயை எழுப்பினர். உயர எழுந்த பலத்தத் தீக்குள் இரும்பு முக்காலியை வைத்து பழுத்துச் சிவக்க வைத்தனர். இந்த ஹோமகுண்டத்தை இன்றும் கஞ்சனூர் பெருமாள் கோயிலில் தரிசிக்கலாம். ஆயிரக் கணக்கான விறகுகளின் அக்னி ஜ்வாலையின் ஊடே கிடந்த தீமுக்காலியில் சுதர்ஸனனை அமரும்படி ஆணை இட்டனர்.

✵ ஐந்து வயது பாலகனும் அரதத்தனும் சிவன் கோயிலில் ஸ்ரீஅக்னீஸ்வரர், கற்பகாம்பிகை, தட்சிணாமூர்த்தியை வழிபட்டு ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் (ஸ்ரீவரதராஜர்) கோயிலுக்கு பக்தியுடன் ஏகினன். ஸ்ரீவரதராஜர், ஸ்ரீராஜ நாராயண மூர்த்திகளை வணங்கினன். கொழுந்து விட்டு எரியும் அக்னிப் பிரவாகத்தின் ஊடே அமைதியாக பக்திநடை பூண்டு நடந்து சென்று நெருப்பின் நடுவே செக்கச் செவேலென்று அக்னியில் பழுக்கச் சிவந்த தீ முக்காலியில் சாந்தம், தேஜஸ் பொங்க அரதத்தர் அமர்ந்தது கண்டு ... ஒரு புறம் வேதனை கொண்டாலும் மறுபுறம் அங்கு கூடியிருந்த லட்சக் கணக்கானோர் அனைவரும் அதிசயித்து கரகோஷித்து சிறுவனும் அரதத்தனை நோக்கி சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினர்.

✵ இலங்கையில் கொடிய அரக்கர்கள் அனுமாரின் புனிதமான வாயிலுக்குத் தீயிட்ட போது, சீதாபிராட்டியார்

அக்னிலக்ஷ்மீ, தீபலக்ஷ்மி தேவியாகவும் தம் திருவருளை வர்ஷித்து அனுமானின் வால் நெருப்பைக் குளிர்வித்து அருளினள் அன்றோ!

❋ கஞ்சனூர் அக்னீஸ்வரரின் ஆணைப்படியாக, பாலகனும் அரதத்தனின் தேஜோமயப் பிரகாசம் கண்டு ஆனந்தித்த அக்னி பகவான், சீதளாம்பாள், தீபாம்பாள், அக்னிலக்ஷ்மீ, தீபலக்ஷ்மீ போன்ற அக்னிரூப மூர்த்திகள் பச்சிளஞ் சிறுவனின் பக்தியை போஷித்து அந்த அகண்ட நெருப்புக் குழியின் வெப்பத்தைக் கயிலாயப் பனிச் சிகரமாகக் குளிர்விக்கும் இந்த தெய்வீகப் பின்னணியை யாரறிவர்?

❋ அக்னி ஜ்வலிக்கும் ஜோதி ஸ்வரூபமான சுதர்ஸனத்தின் அம்சத்தோடு பூமிக்கு வந்த ஹரதத்தருக்கு ஏது உஷ்ணம்? ஆனால் இதை உலகத்தார் நம்ப வேண்டுமே! ஆழ்ந்த நம்பிக்கை எதையும் சாதிக்கும், எத்தகையப் பண்டைய அனுபூதியையும், இறைதரிசனத்தையும் தருவிக்கும்.

❋ பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தீ முக்காலி மேல் நின்றும் அமர்ந்தும் கிடந்தும் நடந்தும் உய்ந்த சிறுவனும் அரதத்தர் - ஆங்கே சுற்றிலும் கூடி இருந்த பழுத்த வேத பண்டிதர்களும், முதிய வேதவித்துக்களும், அறிவுவான்களும் அறியாத கடினமான வேதமந்திரங்கள், புராண வைபவங்கள், சுலோகங்கள், மாஹேஸ்வரச் சூத்திரங்களையும் இன்னோரன்ன பலவற்றையும் ஓதி, பற்பலப் பிரமாணங்களைப் புலப்படுத்தி சைவத்வத்தை நிலை நாட்டினன்.

❋ நூற்றுக் கணக்கான வேதவிற்பன்னர்களின் வாதப்புனல் ஊடே, பொறி பறக்கம் அக்னியின் ஊடே

அமர்ந்து ஐந்து வயது பாலன் அரதத்தர் சிவபரத்வத்தை நிலை நாட்டக் கண்டு, முப்பத்து முக்கோடி தேவர்களும் உடனடியாக ஆங்கே பிரசன்னமாகி நறுமணப் பூக்களை வர்ஷித்து, மஞ்சளாட்சதைகளைப் பெய்து ஆசீர்வதித்தனர். ஆங்கே கூடியிருந்த வேதவிற்பன்னர்களும், பண்டிதர்களும், பல்துறை ஞானவான்களும், கலைவாணர்களும், சூக்குமமாய் வந்தேகிய லட்சக் கணக்கான தேவாதி தேவர்கள், சிவகணங்கள், வைகுண்டபதிகள், ஜனங்களும் கரகோஷம் செய்து சிறுவனை உளமாரப் போற்றினர்.

✵ அதுகாறும் அரதத்தரை நிந்தனை செய்து வந்தோரும், இப்போது முழுதுமாக மனம் திருந்தினர். வாழ்வில் திருந்துதலும் பிறவிப் பிணிக்கான அத்யாவசியமான மாமருந்து. இவர்கள் யாவரும் ஆங்கே தோன்றிய சிவா, விஷ்ணு மூர்த்திகளை வணங்கி, ''ஞானக்குழந்தையாம் அரதத்தனால்தான் எங்களுக்கு தெய்வ தரிசனம் வாய்த்தது' என்று மனம் உருகக் கூறி ஒப்பி சிறுவனும் அரதத்தரிடமும் மன்னிப்புக் கோரி சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்தனர்.



ஹரதத்தர்

✵ வாழ்க்கையில் திருந்துதல் படலம் வெகு முக்கியமானது. இதன் பிறகே முக்தியின் முதல் வாசலே தென்படும் என்பார் **சத்குரு வேங்கடராம சுவாமி.**

✵ பெரியோர்கள் தன்னை வணங்குவதை சிறுவன் அரதத்தர் ஏற்க மனம் ஒப்பவில்லைதான். ஆகவே கொழுந்து விட்டெறியும் தீக்குள் இருந்தவாறு எட்டுத் திக்குகளிலும் சாஷ்டாங்கமாக வீழ்ந்து அனைவரையும் நமஸ்கரித்தான் பாலகனும் அரதத்தர்.

கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் அபூர்வமான சிவன் சன்னிதி காஞ்சி பரமாச்சார்யாள் சுவாமிகள் வழிபட்ட கஞ்சனூர் பெருமாள் கோயில் சிவலிங்கம்

✵ மேற்கண்ட வைபவத்தில் ... கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில் ஆலயப் பரவெளியில் கோடானு கோடி தேவர்களும், சுற்றிலும் லட்சக்கணக்கான பக்தகோடிகள் குழுமியிருக்க, பரந்து அகன்ற தீக்குழியின் உள்ளும் வெளியும், மேலும் கீழுமாய்ச் சுற்றிலும் அக்னிப்பிழம்பு தகிக்க ... இதன் நடுவில் நெருப்பிற் பழுத்த தீ முக்காலியில் ஐந்து வயதுச் சிறுவனும் அரதத்தர் சாந்தமாக அமர்ந்து சிவபரத்துவத்தை உலகச் சமுதாயத்தார்க்கு உணர்த்திட...

ஆங்கே சாட்சாத் அக்னீஸ்வரரும், கற்பகாம்பிகையும் பெருமாள் கோயிலின் மத்திய மண்டபத்தில் மும்மூர்த்திகள் சகிதமாக நேரிலேயே காட்சி தர ... தனக்கு மட்டும் கிட்டிய இந்த தெய்வ தரிசனத்தை அங்கு கூடி இருக்கும் லட்சக் கணக்கானோரும் பெற வேண்டும் என்றும் ஹரதத்தர் பிராத்தித்திடவே ... சிவ, பார்வதி மூர்த்தியர் இருவரும் தூலமாகவும், சூக்கும ஒளிப் பிழம்பாகவும் அங்கே கூடி இருந்த அனைவருக்கும் காட்சி தந்தருளினர்.

✵ வருங்காலத்தாரும் இந்த தெய்வ தரிசனத்தை அடையும் வகையிலும் அருளுமாறும் மஹான் ஹரதத்தரோடு அங்கு கூடி இருந்த லட்சக் கணக்கான பக்தர்களும் சேர்ந்து விசேஷமாக வேண்டிடவே ... கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் கோயிலிலேயே இறைவன் அக்னீஸ்வர சிவலிங்கமாகவும் அம்பிகையோடு காட்சி தந்தார். இச்சிவலிங்கமே கஞ்சனூர் பெருமாள் கோயிலின் சிவசன்னிதியில் பக்தர்களுக்காக வாத்ஸல்யத்துடன் எழுந்தருளி இருக்கும் அக்னீஸ்வர வடிவான **'பக்தவத்ஸலர்'.**

✵ காஞ்சி பரமாச்சார்யாள் சுவாமிகள் கும்பகோணத்தைத் தலைமையகமாகக் கொண்ட போதும், பல சோழதேச விஜயங்கள், பல துலா ஸ்நான யாத்திரைகளின் போதும் கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் உள்ள இவ்வற்புதச் சிவலிங்கத்தை வழிபட்டுள்ளார். இப்பெருமாள் கோயிலில் அக்னீஸ்வர (பக்தவத்ஸலர்) லிங்கம் சற்றுச் சாய்ந்திருப்பதன் மகத்துவத்தையும் பல மஹான்கள் விளக்கி உள்ளனர்.

✵ சிவன், விஷ்ணு இரு மூர்த்திகளுக்கும் உரித்தான தெய்வநாமம் **பக்தவத்ஸலம்.** நூற்றெட்டு திவ்ய தேசங்களுள் ஒன்றான (சென்னை ஆவடி அருகே) திருநின்றியூரில் ஸ்ரீபக்தவத்ஸலப் பெருமாள் அருள்கின்றார். தேவாரத் தலமான தொன்மையான திருக்கழுக்குன்றம் சிவாலயத்தில் சர்வேஸ்வரனின் திருநாமம் பக்தவத்ஸல மூர்த்தி.

✵ கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணர் கோயிலின் சிவன் சன்னிதியில் சிவலிங்கம், அம்பிகை, நரசிம்மர், தீமுக்காலியில் நின்று வணங்கும் ஹரதத்தர் சிலா ரூபங்களை தரிசிக்கலாம். வைணவ திவ்யதேசம் திருக்குறுங்குடி போல் அபூர்வமாக சிவன் சன்னதியைக் கொண்டது கஞ்சனூர் பெருமாள் ஆலயம்.

ஈசனே ஹரத்தருக்கு தந்தருளிய திருவடி தீட்சை 'மஹான் ஹரதத்தர் மஹாத்மியம்'

✵ இறையடியார்களை போஷிக்கும் சேவைகளான அதிதி சத்காரம் (அடியார்களை போஷித்தல்), ம(ா)ஹேஸ்வரப் பூஜையையும் ஆற்றியவாறாக தினமும் ஆயிரக் கணக்கான பக்தர்களோடு **திருகோடிக்காவல், திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர்** ஆகிய ஏழு தலங்களிலும் வழிபடுவதையும் மஹான் அரதத்தர் சிறு வயதில் இருந்தே முறையாக ஆற்றி வந்தார்.

✵ தம் வறுமையின் ஊடேயும் இறையடியார்களை எவ்வித பேதமும் இன்றி உளமுருகி உபசரித்து அவருக்கு ஆவன செய்து உதவிடுவார்.

✵ ஒரு முறை ... கஞ்சனூரின் காவிரிக் கரையில் ஒரு பாமர தம்பதியர் ஆற்றுக்கு மறுபுறம் செல்ல வேண்டியதிருந்தது. மனைவியார் நதியின் குறுக்கே நடந்து செல்வதற்காக யோசித்தார், மனம் ஒப்பவில்லை. அப்போது அந்த பாமர உத்தமப் புருஷர் தன் பத்னியிடம் கூறிய ஆத்மசக்தி மிகுந்த வார்த்தைகளைக் கேட்டு மஹான் ஹரதத்தர் பரவசம் அடைந்தார்.

✵ அந்தப் பாமரர் தன் பத்னியிடம் கூறியதாவது: "அம்மணி கற்பகம்! கங்கையே காவிரி. காவிரியே கங்கை! சிவபெருமான் தலையில் இருந்து பூமிக்கு வரும் நதியின் கீழிருக்கும் ஒவ்வொரு மண்ணும் சிவலிங்கமே, சிவலிங்கமே! எனவே நாம் நதியின் குறுக்கே நடக்கலாகாது, சற்று நடந்து சென்று மூங்கில் பாலம் வழியாகச் சென்று அக்கரை செல்லலாம்!" எனக் கூறக் கேட்ட அரதத்தர் ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

"காவிரியின் ஒவ்வொரு மண் துகளும் லிங்கமே என்று உணரும் சீரிய பக்தியை அடியேன் இன்னமும் பெறவில்லையே சுவாமி! நீரே புனிதப் பெரியார்' என அரதத்தர் நெக்குருகி உரைத்து, அப்பாமரரின் பாதணியைத் தன் சிரசில் வைத்துக் கொண்டு சாஷ்டாங்கமாக வணங்கி உய்ந்தார்.

✵ அப்பாமரர் பதறிப் போய், "ஐயா! வேதவித்தான தாங்கள் எங்கே! படிப்பறிவில்லாத அடியேன் எங்கே?" என்று கூறி அரதத்தரைத் தடுக்க முயன்றார். ஆனால் அரதத்தரோ அவருடைய திருவடியைத் தன் தலை மேல் வைத்து வணங்கிப் பாதபூஜை ஆற்றினார்.

☆ அந்தப் பாமர தம்பதி வடிவில் கஞ்சனூர் காவிரிக் கரைக்கு வந்து அரதத்தரைச் சோதித்தது பார்வதி, பரமேஸ்வர மூர்த்திகள் ஆதலின், இவ்வற்புத வைபவமே அரதத்தருக்கு ஈஸ்வரனுரின் திருவடி தீட்சையுமாகக் கனிந்தது.

☆ மாணிக்கவாசகருக்குத் திருவிடைமருதூரிலும், அப்பர் பெருமானுக்குத் திருநல்லூரிலும், சுந்தர மூர்த்தி நாயஞருக்கு அதிவீரட்டானத்திலும் (திருவதிகை - பண்ருட்டி) ஈசனின் திருவடி தீட்சை கிட்டியது.

☆ அரதத்தர் பக்திச் செல்வம் நிறைந்தவர் ஆயினும் தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாது கஞ்சனூரிலேயே எளிய தவக்குடிலே அமைத்து இல்லற தர்மத்தைத் தழுவி பத்து சந்ததியருடன் எளிமையாக ஏழையாகவே வாழ்ந்தார். தன் முன் மன்னர்கள் வந்து பணிந்து நின்ற போதிலும் தாஞக எதையும் கேட்டுப் பெருது, அப்படியே அவர்கள் தந்தாலும் உடனடியாக இறைச்சேவை, இறையடியார்களின் சேவையில் அதனே இட்டு வறுமையைத் தழுவி வாழ்ந்த பக்திசெல்வச் செம்மல் அரதத்தர்பிரான்.

'மாண்டோரை' மீட்டு ஆத்ம தரிசனத்தை உணர்த்தி முக்தி மார்கம் தந்த படலம்'
'மஹான் ஹரதத்தர்' சரிதம் காட்டும் அற்புத வைபவங்கள், புகட்டும் பாடங்கள்

☆ கஞ்சனூரில் ஒரு அன்பருக்கு பக்தி மிகுந்த இரு பிள்ளேகள் இருந்தனர். ஒரே நாளில் துரதிருஷ்ட்ர வசமாக ஒரு பிள்ளேயை அரவம் தீண்டிட, மற்ருெரு பிள்ளேயும் கடுமையான வாந்திபேதிக்கும் ஆட்பட இரு பிள்ளேச் செல்வங்களேயும் ஒரே நாளில் அவ்வன்பர் இழந்தார். வெகுவாக துக்கப்பட்டு உடனே ஹரதத்தரிடம் சென்று இது பற்றிக் கூறி தன் கடுத்த விதி பற்றி நொந்து கொண்டார்.

''சுவாமி! ஒரே நாளில் இரு பவித்ரமான புத்திரர்களையும் இந்நாளில் இழந்து அடியேன் வாடி வதங்கி நிற்கின்றேன். இந்நிலையில் 'எல்லாம் இறைவன் செயல்' என்பதை எப்படி ஏற்பது சுவாமி? தாங்கள்தான் வழி காட்ட வேண்டும்.

''பக்தி, சத்குணம், தர்மசத்யம், நற்குணம், நல்ஒழுக்கம் நிறைந்த பிள்ளைகளுக்கு, ஏன் இப்படி இளவயதிலேயே ம்ருத்யு தோஷமோ? துர்மரணமோ, அகால மரணமோ?'' என்பதே அவர் ஹரதத்தர் முன் வைத்த சோகமய வினா.

✵ ஹரதத்தரும் 'இது ம்ருத்யு தோஷம் அல்ல' என்று மட்டும் முதலில் கூறி அவரைச் சமாதானப்படுத்தி உடனடியாக அவர் இல்லத்துக்குச் சென்றார். திண்ணை ஓரத்தில் சுருண்டு கிடந்த அப்பிள்ளைகள் இருவரின் காதிலும் 'நமசிவாய பஞ்சாட்சரத்தை' மஹான் அரதத்தர் ஓதிடவே ... அவர்கள் ஜீவசக்தி பெற்று எழுந்து இருவரும் இவ்வாறு கூறுவாராயினர்:

''ஹரதத்த சுவாமி! ஞானவானாகிய தாங்கள் இங்கு நடப்பன யாவையும் அறிந்த த்ரிகால ஞானியே! இருப்பினும் பிறரும் அறிவதற்காகத் தங்கள் மூலம் இறைவன் இந்த அனுபூதியை இங்கு நிகழ்த்தி அருள்கின்றான். எல்லாம் அவன் செயலே! இப்பிறவியில் எம்மைப் புத்திரராகக் கொண்ட எம்முடைய இப்பிதாவின் நலனுக்காக தங்கள் குருவருளால் ஜீவசக்தி பெற்று இதனை இப்போது கூறுகிறோம், தாங்கள் அறியாதது ஏதுமல்ல சுவாமி!

✵ ''விதியை விதி விதித்தபடி நிகழ்த்தித் தருவதும் குருவின் கடமை. ஆகவே எந்த குருபிரானும் எவர் விதியிலும் குறுக்கிடுவதில்லை. இருப்பினும் இறைவனும், குருவும் மட்டுமே எவருடைய விதியையும் மாற்ற வல்லார்கள். ஆனால் இறைவனின் ஆணை இன்றி எந்த குருவும் எவருடைய விதியையும் மாற்றுவதில்லை.

இறைவனும் குரு மூலமாகவே எவருடைய விதியையும் மாற்றி அருள்வார்.''

''நாங்கள் பூர்வ ஜன்மத்தில் இவரிடம் (தந்தையார்) கூலி வேலை செய்தோம். அந்த ஜன்மத்தில் இவர் சரியாகக் கூலி நெல் கொடுக்காது எங்களை ஏமாற்றினார். இருப்பினும் அனைத்தையும் ஏற்று சேவைகளை இயன்ற அளவு ஆற்றி வந்தோம். பூர்வ ஜன்மத்தில் பாக்கியான கூலி நெல்லே, இந்த ஜன்மத்தில் இவருக்குப் பிள்ளைகளாக எங்களைப் பிறக்க வைத்தது. இவர் எங்களுக்கு இட்ட அரிசி அன்னத்தை உண்டு வந்ததில், பழைய பிறவியின் நெல் கூலி பாக்கி, அதாவது வினைபாக்கியும் இன்றோடு முழுதுமாகத் தீர்ந்தது.

''பூர்வ ஜன்மக் கூலி நெல் பாக்கி எல்லாமே முடிந்த இந்நிலையில், நாங்கள் உயிர் பெற்று மீண்டும் இந்த உலகில் வாழ்ந்தால் என்னவாகும்? இது கூடுதல் பந்தம், பாசத்தையே ஏற்படுத்திப் பல பிறவிகளாக நீளும். தங்களைப் போன்ற மஹானின் தீட்சண்யத்தால், இப்போது இஃதோடு எங்களுக்கும் பூலோக ஜன்மபந்தமும் முடிந்தது. புவியுலக வாழ்வும் முடிந்தது, கர்மவினையும் பூஜ்யம் ஆயிற்று. இதுவே ஆனந்தநிலை.

''தங்களைப் போன்ற மஹானை (ஹரதத்தர்) ஆன்மீக வழிகாட்டியாக இப்பிதா பெற்றமையால், எங்களுக்கும் நற்கதி வாய்த்தது, 'நடந்தது எல்லாம் நன்மைக்கே, எல்லாம் இறைச்செயலே' - என்பதை இனியேனும் இப்பிதா நன்கு உணரட்டும்.

''இவருக்கும் நற்கதி வார்க்கும்படி இந்த ஜன்மப் புத்திரர்கள் என்ற கடமை உணர்வில் பிள்ளைகள் என்ற முறையில் தங்களை வேண்டுகிறோம்! '' என்று அவர்கள் ஹரதத்தரிடம் கூறிட ... ஆங்கே ஒரு விண்ணக விமானம் உடனே அங்கு வந்து அவர்களை உபசரித்து ஜோதி வடிவில் இட்டுச் சென்றது. யாவரும் இதனை தரிசித்தனர்.

இப்போது தந்தையாருக்கோ தாம் இரு பிள்ளைகளை ஒரே நாளில் இழந்ததை விட, தம் குலத்தில் பல தலைமுறைகளுக்குப் பிறகு ஒரே குடும்பத்தில் அபூர்வமாக இருவர் கயிலாய விமானம் ஏறி நற்கதி பெற்றதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். இதனால் அவர் குலத்தில் முன்னும், பின்னுமாக ஏழேழு தலைமுறைகளுக்கு உய்வு தந்த ஹரதத்தருடைய ஆத்மசக்தியையும் உலகிற்குப் பறைசாற்றினார்.

'இந்த உலகில் ஒவ்வொரு நொடியிலும் நிகழும் எல்லாமுமே இறைவன் செயலே, நம்மால் ஆவது ஒன்றும் இல்லை' என்பதைத் தங்களுடைய குருவருளால் உணர்கின்றேன். இந்த அரிய ஞானத்தை எல்லோருக்கும் புலப்பிக்கும்படி வேண்டுகிறேன்!'' என்று அவர் மனமுருக ஒப்பிச் செப்பி ஹரதத்தரிடம் வேண்டினார். இவ்வாறாக சரீரத்தைப் பூவுலகில் உகுத்த பின் அமையும் ஆத்மாவின் பயணம் பற்றியும் ஹரதத்தர் மக்களுக்கு எளிமையாக போதித்து வந்தார்.

✱ ஆகவே மரணம் என்றால் முடிவு, வலி உள்ளது என்று உலகத்தார் எண்ணாது, ஆத்மா வாழும் சரீர மாற்றமே பிறப்பும், இறப்பும் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். மரணம் என்பது துன்பமோ, அவஸ்தையோ அல்ல, விதிப்படி நிகழும் அனுபூதி. இதனையும் மஹான் ஹரதத்தர் பூலோகத்தார்க்குப் புகட்டி வந்தார்.

✱ மஹான் ஹரதத்தர் வார்த்த அற்புத குருகுலவாச அனுபூதிகள்

✱ மன்னனுக்குக் கிட்டாத முக்தி, மன்னனின் குதிரைக்கும், குடை பிடிக்கும் சேவகனுக்கும் கிட்டிய அற்புதம்

✱ எளிய வகையில் முக்தியை நல்கும் ஏழு தலவழிபாடு

✱ மஹான் ஹரதத்தர் காலத்தில் மாமன்னன் ஒருவன்

பக்தியில் சிறந்து விளங்கினுன். ஹரதத்தரை ஆன்மீக ராஜகுருவாக ஏற்று உய்வு பெற்றவன். அரசபதவி, செல்வத்தில் எவ்வித ஆடம்பரம், சுக போகங்களையும் நாடாது - பரிசுத்தமான தர்ம, சத்தியத்தோடு ஆட்சி புரிந்த பக்திசீலமிகு மாமன்னன். அவனுடைய பக்தியைப் போற்றிய ஹரதத்தரிடம் அம்மன்னன், இதே சீரிய பக்தி நிலையிலேயே உய்ந்து அம்மானுடப் பிறவிலேயே விரைவில் நற்கதி பெற வேண்டினுன்.

✵ ஹரதத்தரும் அம்மன்னனிடம் ஒரே நாளில் அரை யாம நேரத்துக்குள் **திருக்கோடிக்காவல், திருவாலாங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர்** ஆகிய ஏழு புனிதத் தலங்களில் வழிபட்டால் அம்மன்னனுக்கு உடனடியாக நற்கதி கிட்டும் என்று வாக்குரைத்தார்.

✵ ஹரதத்தர் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஏழு தலங்களில் வழிபட வேண்டும் என்பதற்காக மன்னன் குதிரையில் விரைந்து சென்ருன். ஆறு தலங்களில் வழிபட்டு இறுதியில் ஏழாவதாகக் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயத்தை அடைந்தான். மன்னன் தன் குதிரையையும், ஆறு தலங்களிலும் தனக்குக் குடை பிடித்து வந்த பரிசேவகனேயும் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயில் வாயிலில் நிறுத்தி விட்டுச் சென்ருன்.

✵ வழிபாடு முடிந்து மன்னன் ஆலயத்தை விட்டு வெளியே வருகையில் ... என்ன ஆச்சரியம்! அவன் கண் எதிரிலேயே அந்தக் குதிரையும், அவனுக்குக் குடை பிடித்த வந்த சேவகரும் ஜோதிமயமாக விண்ணில் செல்வதைக் கண்டு ஆச்சரியமுற்ருன். தன்னுடன் ஏழு தலங்களுக்கு வந்தவர்களுக்குக் கிட்டிய முக்தி தனக்கு ஏன் கிட்டவில்லே என்று மன்னன் ஹரதத்தரிடம் பணிவுடன் விசாரித்தான்.

✵ அப்போது ஹரதத்தர் இவ்வாறு விளக்கலானார்: ''உத்தமச் சிவனடியாராகிய நின்னைச் சுமந்தவாறு நின் குதிரையும், குடை பிடிக்கும் வந்த சேவகரும் ஏழு சிவத்தலங்களுக்கும் நடந்தே சென்று வழிபட்டார்கள். பாதயாத்திரைக்கு மகத்துவமும், ஆன்மசக்தியும் அதிகம். ஆகவே அவர்கள் துரித கதியில் முக்தி பெற்று ஜோதி வடிவில் திருக்கயிலாயத்தை அடையப் பெற்றார்கள். நீயோ குதிரையில்தானே சென்றாய், எனவே முக்தியும் சற்றே விலகியது.

''எனினும் அவர்கள் முக்தி அடைவதற்கு நீ ஒரு பாத்திரமாக இருந்ததால், இது ஆன்மீகத்தில் தியாகமாக ஏற்கப்படுகின்றது. இதன் பலனும் பயனுமாக நீயும் இதே போல் ஏழு தலங்களுக்கும் பாதயாத்திரையாக நடந்து சென்று வழிபட்டால், நினக்கும் முக்திப் பேறு கிடைப்பது நிச்சயம்!''

✵ மன்னனும் அவ்வாறே ஏழு தலங்களுக்கும் பாதயாத்திரை சென்று வழிபட்டு அதே நாளில் நற்கதி பெற்றார். இத்தகைய வைபவங்கள் மூலம் மஹான் ஹரதத்தரின் உத்தம பக்தி நாடெங்கிலும் பரவி நிரவியது. தினமும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கஞ்சனூருக்கு வரலாயினர். அவர்கள் அனைவரோடும் தினமும் ஏழு தலங்களுக்கும் பாதயாத்திரையாகச் சென்று, பற்பல ஆன்மீகப் பாடங்கள், பூஜைகள், யோக, தியான முறைகளை போதித்தார். இவ்வாறு ஹரதத்தர் தம் பூலோக வாழ்நாளில் லட்சக் கணக்கானோருக்கு நல்வழி காட்டி உத்தமச் சேவைகளை ஆற்றி வந்துள்ளார்.

✵ பூவுலகில் பக்தி மங்கும் போதெல்லாம் இறைவன் ஹரதத்தர் போன்ற மஹான்களை இறைத் தூதுவர்களாக நாம் வாழும் பூமிக்கு அனுப்பி வைப்பதில் சற்றும் சளைப்பதில்லை. எல்லாம் நம் நல்வாழ்விற்காக இறைவன் இயக்கித் தருவது. இறைத் தூதுவர்களாகிய மஹான்கள்

காட்டும் நல்வழி முறைகளை ஆழ்ந்த நம்பிக்கையுடன் கடைபிடித்து குருவைச் சரணடைந்து இறைத் திருவடிகளை அடைவோமாக.

✨ இதுவும் லட்சக் கணக்கானுருக்கு முக்தி தந்து அருள்பாரித்த ஜகத்குரு ஹரதத்தரின் புனிதச் சரிதம் புகட்டும் உத்தமப் பாடம். குருவருள் இன்றி நற்கதி வாராது காண் கடைவழிக்கே என்பதைப் புலப்படுத்துவது.

ஆசானும், ஆசானின் ஆசானும் ஈசனும் இணைந்து படைத்த துதி

★ கஞ்சனூரில் சுதர்ஸன விஷ்ணு அம்சத்துடன் தோன்றிய சுதர்ஸனனுக்கு ஐந்தாம் வயதிலேயே கஞ்சனூர் கோயிலில் ஈஸ்வர தரிசனம் கிட்டிய நன்னாள் தை மாதத்தின் கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்த்தசி (மாதசிவராத்திரி) திருநாள். இதுவே மாசி மாதத்தின் மாதசிவராத்திரி நாளில் லிங்கோத்பவ தரிசனம் கிட்டிய அருணாசலமாம் திருஅண்ணாமலையில் தை மாதத்தின் உத்தம மாதசிவராத்திரி கிரிவல சக்தி தினமாகவும் பரிமளிப்பதாம்.

✨ சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் தை மாதத்தைய மாதசிவராத்திரி விசேஷ தினத்தில்தான்

பராசர ரிஷிக்கு முக்திதாண்டவ நடன தரிசனம் கிட்டிய கஞ்சனூர்

✨வியாஸ மாமுனிவரின் தந்தையான பராசர மஹரிஷிக்கு கஞ்சனூர் தலத்தில் நடராஜப் பெருமான் தந்தருளிய நடனக் கோலமானது - நம் பூமி உள்ளிட்ட ஏழு லோகங்களிலும் உத்தமப் புனிதர்களால் தரிசிக்கப் பெற்ற அபூர்வமான **முக்தி தாண்டவம்** எனப்படுவதாம். இத்திருக்காட்சியை மஹான் ஹரதத்தரும் பெற்றமையால், இந்த ஏழு ஹரதத்த சப்தஸ்தான சிவத்தலங்களும் **எழுபரமுக்தி** சிவதளங்களாகப் போற்றப் பெறுகின்றன.

கஞ்சனூர் ஆலயத்தில் சுவாமி தட்சிணு மூர்த்தி, ஐந்து வயதே நிரம்பிய பாலகனும் சுதர்ஸனருக்கு நமசிவாய பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தார் அல்லவா. அது போழ்து சகல வேத, கலா ஞானத்தைப் புகட்டியதோடு ஸ்படிக லிங்கம், ருத்ராட்சம், ஜபமாலை, மந்திர தீட்சை, பூஜைகளுக்கான நூற்றெட்டு ஆகம ஞானத்தையும் வார்த்தருளினுர்.

✵ இப்புனிதமான வைபவத் திருநாளில் தட்சிணுமூர்த்தியின் பஞ்சாட்சர மந்திர உபதேசத்தோடு துவங்கிய முறையான பஞ்சாட்சர ஜபமானது - பல்லாயிரக் கணக்கில் ஹரதத்தரின் திருநாவிலும், மனத்திலும், உள்ளத்திலும் த்ரயம்பகச் சூக்குமாட்சரமாக மூன்று துறை ஜபமாய் தினமும் கனிந்திட ... சிறுவனும் அரதத்தன் பால பருவத்தில் இருந்தே சிவப் பழமாய், மஹாதேஜஸுடன் உலகச் சமுதாயத்தில் உலா வந்து திகழலாயினன். நமசிவாயப் பஞ்சாட்சரத்தின் மகத்துவத்தை சாட்சாத் சர்வேஸ்வரனே மஹான் ஹரதத்தர் மூலமாக உணர்ப்பித்த அனுபூதிகள் பற்பல. சிலவற்றை ஈண்டு காண்போமாக.

✵ மஹான் ஹரதத்தர் அடியார்கள் யாவர்க்கும் எவ்வித பேதமும் இன்றி தினமும் மாஹேஸ்வரப் பூஜை, பாதபூஜை ஆற்றி, வணங்கி வந்தார். பத்து குழந்தைகள், தாய், தந்தையர், முதியோருடன் ஹரதத்தரின் குடும்பம் பெரிதாக இருந்தது. ஹரதத்தரின் குடும்பம் வறுமையில் உழன்ற போதும், வறுமையில் (ஆன்மீகச்) செம்மையாய் தினமும் அதிதி போஜனம் என்பதான அடியார்களுக்கு உணவிடுதலும், ம(ா)ஹேஸ்வரப் பூஜையின் அங்கமாக இடைவிடாது தினமும் நிகழ்ந்து வந்தது.

✵ ஒரு நாள் ... வீட்டில் வெயிலில் காய்ந்து கொண்டிருந்த நெல் தான்யத்தை ஒரு காளை உண்ணக்

கண்ட ஹரதத்தரின் தாயார் வெகுண்டு ஒரு கோலால் காளையை அடித்துத் துரத்தினுர். இதைப் பார்த்த ஹரதத்தர் வெகுவாக வருந்தினுர். மஹான்களுக்கு ஏனே மானுட, தாவர, பிராணி பேதம்? எறும்பு, கொசு உள்ளிட்டு எல்லா ஜீவன்களேயும் இறைவன் ஆத்மாவாக உறையும் இறையருங் கலங்களாகக் காண்போரே மஹான்கள். இவ்வாறு காண வைக்கும் பவித்ரமான உத்தம பக்தியை வாயால், மனதால், உள்ளத்தில் ஓதும் நமசிவாயப் பஞ்சாட்சர ஜபம் நல்கும் ஆதலின் **'நாவினுக்கு அருங்கலம் நமசிவாயவே'** என்ருர் **அப்பர் சுவாமிகள்.**

ஹரதத்தரின் தாயாருக்கோ வீட்டில் எஞ்சி இருக்கும் நெல் தான்யத்தையும் காளே மாடு உண்டு விட்டால், வரும் அடியார்களுக்கும், இல்லத்தில் வளரும் பத்துப் பேரக் குழந்தைகளுக்கும் உணவிட இயலாதே என்ற ஆதங்கம். இந்நிலேயிலும் ஹரதத்தர் எல்லா ஜீவன்களிலும் ஆத்மாவாக இறைவன் குடி இருப்பதைத் தன் தாயாரிடம் விளக்கி அறிவுரை தந்தார்.

பிறிதொரு நாள் ... ஒரு நாய் ஹரதத்தரின் வீட்டிற்குள் நுழைந்து உள்ளே காய வைத்திருந்த ஈரப்பத அரிசியில் தன் வாயை வைத்து விட்டது. 'நாய் வாய் வைத்த உணவை எவரும் உண்பரோ?' எனப் பதறிய ஹரதத்தரின் மனேவியார் கமலாட்சி மாதாவிடம் 'வீட்டில் எஞ்சி இருக்கும் ஒரு சிறிது உணவிலும் நாய் வாயை வைத்து விட்டதே, இதனேயா அடியார்களுக்கும்,. குழந்தைகளுக்கும் உணவாக்கி இட முடியும்? வேறு உணவுக்கு எங்கே போவேன்?' என்ற வருத்தமே பெரிதும் தோய்ந்தது.

தன்னேயும் விஞ்சி வந்த கோபத்தில் அம்மாதா நாய் மீது கட்டையை எறிந்திடவே, நாய் துவண்டு வீழ்ந்தது. பதறி,

கலங்கிப் போன ஹரதத்தர் ஓடிப் போய் நாயைத் தன் மடியில் கிடத்தினர். உயிர் துறக்கும் தருவாயில் இருந்த நாயின் வாயில் கங்கை ஜலத்தை வார்த்து அதன் காதில் நமசிவாயப் பஞ்சாட்சரத்தை ஓதிட.. விண்ணில் இருந்து ஒரு தேவ விமானம் ஆங்கே வந்திட, நாய் அதில் ஏகி சிவலோக ப்ராப்தியான நற்கதியை குருவருள் கூடிய திருவருளால் உற்றது. இதனை ஹரதத்தரின் மனைவியும், ஊராரும் கண்டு மனம் உருகினர். வாயில்லா ஜீவனுக்கும் முக்தி அளிக்க வல்ல மஹான் ஹரதத்தரின் ஆத்மபலத்தை உணர்ந்தனர்.

இவ்விரு சம்பவங்களில் ஹரதத்தரின் குடும்பத்தார் அறிந்தோ அறியாமலோ காளை, நாய் ஜீவன்களை இம்சித்தமைக்கு என்னதான் பரிகாரத்தைச் செய்தாலும் ... ஹரதத்தருக்கு முழுமையான சாந்தம் ஏற்படவில்லை. அவர் பெரிதும் ஆழ்ந்த ஆத்மவிசாரத்தில் மூழ்கினர். வேதனையான நிகழ்ச்சிகளால் பெரிதும் துயருற்ற ஹரதத்தர் ஆழ்ந்து சிதிக்கலானர்.

✿ ஆசானும் (ஹரதத்தர்) ஈசனும் இணைந்து புணைந்து அருளிச் செய்த அபூர்வமான 'பஞ்சாட்சர பலாதி பல அருமந்திரம்'.

✿ தினமும் நமசிவாயப் பஞ்சாட்சரத்தோடு ஓதி, ஜபித்திடவும்

✿ தன் குடும்பத்தில் மட்டும் அல்லாது உலகெங்கும் இவ்வாறு அறிந்தோ, அறியாமலோ பலரும் தவருன காரியங்களைச் செய்திடில், வாயில்லா ஜீவன்களை

வதைத்திடில் 'இதற்கு ஏதேனும் தீர்வு, பிராயச்சித்தம் உண்டோ' எனத் தீவிரமாக ஆழ்ந்து ஆத்ம விசாரம் செய்தார். இதன் முடிபாக ஒரு ஸ்லோகத்தின் முதல் வரியை,

''ஞானுக்ஞான ப்ரயுக்தானும் பாபானும் மஹாதாமபி ...''

- என்று எழுதினார். இதன் பொருளாவது: **''அறிந்தோ அறியாமலோ எத்தகைய பெரும் பாவங்களைச் செய்தாலும் ...''**

இஃதோடு முதல் வரி தொக்கி நின்றது. சுலோகத்தின் அடுத்த வரியில் மனம் செல்லாதபடியால் ஹரிதத்தர் இதை இப்படியே விடுத்து வருத்தத்துடன் கஞ்சனூரின் வடகாவிரியில் நீராடச் சென்றார்.

✡ அப்போது அரதத்தர் வடிவிலேயே அவர் வீட்டுக் கூடத்தில் எழுந்தருளிய சர்வேஸ்வரன் அந்த ஸ்லோகத்தின் இரண்டாவது வரியைத் தம் கைப்படவே இதிலும் ஹரதத்தரின் கையெழுத்திலேயே இவ்வாறு ஓலைச் சுவடியில் எழுதிச் சாதித்தருளினார்.

''ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி கீர்தனுத் ...''

இவ்வாறாக அந்த இறைத் துதியின் இரண்டாவது வரியை பரமேஸ்வரரே தம் கைப்பட ஓலைச் சுவடியில் எழுதி சுலோகத்தின் இரண்டாவது வரியை செய்து ஓலைச் சுவடியை மறுபடியும் ஓட்டிலேயே செருகி வைத்து விட்டு மறைந்தார்.

✵ இதே போலவே சமீபக் கலியில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் மஹான் ஜெயதேவரின் அஷ்டபதி கீர்த்தனைக்கான வரிகளை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தாமே ஜெயதேவரின் வடிவில் வந்து மீண்டும் எழுதி ஜயதேவரின் கீர்த்தனையை அங்கீகரித்து அருளினார்.

கஞ்சனூரில் மஹான் ஹரதத்தருக்காக இறைவனே எழுதி அருளிச் செய்த அந்த சுலோகத்தின் இந்த இரண்டாவது அடியின் பொருளாவது:

''தனித்திருந்து ஏக சித்தத்துடன் ஒரு மனதாக சிவநாமத்தை ஓதுதல் உத்தமப் பிராயச்சித்தமாம்.''

✵ தினமும் இல்லம், கோயில், ஆலயவலம், தீர்த்தக்குளவலம், கிரிவலம், பௌர்ணமி, அமாவாசை, மாதசிவராத்திரி, கார்த்திகை தீபோத்சவ மலைவலம் போன்ற அனைத்து வழிபாடுகள், ஜபம், யோகம், தியானத்திலும், நாம சங்கீர்த்தனத்திலும் எந்த மலைவலத்திலும் நமசிவாய பஞ்சாட்சரத்தோடு ஓத வேண்டிய இறைத்துதி

✵ ஆசானும் ஹரதத்தரும், ஆசானின் ஆசானும்
ஈசனும் இணைந்து படைத்தருளிய
இரு வரி பஞ்சாட்சர பலாதிபல மந்திரத் துதி
''ஞானுக்ஞான ப்ரயுக்தானும் பாபானும்
மஹதாமபி
ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி
கீர்தனுத் ...''

✵ ''அறிந்த வினையோ அறியா கர்மம்
எவ்வினை யாவும் அடியொடு தீரும்
அருதிருமார்கம் அறிவீர் உலகீர்
தனித்தொரு சித்தம் ஒருமனத் தொன்ற
சிவத்திரு நாமஞ் ஜபித்திடல் வேணும்
அரசிவ நாமம் உருகிடப் பேணீர்!''

ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆசானும் (ஹரதத்தர்), ஆசானின் ஆசானுன ஈசனும் உற்பவித்து இயம்பிய இந்த அபூர்வமான இரண்டு வரி சுலோகமும் இதன் திரண்ட பொருளுமாவது:

''ஞானுக்ஞான ப்ரயுக்தானும் பாபானும் மஹதாமபி

ஏகாந்த நிஷ்க்ரதி: ஶம்போ: ஸகிர்தேவ ஹி கீர்தனுத் …''

பொருள்:''அறிந்தோ அறியாமலோ எத்தகைய பெரும் பாவங்களைச் செய்திருந்தாலும் தனித்திருந்து ஏக சித்தத்துடன் ஒரு மனதாக சிவநாமத்தை ஓதுதல் உத்தமப் பிராயச்சித்தமாம்.'' …''

✡ அதாவது ஆழ்ந்த நம்பிக்கை, பக்தியுடன் ஏகசித்தத்தோடு அதாவது ஒருமுகப்பட்ட மனம், உள்ளத்தோடு நமசிவாய மந்திரத்தை, சிவநாமத்தை ஜபித்தல், ஓதுதல், தியானித்தல், யோகித்தல் எத்தகைய பெரும் பாவங்களுக்கும் பரிபூரணமாகத் தீர்வு தரும், நற்கதியை நல்கி ல் உய்விக்கும். இறைப் பரம்பொருளே இதற்கு ஒப்புதல், அங்கீகாரம் தந்த புனிதப் பவித்ரமான ஹரதத்த சரித அனுபூதி இது.

✡ காசி, மயிலாடுதுறை ரிஷபத்துறை போன்ற அபூர்வமாக வடக்கு திசை நோக்கிப் பாயும் உத்தரவாஹினி நதித் தலம் கஞ்சனூர். இதன் பிரம்மதீர்த்தம் எனும் வடகாவிரி ஆற்றில் நீராடித் திரும்பி வந்த அரதத்தர், ஓலைச் சுவடியை எடுத்த போது, ஆச்சரியமானதாக அவர் கையெழுத்திலேயே துதியின் இரண்டாவது அடியும் எழுதி முடித்திருக்கக் கண்டு வியந்து மனைவி கமலாக்ஷீயிடம் இது பற்றி விசாரித்தார்.

மனைவியாரோ, ''நீராடச் சென்ற தாங்கள்தாமே

திரும்பி வந்து இரண்டாவது வரியையும் எழுதிச் சென்றீர்கள்!'' என்று கூறிடவே இறைவனுடைய திருவிளையாடலை ஹரதத்தர் உணர்ந்து பரவசித்தார்.

✵ கோடிக் கணக்கான உலகச் சமுதாய ஜனங்களுக்கு ஆசானாகிய ஹரதத்தர் மூலம் ஈசன் தருவித்தருளிய ஔஷத பொக்கிஷச் சரம வாக்கியமாக என்றென்றும் பிரகாசிக்கும் சுலோகம், இறைத் துதி இது. எத்தகையப் பெரும் பாவத்தையும் களைந்து நற்கதியில் இட்டுச் செல்ல வல்ல நமசிவாயப் பஞ்சாட்சரத்தின், சிவநாமத்தின் பெருமையை இறைவனே உணர்வித்தப் பாங்கினை

'ஆசானும் ஈசனும் ஒன்றே'

✵ **சத்குரு வேங்கடராம சுவாமிகள், ''சிவநாம மஹிமை, ஆசானும் ஏசனும் ஒன்றே'** எனும் தலைப்புகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை வழங்கி உள்ளார். நூலாகவும், MP3 வடிவிலும் இவை வெளி வந்துள்ளன. ஆசானும் (ஹரதத்தர்), ஆசானுக்கு ஆசானாகி அரதத்தருக்கு நமசிவாயப் பஞ்சாட்சரத்தை உபதேசித்த ஈசனாகிய சிவப் பரம்பொருளும் – அதாவது திருவருளும் குருவருளும் இணைந்து உற்பவித்து ஓதியருளிச் செய்த புனிதத்தைக் கொண்டது **'பஞ்சாட்சர பலாதிபல மந்திரம்'**. இவ்வரிய சுலோகத்தின் உற்பவிப்பு, புனிதத் தோற்றம் பற்றி ஸ்ரீஅகஸ்திய விஜயம் பிப்ரவரி 2019 இதழில் காணலாம்.



காஞ்சி முனிவரின் யோகவனன தரிசனம்

மஹான் ஹரதத்தர் உலகத்தார்க்கு ஆனந்தத்துடன் புகட்டினார்.

✵ மஹான் ஹரதத்தரின் இச்சரித அனுபூதி மூலம் நமசிவாய பஞ்சாட்சரம், சிவநாமம், இறைநாமத்தின் மகத்துவத்தை மட்டுமன்றி **'ஆசானும் ஈசனும் ஒன்றே'** என்பதையும் உலகத்தாருக்கு சர்வேஸ்வரனே தம் தூதுவராம் மஹான் ஹரதத்தரின் சரித அனுபூதி மூலமாக கஞ்சனூர் சிவா விஷ்ணு தளத்தில் உணர்த்தி உள்ளமையையும் உலகு நன்கு அறிவதாம்.

உத்தமமான உசில மரத்தடி தியானம்

✵ ஜனவரி 2019 ஸ்ரீஅகஸ்திய விஜயம் அட்டைப் படத்தில் ஸ்ரீசைலம் தலத்தில் காஞ்சி பரமாச்சார்யாள் சுவாமிகள் ஆற்றிய உசில மரத்தடியில் ஆற்றும் தியானக் காட்சியை அளித்துள்ளோம். உசில மரமே ரங்கமரம், கிருஷ்ணஸ்ரீ எனப்படுவதாம்.

✵ கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தின் தலவிருட்சமான புரச மரத்தடியிலும், இங்கு வடக்கு நோக்கிப் பாயும் வடகாவிரியிலும் (பிரம்ம தீர்த்தம்), அக்காலத்தில் இவ்வூர்ப் பகுதியில் பொலிந்த அடர்ந்த வனங்களிலும் - சப்தஸ்தானம் எனப்படும் ஏழு ஊர்ச் சிவாலயங்களுக்குச் செல்லும் வழியிலும் உள்ள அத்திமரங்கள், ரங்க விருட்சம் (க்ருஷ்ண ஸ்ரீ விருட்சம்) எனப்படும் உசில மரத்தடியிலும் மஹான் ஹரதத்தர் யோகம், தியானம் பயின்றுள்ளார்.

✵ மஹான் ஹரதத்தர் மன்னனுக்குப் புகட்டிய அக்னி நீதி

✵ வேள்வியில் இட்டதை வெண்பனித் தலையரின் சிரசில் கண்டார்

✵ கயிலாயத்து ஈஸ்வரனை 'வெண் பனித்தலையர்'

என்றும் விளிப்பர். ஈஸ்வரனின் திருமேனில் குளிர் கங்கையும் உண்டு, வெந்தழலும் உண்டு, நாகமும் உண்டு, திருநீறும் உண்டு. என்னதான் இல்லை? ஈசனே எல்லாவற்றையும் படைப்பதால், நாமும் (இறைவனுக்குப்) பலவற்றைப் படைப்பதால் இறைவனிடம் இல்லாதது ஏதும் இல்லை!

✵ நாம் படைப்பன எல்லாம் நமக்கே வரவளமாகப் பன்மடங்கில் நமக்கே திரும்பி அளிப்பதால், இறைவன் இருந்தும் இல்லாதவனுகவும், இரந்தும், பக்தியைக் கறந்து அருட்பாலைச் சுரந்தும் அருள்வன். இதுவும் அபிஷேக ஆராதனைகள், படையல்களின் நுண்ணிய ஆன்மவிளக்கம் என்பார் **சத்குரு வேங்கடராம சுவாமி.**

✵ மன்னன் சிவலிங்க பூபதி என்பார் ராஜராஜ சோழன் போல் உத்தம சிவபக்தர். பல நாடுகளுக்கு அதிபதியாக ஆட்சி புரிந்தாலும் தர்மநெறியில் உய்ந்தவர். கஞ்சனூருக்கு அடிக்கடி வந்து ஹரதத்தரை ராஜகுருவாகக் கொண்டு தன்னுடைய ஒவ்வொரு அரசாங்க நற்காரியத்திற்கும் ஹரதத்தருடைய ஆசிகளைப் பெற்று நடத்தி வந்தார்.

✵ ஒரு முறை சிவலிங்க பூபதி இறைவனுக்குச் சார்த்துவதற்காகப் பட்டாடைகளைக் கொடுத்து அனுப்பினுன். அப்போது ஆழ்ந்த பக்தியுடன் வேள்வியை நிகழ்த்திக் கொண்டிருந்த ஹரதத்தர், அந்த வேள்விக் குண்டத்திலே அரசன் அனுப்பிய பட்டாடைகளை ஆஹுதியாக நெய்யில் தோய்த்து இட்டு விட்டார். அரசன் மஹான் ஹரதத்தரின்பால் பெரும் அன்பு, பக்தி, மரியாதை பூண்டிருப்பினும், இறைவனும் கஞ்சனூர் அக்னீஸ்வரருக்கு என ஆகி வந்ததை அக்னியில் இடுவானேன் என்பது பற்றி மன்னன் சற்றே குழம்பினுன்.

✵ உடனடியாக மன்னன் புறப்பட்டு வந்து கஞ்சனூர் அக்னீஸ்வரரை வணங்கிய போது ... எந்தப் பட்டாடைகளை ஹரதத்தர் வேள்வி -அக்னியில் இட்டாரோ அவை யாவும் இப்போது அக்னீஸ்வரச் சிவலிங்கத்தின் திருமேனியில் இருக்கக் கண்டு வியந்து வெட்கி ஹரதத்தருடைய பக்தியை பெரிதும் போற்றி மன்னிப்பும் கோரிக் கொண்டார். பாமரரையும், பாராளும் மன்னரையும் எவ்வித பேதமும் இன்றி ஒரே தட்டில் வைத்து நல்வழி காட்டி குருவருளைப் பெய்தவர் மஹான் அரதத்தர்.

''குருவிடம் ஒன்றை ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஒப்படைத்து விட்டால், அஃதோடு ஒப்படைத்தவர் பணி முடிந்தது. மாருக அதன் போக்கிடத்தை ஆ(ரா)ய்ந்தால் ... ஆழ்ந்த நம்பிக்கை சற்றே மாசுபடும், ஆடிவிடும். அந்த மாசை அக்னியில் பஸ்மமாக்கி மனத்தையும் பொருளையும் பரிசுத்தத்தோடு பரிபூரணமாக ஒப்படைத்த நிலையில்தான் எந்தப் படைத்த பொருளும் பரிபூரணமாக இறைவனை அடையும். இதுவும் அக்னியின் பரிசுத்தம் மற்றும் சரணுகதிக்கான விளக்கம். வீட்டில் விளக்கேற்றுவதன் தாத்பர்யமும் இதில் அடங்கும்.

✵ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆன்மப் பூர்வமாக காவிரி, கங்கையை இணைத்த மஹான்
✵ உத்தமச் சீடரை கஞ்சனூர் காவிரியில் மூழ்கி காசி கங்கையில் எழும்பச் செய்த புனிதயோகி ஹரதத்தர்

✵ சுதர்ஸன மூர்த்தியின் அம்சத்துடன் கஞ்சனூரில் தோன்றிய ஹரதத்தருடைய புண்ணியப் புனிதச் சரிதமானது - பவிஷ்யோத்தர புராணம், சிவரஹஸ்ய இதிஹாஸம், உபமன்யு பக்த விலாஸம், சிவபக்த மஹாத்மியம் போன்றவற்றில் கஞ்சனூர் தல மகத்துவத்தோடு இணைந்து காணப்படுவதாம்.

ஹரிதத்தரின் புனிதச் சரிதத்துடன் கஞ்சனூர் தலபுராணம் பொலிய வேண்டும் எனக் கஞ்சனூர் இறைப்பரம்பொருள் ஸ்ரீஅக்னீஸ்வரரே விரும்பினாற் போலுமாய்.

✵ உபமன்யு முனிவர் வியாக்ரபாத மஹரிஷியின் புத்திரர். இவருக்கு சதாதப சித்தர் பெரிய தமையனார் ஆவார். அகஸ்தியர், இடியாப்ப சித்தர், அஸ்தீக சித்த குரு பாரம்பரியத்தில் வரும் சதாதப சித்தரை, தஞ்சாவூர் அருகே கண்டியூர் சிவாலயத்தில் தரிசிக்கலாம்.

✵ பண்டையக் கம்ஸபுரம் எனும் கஞ்சனூரின் மஹாத்மியத்தை சூதமஹரிஷி, சௌனக மஹரிஷி போல் பலருக்கும் உபன்யாஸ மாப்பொருளாக உபமன்யு முனிவர் விளக்கி வந்துள்ள மஹிமையும் கஞ்சனூர் தலத்துக்கு அணி சேர்ப்பதாம்.

✵ ஒரு முறை ஹரதத்தரின் சீடரான கங்காதரர் காசி யாத்திரை புரிந்திட விரும்பினார். உடல் ஊனத்தால் அவருக்கு இது சாத்யமாகாது போல் இருந்தது. அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை, மனோவைராக்ய சித்தத்தை உணர்ந்த ஹரதத்தர், ''கங்காதரா! சங்கல்ப சூக்தம், அகமர்ஷண சூக்த வேத மந்திரங்களை ஓதி, காசிக்கும் செல்லும் சங்கல்பத்துடன் நம் கஞ்சனூரின் பிரம்ம தீர்த்தமாகிய காவிரியில் நீராடுவாயாக!'' என்று அறிவுரை போந்தார்.

✵ என்ன ஆச்சரியம்! கஞ்சனூர் காவிரியில் மூழ்கிய அந்த பக்தர் எழுகையில் தான் வாரணாசி கங்கைக் கரையில் மணிகர்ணிகா கட்டத்தில் இருப்பதைக் கண்டு உளம் நெகிழ்ந்து பரவசக் கண்ணீர் உகுத்து ஆனந்தம் கொண்டார். காசி, வியாஸ காசி, கங்கை, பிரயாக், கயை தலங்களில் பல மாதங்கள் வசித்து வழிபாடுகள், தீர்த்த நீராடல்கள், பிதுர்க் காரியங்களைச் செம்மையாக ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஆற்றினார்.

✵ காசியம்பதிப் பூசனைகள் எல்லாம் நிறைவு

பெற்றவுடன் எவ்வாறு கஞ்சனூருக்குத் திரும்புவதோ என்று கங்காதரர் கவலை கொண்டார். அப்போது கங்கைக் கரையில் ஒரு தம்பதியர் இவரிடம் வந்து குசலம் விசாரித்தனர். இவரும் தாம் பிறந்த கஞ்சனூர் மண்ணின் புராதன மஹத்துவம் பற்றி உரைத்திடவே ... உடனே அந்த தம்பதியினர் 'கஞ்சனூரில் ஹரதத்தரை அறிவீரோ?' என்று கங்காதரரிடம் அன்பொழுகக் கேட்டிடவே, இவர் வியந்தார். தம் குருவின் பெயரும், கீர்த்தியும் காசியிலும் பரவி இருப்பது அவருக்கு சந்தோஷத்தை ஈன்றது.

ஹரதத்தர் கூறியபடி தாம் கஞ்சனூர் பிரம்ம தீர்த்தமாகிய காவிரியில் மூழ்கி காசிக்கு வந்த அனுபூதியில் இருந்து தொடங்கி அதுகாறும் நடந்தன அனைத்தையும் கங்காதரர் அந்த தம்பதிகளிடம் விளக்கி உரைத்ததோடு, 'ஊனமுற்றவனாகிய தான் எப்படி கஞ்சனூருக்குத் திரும்புவது?' எனும் வகை அறியாது திகைப்பதாகவும் கூறினார்.

✡ அந்த தம்பதியரோ புன்சிரிப்புடன், ''நீர் எப்படி கஞ்சனூரில் இருந்து காசிக்கு வந்தீரோ, அப்படியே திரும்பிப் போக வேண்டியதுதானே!'' என்று பூடமாகக் கூறிடவே இது கேட்டு கங்காதரர் அசந்து போனார்.

இப்போது அந்த உத்தம புருஷர், ''இந்த காசி கங்கையின் இந்த மணிகர்ணிகா கட்டத்தில் இறங்கி நீரில் நின்று கஞ்சனூருக்குத் திரும்பிப் போக வேண்டும் எனச் சங்கல்பித்து சங்கல்ப சூக்தம், அகமர்ஷண சூக்த வேத மந்திரங்களை ஓதி மூழ்குவீராக!'' என்று அன்பான உரிமையோடு கூறியதோடு, ஏதோ ஹரதத்தருக்கு மிகவும் பரிச்சயமானவர் போல், ''ஹரதத்தரிடம் யாம் விசாரித்ததாகச் சொல்லவும்!'' என்றிடவே ... உடனே அந்த அம்மணியாரும், ''ஆமாம், நானும் நலம் விசாரித்ததாக ஹரதத்தரிடம் கூறவும்'' என்றதுமே, இவர் விழித்து மென்மேலும் திகைப்பில் ஆழ்ந்தவரானார்.

✵ அந்த உத்தம புருஷர் கூறியபடியாக காசி கங்கையில் மணிகர்ணிகா கட்டத்தில் கங்கைக்குள் இறங்கினர். தான் கஞ்சனூர் திரும்புவதாக கங்காதரர் சங்கல்பித்து சங்கல்ப சூக்தம், அகமர்ஷண மந்திரத்தை ஓதி மூழ்கினர். ஆச்சரியகரமாக அடுத்த நிமிடத்தில் கஞ்சனூர் தீர்த்தத்தில் தான் எழுந்ததைக் கண்டு கங்காதரர் அதிசயித்து ஆனந்தக் கண்ணீர் உகுத்து ஹரதத்தரிடம் ஓடோடிச் சென்று நடந்ததை விவரித்தார்.

ஹரதத்தரும் ''காசியில் அடியேனைப் பற்றி எவரேனும் விசாரித்தார்களா?'' என்று கேட்டதும் வியந்த கங்காதரர் தாம் சந்தித்த உத்தம தம்பதியர் ஹரதத்தரின் பெயரைக் குறிப்பிட்டு விசாரித்ததையும் உரைத்தார். அப்போதுதான் சாட்சாத் காசி விஸ்வநாதரும், விசாலாக்ஷியுமே கங்காதரருக்குக் காட்சி தந்து அருள் புரிந்ததை ஹரதத்தர் அவருக்கு உணர்ப்பித்தார்.

✵ மேலும் கங்கையும், காவிரியும் ஒன்றே என ஹரதத்தர் கங்காதரருக்கு விளக்கியதோடு, திருச்சேறை தலத்தில் கங்காமாதா சகல கோடி தீர்த்த தேவதைகளோடு காவிரி மாதாவை வணங்கி, **''எம்மிற் பெரியவள் நீ''** என்று போற்றிய புராண வைபவத்தையும் எடுத்துரைத்தார். இந்த வைபவத்தின் மூலதனமாக கஞ்சனூரில் ஸ்ரீகாசி விஸ்வநாதர் - விசாலாக்ஷீ ஆலயமும் எழும்பி அருள்வதாம்.

காசிக்கும் வீசம் பெரிதான ஆறு தமிழகத் தலங்கள்

✵ அப்பர் சுவாமிகள் தம் தள்ளாத முதிய வயதில் காசியைத் தாண்டித் திருக்கயிலாயத்தை நோக்கிச் செல்லும் போது ஈஸ்வரன் மானுட வடிவில் வந்து அவரிடம் ஒரு தீர்த்தத்தில் மூழ்குமாறு கூறிட ... அதில்

மூழ்கி நீராடிய அப்பர் சுவாமிகள் திருவையாறு கோயில் தீர்த்தத்தில் எழுந்து திருக்கயிலாய தரிசனம் பெற்ருர்.

✵ இறைவன் தானே உகந்து ஆற்றிய இவ்வற்புத வைபவம் பற்றி அப்பர் சுவாமிகள் 'யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைந்த போதில் ...' என்று பாடி, எங்கும் தம் காலடி படாது இமயமலைச் சாரலில் இருந்து எழுப்பி தன்னைத் திருவையாற்றில் சேர்த்த இறைவனின் திருவருள் காருணியத்து இரங்கலாகப் போற்றுகிருர்.

✵ பெரிதும் உடல் ஊனமுற்ற கங்காதரர் அக்காலத்தே கஞ்சனூரில் இருந்து 'யாதும் சுவடுபடாமல்' குருவருளுடனும், திருவருளுடனும் காசிக்குச் சென்று வந்த அற்புதம் கண்டு கஞ்சனூர் மக்கள் வியந்து உலகிற்கு குருவின் மஹத்துவத்தை உணர்த்தினர். ஆசானும் (இங்கு அரதத்தர்), ஆசானுக்கு ஆசனை ஈசனும் இணைந்து அருளும் போது எதுதான் சாத்யமாகாது என்பதையும் புலப்படுத்தினர். இதுவும் ஹரதத்தர் புகட்டும் பாடம்.

✵ மேற்கண்ட அனுபூதியில் கங்காதரருக்கு அருளிச் செய்த காசி விஸ்வநாதர், விசாலாக்ஷி மூர்த்திகளுக்கும் கஞ்சனூரில் ஆலயம் உண்டு. 'காசிக்குச் செல்ல இயலவில்லையே' என ஏங்குவோர்க்கு நல்வழி காட்டும் உத்தம ஆலயம் இது. நம் தமிழ்நாட்டிலும் 'காசிக்கு வீசம் பெரிதாய்' போற்றப் பெறும் தலங்களும் உண்டு. காசிக்குச் செல்ல இயலாதோரும், அஸ்தி கரைத்தல், பத்து நாள் பிதுர்க் காரியங்களை **திருவெண்காடு, சாயாவனம், மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவையாறு, ஸ்ரீவாஞ்சியம்** ஆகிய காசிக்கு வீசம் பெரிதான ஆறு தமிழகத்துக் காவிரித் தலங்களில் நிகழ்த்திடவும்.

✵ இவ்வாருக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே காவேரி – கங்கை இணைப்பை ஆன்மப் பூர்வமாக ஆற்றித்

தந்த மஹறான் ஹரதத்தர். இத்தகைய மஹறான்களின் குருவருளே வேண்டி வழிபட்டு வந்தால் திரண்ட குருவருளுடன் காவிரி - கங்கை இணைப்பு விரைவில் சாத்யமாகக் கூடியதே. ஆனுல் எல்லோரும் இந்த தெய்வத்வ வாக்கில் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வேண்டுமே. குருவருள் எதையும் சாதித்துத் தரும்.

பக்தை அம்பாயீ மாதாவைய கயிலாயத்திற்குச் சுமந்து சென்ற கஞ்சனூர் ஸ்ரீகற்பக விநாயகர்

✵ கஞ்சனூரில் கற்பக நாச்சியார் எனும் அம்பாயீ பாட்டி தன் முதிய வயதிலும் தினமும் கற்பக விநாயகருக்கு மோதகம் படைத்து வழிபட்டு வந்தார். மஹறான் ஹரதத்தருக்காக பிரும்மாண்டமானதும் கோடி சூரியப் பிரகாசத்தைக் கொண்டதுமான கயிலாயத்து மஹறாசிவரதம் கஞ்சனூர் வீதிக்கே வந்தேகிய போது, மஹறான் அம்பாயீ மாதாவைத் கயிலாய விமானத்தில் வரும்படிப் பணிவுடன் அழைத்தார்.



ஸ்ரீகற்பக விநாயகர்

✵ கற்பக விநாயகரோ அம்பாயீ மூதாட்டியிடம் நித்தியக் கடமையான மோதகப் படையலே வழக்கம் போல் கண்ணுங் கருத்துமாக நிறைவேற்றுமாறு கூறிடவே, அம்பாயீ பாட்டியும் பிள்ளேயாருக்கு மோதகத்தைப் படைத்த பிறகே வர முடியும் என்று அரதத்தரிடம் கூறினள். ஒரு நாழிகையே பூவுலகில் கயிலாய விமானம் நிற்கும் ஆதலின், ஹரதத்தரும் அம்பாயீ மாதாவின் பக்தியை மெச்சிப் பொறுத்திருந்து பார்த்துக் கயிலே விமானத்தில் புறப்பட்டு விட்டார்.

✵ சற்று நேரத்தில் தயாரான மோதகத்தை ஏற்ற பின் கற்பக விநாயகர் அம்பாயீ மாதாவைத் தானே சுமந்து சென்று ஹரதத்தருக்கு முன்னரேயே திருக்கயிலாயத்தை அடைந்து மாதாவுக்கு நற்கதியைக் கனிவித்தார்.

✵ இவ்வைபவத்தை ஸ்ரீஅகஸ்திய விஜயம் நவம்பர் 2013 இதழிலும் இதற்கு முன்னரும் விளக்கி உள்ளோம். ஔவைப் பிராட்டிக்கும் இதே அனுபூதி கிட்டியதை யாவரும் அறிவர். அம்பாயீ மாதாவிற்கு முக்தியை நல்கிய அதே கற்பக விநாயகரை இன்றும் கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தின் தெற்கு திசை ராஜகோபுரத்தின் முன் தனிக் கோயிலில் தரிசிக்கலாம். யுகங் கடந்து அருளும் மிகவும் சக்தி வாய்ந்த கணபதி மூர்த்தம். கஞ்சனூர் அக்னீஸ்வரர் கோயில் போன்று தெற்கு திசையில் ராஜகோபுரத்தைக் கொண்ட தலங்கள் பிதுர்முக்தித் தலங்களாம்.

ஐந்து வயது பாலனும் ஹரதத்தருக்கு இறைவனே முப்புரி நூல் சார்த்தி அருளியமை (அட்டைப்பட விளக்கம்)

✵ சிறு வயதிலேயே சகலமும் அறிந்த ஞானவானுகப் பொலிந்த சுதர்ஸனனுக்குக் கஞ்சனூரில் ஐந்து வயதில் உபநயனம் (பூணூல் கல்யாணம்) நிகழ்ந்த போது, சாட்சாத் சர்வேஸ்வரனுலேயே ஞானப்ரகாச முப்புரி நூல் அணிவிக்கப் பெறும் பாக்யத்தைப் பெற்றவராகவும் பிரகாசித்தார். . இப்புனித வைபவத்தில் சிவ, பார்வதி மூர்த்திகள் ஹரதத்தரின் பெற்ருேர் வடிவில் வந்து சிறுவனும் ஹரதத்தனுக்கு முப்புரி நூலே அணிவித்து ஞானவரங்களேப் பொழிந்தனர்.

✵ சர்வேஸ்வரனே அகிலாண்டேஸ்வரியுடன் எழுந்தருளிய இந்த திவ்யமான உபநயன வைபவத்தின் போது ... இறைத் திருவிளையாடலாக முதலில் ஈஸ்வரனுர் சுதர்சனருடைய தந்தையாம் வாசுதேவாச்சாரியாரை பிரம்ம முகூர்த்த நீராடலுக்காக பிரம்ம தீர்த்தம் எனும் கஞ்சனூரின் வடகாவிரி நதித் தீர்த்த நீராடலுக்கு அனுப்பி வைத்தார். அதே நேரத்தில் இறைவனும், இறைவியும் ஹரத்தனின் தந்தையார், தாயார் வடிவில் பூணூல் கல்யாணம் நிகழும் மங்கள மண்டபத்தில் தோன்றினர்.

✵ இப்புனிதமான வைபவத்தில் ஈச்வரனே தம் திருக்கரங்களால் சிறுவன் அரதத்தருக்கு முப்புரி நூலைச் சாதித்த திவ்யமான வைபவ அனுபூதியை இந்த ஹரதத்தர் சிறப்பிதழ்ச் சுவடியின் அட்டைப்படத்தில் தரிசிக்கின்ரோம்.

✵ மஹாவிஷ்ணுவின் அவதாரமான குறளன் எனும் வாமன மூர்த்திக்குக் கிட்டிய பாக்யம் அல்லவா இது. வாமன மூர்த்திக்கே நாம் வாழும் பூமியில் மீண்டும் உபநயனம் (முப்புரி நூல்) வைபவம் நிகழ்ந்தாற்போல் ... வேதநாயகர் பிரம்ம மூர்த்தி உபாத்யாயராகவும், குபேர மூர்த்தி பூரி (தானம்) கொடுக்கும் ராஜாவாகவும் அவ்விடத்தில் துலங்கிட ... சர்வேஸ்வரனே அரதத்தரின் உபநயன வைபவத்தை நிகழ்த்தி அருளினுர். ✵

ஆயிரம் மடங்கில் வேள்விப் பலன் தரும் கஞ்சனூர், காஞ்சிபுரம், வேளுக்குடி, வேள்வரை

✵ வேள்வியில் பொதுவாக அக்னியில் மரக்கரண்டியால் நெய்யை ஊற்றுவர் அல்லவா. பலாஸ

இலை எனும் புரச இலையில் நெய் ஊற்றி வேள்வி நடத்தும் புனித சாங்கியமும் உண்டு. இவ்வாறு வேள்வி ஆற்றுவது மிகவும் பவித்ரமானது, பன்மடங்கில் பலன்களை வர்ஷிப்பது. பலாஸ விருட்சம் எனும் புரச மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட புரசவனம் நிறைந்த கஞ்சனூரில் ஆதிகாலத்தில் புரச இலையால் பசுநெய் வார்த்து விசேஷ ஹோமங்கள் நிறைய நிகழ்ந்து வந்துள்ளன.

ஆலய வழிபாட்டின் கடைஅம்சம் உள்முக தியானம்

✵ ஆலய தரிசனத்தின் கடைப்பகுதியில் நாம் ஓரிடத்தில் அமைதியாக அமர்வது அகமுக பூஜை, உள்முக தியானமாக ஆவதோடு, ஆலய தரிசனப் பலன்களைப் பிற ஜீவன்களின் நல்வாழ்விற்காக அர்ப்பணிக்கும் திவ்யப் படலமுமாம். ஆலய மூர்த்திகளை சிலா வடிவங்களில், படங்களில் தரிசித்து வணங்குவது பஹிர்முக (புறவழிபாடு) பூஜை, அதாவது உருவ வழிபாடு.

✵ இத்தகைய வெளிமுக வழிபாட்டிற்குப் பின், இல்லத்துப் பூஜையிலும், கோயில் தரிசனத்திலும் சற்றே ஒருமுகப்பட்ட தியானத்தில் அமர்ந்து அனைத்து உருவங்களின் ஒன்றும் ஏகஜோதியை, அவரவர் உள்ளே ஆத்மாவாக உறையும் ஆத்மநாதராக பகவானை உள்ளுர தியானிக்கிறோம். இது அகமுக பூசனை, உள்முகப் பூஜை, ஆத்மதரிசனம்.

✵ ஆகவே கோயிலில் தரிசனத்தில் இறுதியில் ஓரிடத்தில் அமர்ந்து தியானிப்பது - நம் அகத்துள் உள்ளிருக்கும் ஆத்மஜோதிக்கான உள்முக பூஜையை, அகமுக வழிபாடாக ஆற்றுவதாம். மனத்தகப் பூசனையாக, மானஸீக வழிபாடு என்பதாகப் பூசலார் நாயினுர், வாயிலார் நாயினுர் புகட்டிய உத்தம அந்தர்முக வழிபாடிது.

❁ பலாஸ (புரச) விருட்ச தேவதா புரசக்குடி, கஞ்சனூர் போன்ற தலங்களில் ஞானவேள்வி ஆற்றிப் பூஜித்த போது, தாவரங்களைப் படைக்கும் சாகம்பரீ தேவி - புரச மரம், புரசம் பூ, புரச இலைகளுக்கு ஞானக்ருதம் எனும் விசேஷமான சக்தியை அருளினள். க்ருதம் என்றால் நெய். இதனை சர்வேஸ்வரனும் ஏற்று வேள்வியில் புரச இலை கொண்டு சுபகாரியம், அபரக் கிரியைகளிலும் வேள்விக்கான ஆஹுதியை அளித்திடலாம் என்ற வரத்தை நல்கினார். மேலும் கேது மூர்த்தி பலாஸ விருட்சத்தின் கீழ் தவம் புரிந்தமையால், கேது கிரஹத்து உரிய புஷ்பமாகவும் பலாஸ புஷ்பம் எனும் புரசமரப் பூ ஈஸ்வரனால் அளிக்கப் பெற்றது.

❁ வேதம் மற்றும் வேள்விகளின் அதிபதியும், சிவபார்வதி, ராதா, கிருஷ்ணர், தெய்வத் திருமணங்களை நான்கு யுகங்களிலும் நிகழ்த்துபவருமான பிரம்ம மூர்த்தியே வேள்வியை நிகழ்த்திய தலம் கஞ்சனூர். இக்காரணத்தாலும், ஈஸ்வரன், பிரம்மா, விஷ்ணு நேரில் தோன்றி தம் திருவடிகளை கஞ்சனூரில் பதித்ததோடு, இங்கு பிரம்மா ஆற்றிய வேள்வியின் ஆஹுதிகளை நேரடியாக தெய்வங்கள் ஏற்று அருளியமையாலும் சுயநலப் பிரார்த்தனை அல்லாது பிற ஜீவன்களின் க்ஷேமத்திற்காக கஞ்சனூரில் ஆற்றும் ஹோமம் குறிப்பாக பலாஸ (புரச) ஸமித்து ஹோமம் ஆயிரம் மடங்கில் பலன் தருவதாம்.

❁ **காஞ்சிபுரம்**, மன்னார்குடி - திருவாரூர் இடையே **வேள்விக்குடி, கஞ்சனூர்,** சென்னையில் **வேளச்சேரி,** ஆவுடையார் கோயில் - பொன்பேத்தி அருகே **வேள்வரை**

போன்றவை பன்மடங்கில் பலன் தரும் வேள்வி சக்தித் தலங்களாம். ✵

மஹான் ஹரதத்தருக்கு அகஸ்திய மஹாபிரபு தரிசனம்

✵ மஹான் ஹரதத்தர் பற்றி ஸ்ரீஅகஸ்திய விஜயம் ஜனவரி 2002, நவம்பர் 2013 இதழ்கள் உள்ளிட்டுப் பல இதழ்களில் அளித்து வந்துள்ளோம். சூரிய கிரணங்கள் பற்றிய யோகப்ரகாச விளக்கங்களில், யோகாப்யாசத்தில் கரை கண்ட முனிவர்களுள் யாக்ஞவல்கியர், 63000 வாலகில்ய மஹரிஷிகளோடு மஹான் ஹரதத்தரும் இடம் பெறுகிறார்.

✵ முதுமையின் தள்ளாமையால் ஹரதத்தரால் தினமும் ஏழு சிவத்தலங்களுக்கும் செல்ல இயலாது போனது. இந்நிலையில் இறைவனே அகஸ்திய மஹரிஷியைக் கொண்டு ஏழு லிங்கங்களை ஹரதத்தரின் இருதயாகாசத்தில் மானசீக மனோலயப் பிரதிஷ்டை செய்து வழிபடும்படி ஆற்றித் தந்தார். இவ்வாறாக அகஸ்தியர் மஹாபிரபுவின் தரிசனமும் ஆத்மநாத ஹ்ருதயப் பிரதிட்டையும் ஹரதத்தருக்கு வைகாசி மாதத்தின் ஆயில்ய நட்சத்திர நாளில் கிட்டியது.

✵ இவ்வகையில் தன் ஹ்ருதயாத்ம ஜோதிலிங்க ஆராதனையை ஹரதத்தர் அந்தர்முக வழிபாடாக, உள்முகப் பூஜையாகக் கொண்டார். முதிய காலத்திலும் தினமும் மூன்று வேளைகளிலும் அக்னீஸ்வரரை வழிபட்டார். கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில் அருகிலேயே ஹரதத்தரின் இல்லம் இருந்தமையால் – தீ முக்காலி வைபவத்தின் போது ஈஸ்வரனார்



ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் உற்பவித்துத் தந்த சிவலிங்க ஆராதனையையும் ஆற்றி வந்தார். ஒவ்வொருவரும் புறமுக பூஜையாக உருவ வழிபாட்டையும், அகமுக பூஜையாக தன்னுள் ஆத்மாவாக வீற்றிருக்கும் இறைவனையும் வழிபட வேண்டிய அவசியத்தையும் இது குறிப்பதாம். கோயில் தரிசனத்தில் இறுதியில் சற்றே ஓரிடத்தில் ஆலயத்தில் அமர்ந்து வரும் தாத்பர்யமும், சாங்கிய வழக்கமும் இது கருதியே.

✵ இத்தகைய பஹிர்முக, அகமுக இரு வழி வழிபாடுகளை ஆற்றி வந்த மஹான் ஹரதத்தர், தாம் தினமும் ஏழு சிவத் தலங்களுக்குமான நித்யதரிசனப் பலன்கள், முதுமையில் பாதயாத்திரை செய்ய இயலாது தம்முள் நிதமும் தரிசித்து மானசீகமாக ஆராதித்த சப்தலிங்கங்களின் பூஜா பலன்கள் பலவற்றையும் இத்தலத்தில் வழிபடும் பக்தர்கள் பெறும் வண்ணமாக கஞ்சனூர் சிவாலயத்திலும், ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில் சிவலிங்கத்தின்பாலும் அர்ப்பணித்துள்ளார். **திருக்கோடிக்காவல், திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர்** ஆகியவை இவ்வேழு தலங்களாம்.

✵ இதன் காரணமாக முற்காலத்தில் ஹரதத்தர் சப்தஸ்தான ஏழு சிவத்தலங்களில் வழிபடுபவர்கள் இறுதியில் கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தில் தரிசனத்தை நிறைவு செய்து பிறகு கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் ஆலயத்தின் சிவலிங்கத்தையும் தரிசிப்பதையும் முக்கியமானதாகக் கடைபிடித்தார்கள்.

✵ முதுமை, இயலாமை, தள்ளாமை, நோய் போன்ற பல காரணங்களால் ஏழு தலங்களுக்கும் பாதயாத்திரையாகச் செல்ல இயலாதவர்கள், கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயத்தில் வழிபட்டு, இங்கு ஸ்ரீராஜ நாராயண பெருமாள் ஆலயத்தின் சிவலிங்கத்தை வழிபடுவதன் மூலம் ஏழு சிவத்தலங்கள் யாத்திரைப் பலன்கள் பலவற்றை மஹான் ஹரதத்தர் அர்ப்பணித்தபடியாக குருவின் (ஆசான்) மூலம் ஈசன் அருள்கின்றார்

✵ பக்தர்களுக்காக அன்புமிக்க காருண்யமாகிய வாத்ஸல்யத்துடன் தோன்றிய கஞ்சனூர் பெருமாள் கோயில் லிங்கத்தை காஞ்சி மஹாசுவாமிகள் வழிபட்டுள்ளார். பக்தி, ஆழ்ந்த நம்பிக்கையுடன் கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயில், கஞ்சனூர் பெருமாள் கோயில் லிங்கத்தை பக்தியுடன் வழிபட்டு வந்தால் ஹரதத்தர் சப்தஸ்தான வழிபாடு எனப்படும் ஏழு சிவத்தல பாதயாத்திரைப் பலன்கள் பலவற்றை குருவருளால் பெறலாம். ✵

கஞ்சனூர் தலத்துடன் புராணப் பிணைப்புடைய கீழ்சூரியமூலை சூர்யகோடீஸ்வர சிவாலயம்

✵ கஞ்சனூர் அருகே **கீழ்சூரிய மூலை** என்னும் சிவத்தலத்தில் சூர்யகோடீஸ்வர மூர்த்தி அருள்கின்றார். இத்தலத்தின் மகத்துவத்தைக் கடந்த 25 ஆண்டுகளில் ஸ்ரீஅகஸ்திய விஜயம் இதழில் பன்முறை அளித்து வந்துள்ளோம்.

✵ தினமும் உலகெங்கும் நம் பூமியின் பரப்புக்குக் கிட்ட வேண்டிய சூரிய ஒளியை நிர்ணயித்துத் தரும் சூரியகோடிப் பிரகாசமூர்த்தி. சூரிய பகவான் கீழ்சூரிய மூலைத்தலத்தைத் தம் நித்தியப் பிரதோஷ வழிபாட்டுத் தலமாக ஏற்று வழிபடுகிறார்.

✵ கஞ்சனூரில் மஹான் ஹரதத்தருக்காக வந்தேகிய திருக்கயிலைச் சிவரதம், பல கோடி சூரியப் பிரகாசத்துடனும், நம் பூமியைப் போன்று பல மடங்கு எடை உள்ளதாகவும் இருந்தது. சர்வேஸ்வரன் கீழ்சூரிய மூலை தளத்தில் வான்பரவெளியில் மஹாசிவரதத்தை நிலை கொள்ளச் செய்து அதன் பிரகாசம், எடையை பூமி தாங்கும் அளவில் கனியச் செய்து கஞ்சனூர் திருத்தலத்திற்கு அனுப்பி வைத்த மஹிமையும் கொண்ட சூரிய சக்தி தளம் இது. கண்பார்வை விருத்தி, கண்நோய் நிவர்த்திக்கும் வழிபட வேண்டிய தலம் கீழ்சூரியமூலை.

✿ கண்துறை மருத்துவர்கள் தம் துறையில் மேன்மை கீர்த்தி, உயர்கல்வி பெறுதற்கு இத்தலத்தில் ஞாயிறு, அஸ்வினி, சஷ்டி போன்ற மருத்துவ சக்தி நாட்களில் அடிக்கடி வழிபட்டு வர வேண்டும்.

ஆண்டு முழுதும் கொண்டாடப் பெற வேண்டிய ஹரதத்தரின் விமுக்தி குருபூஜை (9.2.2019 முதல் 29.1.2020 வரை)

✿ குருபிரான்கள் முக்தியுற்ற அதே தமிழ் ஆண்டின் அதே திதித் திருநாள் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு அதே தமிழ் ஆண்டில் வரும் போது, இந்த விமுக்தி நன்ஞூளீ - **பரிசரா கபீர பிபர்த்தம்** என்பதாகவும் சித்புருஷர்கள் தமக்கே உரித்தான ஆன்மசக்திப் பரிபாஷையில் போற்றி உரைப்பர். பெரும்பாலும் நம் வாழ்நாளில் ஒரு முறையே எந்த ஒரு மஹானின் **ஷஷ்டிதமாப்த விமுக்தி குருபூஜை** இவ்வாறு வரும்.

✿ ஆயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் விமுக்தி தமிழ் ஆண்டில் திருக்கயிலாத ரதமேறி முக்தி பெற்ற ஹரதத்தருக்கான **ஷஷ்டிதமாப்த விமுக்தி குருபூஜை** (9.2.2019), தற்போது நடப்பு விளம்பி தமிழ் ஆண்டுக்கான வருடாந்திர குருபூஜை நாளில் வருவதும் நம் வாழ்வில் பெரும் பாக்யமே.


✱ இந்த ஹரதத்தர் விமுக்தி குருஆராதனையை - காவேரி மஹாபுஷ்கரம், தாமிரபரணி மஹாபுஷ்கரம் போல் - 9.2.2019 முதல் 29.1.2020 வரை ஓராண்டு முழுதும் கொண்டாடுதல் புனிதமானது. இவ்வாறே முற்காலத்தில் ஒவ்வொரு மஹானுக்குமான விமுக்தி குரு பூஜையையும் அந்த ஆண்டு முழுதும் புனிதமாகக் கொண்டாடி வந்தனர்.

✱ ஆகவே இந்த ஓராண்டுக் காலம் முழுதும் கஞ்சனூரில் ஸ்ரீஅக்னீஸ்வரர் சிவாலயம், ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில், ஸ்ரீஹரதத்தருக்கான தனி சன்னதிக் கோயில் ஆகிய மூன்றிலும் உள்ள ஹரதத்தர் சன்னிதியிலும் குடும்பத்தோடு அடிக்கடி வழிபட்டு வருதல் விசேஷமானது. இஃதோடு ஹரதத்தர் சப்ஸ்தானத் தலங்களாகிய திருக்கோடிக்காவல், (தென்)திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர் ஆகிய ஏழு ஆலயங்களில் உள்ள ஹரதத்தர் சன்னிதியிலும் தக்க பூஜை, ஆராதனையோடு வழிபட்டு வர வேண்டும். ✱

ஓம் ஸ்ரீ குருவே சரணம்

விளம்பி தமிழ் வருடம் மாசி மாதப்பிறப்பு
விஷ்ணுபதி: 13.2.2019 புதன் கிழமை
விஷ்ணுபதி தலம்: கஞ்சனூர்
ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில்


ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவரதராஜ மூர்த்தி,
கஞ்சனூர் பெருமாள் கோயில்


கஞ்சனூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயில்


கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயிலில் ஹரதத்தர்


கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள் கோயில


அசோகமரம் - கஞ்சனூர் பெருமாள் கோயில் தல விருட்சம்


கஞ்சனூர் ஸ்ரீஹரதத்தர் தனிக்கோயில்

அரசிவ நாமம் உருகிடப் பேணீர்!"

விளம்பி தமிழ் ஆண்டு மாசி மாதப்பிறப்பு விஷ்ணுபதி உற்சவ ந
13.2.2019 புதன் கிழமை
விஷ்ணுபதி உற்சவ ஆலயம்: கஞ்சனூர் ஸ்ரீராஜநாராயணப் பெருமாள்

✿ நம் வாழ்நாளில் அபூர்வமாக அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை விளம்பி தமிழ் ஆண்டில் மட்டுமே வரும் கஞ்சனூர் மஹான் ஸ்ரீஹரதத்தரின் விமுக்தி குருபூஜை (9.2.2019). ஓராண்டுக்கு நிரவும் அபூர்வமான ஹரதத்தர் விமுக்தி குரு பூஜைக் காலம்: 9.2.2019 முதல் 29.1.2020 வரை

சக்ர கிரஹ ஸ்தலமாகப் பிரசித்தி பெற்றுள்ள கஞ்சனூரில் சுதர்ஸன விஷ்ணு அம்சத்துடன் தோன்றிய மஹான் ஹரதத்தர் எண்ணற்ற இறைச் சமுதாயத் தொண்டுகளை ஆற்றியவர். பாமரர் முதல் யாவர்க்கும் எளிய பக்தி வழியைச் சமுதாயத்தில் புகட்டியவர். ஹரதத்தருக்காக சர்வேஸ்வரனே அனுப்பி கஞ்சனூரின் திருவீதிக்கே வந்தேகிய மஹாரதத்தில் மஹான் ஹரதத்தர் புக்கும் கைலாஸ கமன வைபவத்தையும் - ஐந்து வயது பாலனும் ஹரதத்தரின் உபநயன வைபவத்தில் ஈஸ்வர, ஈஸ்வரீ மூர்த்திகளே நேரில் வந்து ஹரதத்தருக்கு முப்புரி நூல் சார்த்தி அருளிய அனுபூதியையும் இங்கு தரிசிக்கின்றீர்கள். அருகில் மஹாராஜா கோலத்தில் குபேர மூர்த்தி.

✱ ஒவ்வொரு மஹானும் முக்தி பெற்ற நாளில் வருவது வருடாந்திர குருபூஜை. மஹான் முக்தி பெற்ற திதி தினமானது, அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு அதே தமிழ் ஆண்டில் வரும் போது, இதுவே விமுக்த குருபூஜை. இதனை சஷ்டிதமாப்த குரு ஜெயந்தி, பரிசரா கபீர பிபர்த்தம் குரு ஆராதனை வைபவமாக முற்காலத்தில் ஒரு வருட காலத்திற்கு அனுசரிப்பர். சுமார் 1150 ஆண்டுகளுக்கு முன் விளம்பி தமிழ் ஆண்டின் தை மாதம் சுக்ல பட்ச (வளர்பிறை) பஞ்சமி திதித் திருநாளில், மஹான் ஸ்ரீஹரதத்தர் கோடி சூர்யப்ரகாச புஷ்ப மஹாரதத்தில் ஏகி கைவல்ய முக்தி உற்ற வைபவம் கனிந்தது. இதன்படியாக மஹான் ஸ்ரீஹரதத்தரின் ஷஷ்டிதமாப்த விமுக்தி குருஆராதனை உற்சவம் - நடப்பு விளம்பி தமிழ் ஆண்டின் தை மாத சுக்ல பட்சப் பஞ்சமி திதியில் (9.2.2018 சனிக்கிழமை) - கஞ்சனூர் மற்றும் ஏனைய தலங்களில் நடைபெறுகிறது. குடும்பம், உற்றம், சுற்றத்தோடு பங்கேற்று குருவருளுக்குப் பாத்திரமாகவும். காவேரி மஹாபுஷ்கரம் போல், 9.1.2019 முதல் 29.1.2020 வரை ஒரு வருட விமுக்தி குருபூஜைக் காலம்.



மஹான் ஹரதத்தருக்காக

ஆன்மீகத்தில் வழிவழியாய் வாழு